பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 14 வெள்ளிக்கிழமை (30.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 246

# வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு உதவ புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தயாராம்

## கே.பியின் செல்வாக்கு அதற்குக் காரணம் என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஜூலை 30



**வடக்கு - கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தயாராகிவிட்டதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

**விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் அனைத்துலகத் தொடர்பாளரும், பின்னர் அந்த அமைப்பின் தலைவராக அறிவிக்கப்பட்டவருமான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனே புலம் பெயர் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவையும் செல்வாக்கையும் அரசுக்குப் பெற்றுக்கொடுத்தவர் என்றும் அமைச்சர் கூறினார்.**

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், ''புலம்பெயர் தமிழ்ச் சமூக அமைப்புகளில் ஒருசில புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றன.'' - என்றார்.

''கே.பி. எனப்படுகின்ற குமரன் பத்மநாதன் புலிகளின் சர்வதேச நிதி சேகரிப்பாளராகச் செயற்பட்டவர். ஆனாலும் இன்றைய நிலையில் அவருடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு வடக்கில் அபிவிருத்தியை மேற்கொள்வது சிறந்தது என அரசு எண்ணுகிறது'' என்றும் அமைச்சர் தெரிவித்தார் .

''விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தில் பல்லாயிரக்கணக்கானோர் தடுப்பு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள சமயத்தில், முக்கிய புலி உறுப்பினரான கே.பி. சுதந்திரமாகச் செயற்பட அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளார். சட்டத்தின் முன் அனைவரும் சமம்

(24ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அதிகாரியின் வருகையில் எவ்வித ஒளிவு மறைவுமில்லை!

கொழும்பு, ஜூலை 30

இலங்கை நிலைவரம் குறித்து ஆய்வு செய்வதற்காக இந்திய அரசின் சிறப்புப் பிரதிநிதியொருவர் இலங்கை வரவிருப்பதில் எவ்வித ஒளிவு மறைவுமில்லை - என்று அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

நேற்றைய அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி

(24ஆம் பக்கம் பார்க்க)

## தடுப்பு முகாம் புலிகளிடம் கைத்தொலைபேசிகள் மீட்பு

கொழும்பு, ஜூலை 30

மன்னார் மருதமடுப் புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலி சந்தேக நபர்களிடம் இருந்து பதினேழு கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உதய மெதிவெல நேற்று இதனை உறுதிப்படுத்தினார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் பதிவு; இறுதி நாள் நாளையே

யாழ்ப்பாணம், ஜூலை 30

பொதுமக்கள் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யும் தினம் நீடிக்கப்படவில்லை என்றும் ஜூலை 31 ஆம் திகதியான நாளை சனிக்கிழமையே வாக்காளராகப் பதிவு செய்யும் இறுதி நாள் என்றும் யாழ். தேர்தல் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிராமசேவகர்கள் தமது வாக்களர் பதிவுப் படிவங்களை பூரணப்படுத்தி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை தம்மிடம் வழங்க முடியும் என்றும் அவர் தெரி வித்துள்ளார். (ஒ-6)

(மற்றைய செய்தி மூன்றாம் பக்கத்தில்)

## கப்பல் அகதிகளின் உரிமையை கனேடிய அரசு மதிக்க வேண்டும்

### மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை

கனடா, ஜூலை 30

கனடா நோக்கி வந்துகொண்டிருக்கும் தாய்லாந்து சரக்குக் கப்பலான 'சன் சீ' கப்பலில் பயணிக்கும் இலங்கைத் தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகளை கனேடிய அரசு மதித்து நடக்க வேண்டும் என கனடாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மூன்று மனிதாபிமான அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

தாய்லாந்து சரக்குக் கப்பலான 'எம்.வி. சன் சீ' என்ற கப்பல் 219 பயணிகளுடன் கனடாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இரண்டு தினங்களுக்கு முன்னர் இக்கப்பல் கனடா, வான்கூவரை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் 205 இலங்கைத் தமிழர்க

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் விரல் ரேகை பதிய கொழும்பு நீதிமன்றம் நேற்று உத்தரவு

கொழும்பு, ஜூலை 30

இறுதிக் கட்டப் போரில் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த புலிகளின் தலைவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு ஜெனரல் சரத் பொன்சேகா பேட்டியளித்தது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு

(24ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் கொலையுண்ட ஊடகவியலாளர்கள் குறித்து இதுவரை தமக்கு தகவல்கள் கிடைக்கவில்லையாம்

### இங்கிருந்து சென்ற ஊடகக் குழுவிடம் அமைச்சர் கெஹலிய

கொழும்பு, ஜூலை 30

வடக்கில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் படுகொலைகள் தொடர்பான தகவல்கள் ஊடாக அமைச்சுக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக எதுவும் கிடைக்கவில்லை. அவ்வாறு தகவல்கள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக ஆராயப்படும்.

இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் மல்வத்த பீடாதிபதி

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட மல்வத்த பீடாதிபதி வண. திப்பட்டுவாவே சுமங்கல தேரர் 1,500 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் கொண்ட பொதிகளை வழங்கினார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில் வைத்து வடமராட்சி, தென்மராட்சி கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## சீன நிபுணர்களும் வருகிறார்கள் வட, கிழக்கில் கண்ணிவெடி அகற்ற

கொழும்பு, ஜூலை 30

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக சீனாவில் இருந்து குழுவொன்று இலங்கை வரவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீன இராணுவ அதிகாரிகள் உள்ளடங்கும்

(24ஆம் பக்கம் பார்க்க)

SEC
Standard Educational Consultancy
"Your Future Guide"

IELTS இல்லாமல் August 12 ஆம் திகதிக்கு முன்பாக
UK Student Visa விண்ணப்பிப்பதற்கான
இறுதி சந்தர்ப்பம்
13 நாட்கள் மட்டுமே
100% வீசா உத்தரவாதம்

* குறைந்த தகுதி O/L மட்டுமே
* ஒரே நாளில் கல்லூரி அனுமதிப்பத்திரம் (CAS)
* Sponsor வசதிகள்
* பயண ஏற்பாடுகள் அனைத்தும் செய்துதரப்படும்

தொடர்புகளுக்கு
0777 919293
0777 929394
0112 363739

யாழ் நகரில் வீரசிங்க மண்டபத்தில் 01.08.2010 அன்று இலவச கருத்தரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 30.06.2010 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தெய்வம் முதுபெறும் அறிஞர் உயர்திரு.

**சரவணமுத்து இராசரத்தினம்**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (30.07.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பமும் வருகை தந்து அன்றைய தினம் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வித்தியாலய வீதி, சிவபுரம்,
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்

# ஆள்கள் தேவை

பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.
தகைமையுடையவர்கள் நேரில் வரவும்.

1) சமையல்காரர் 2) சமையல் உதவியாளர்
3) ரீமேக்கர் 4) வெயிட்டர்

உணவு, தங்குமிட வசதியுண்டு.

ஸ்ரீ தாமோதர விலாஸ்,
401, 403, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/569558)

## Dr. செல்லத்துரை பரமசிவம்பிள்ளை D.A.M.(Cey)

அவர்களின்
பாரம்பரிய சித்த வைத்திய
அணுகுமுறையும் அனுபவங்களும்
ஓர் ஆய்வு

# நூல் வெளியீட்டு விழா அழைப்பு

வாதரோகம் - பாகம் 1. சுளுக்கு

இடம் : சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம், கைதடி.
காலம் : 01-08-2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : முற்பகல் 10 மணி

தலைவர் :
Dr. சிவஞானமணி பஞ்சராசா அவர்கள்
(தலைவர், சித்த மருத்துவத்துறை, கைதடி)

பிரதம விருந்தினர் :
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள் :
திரு. பி.ஜோன்சன் அவர்கள்
(உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், வடமாகாணம்)
திருமதி Dr.சி.துரைரத்தினம் அவர்கள்
(மாகாண சுதேச மருத்துவ பணிப்பாளர், வடமாகாணம்)
பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி அவர்கள்
(சித்த மருத்துவத்துறை, கைதடி)
பேராசிரியர் க.சிவானந்தமூர்த்தி அவர்கள்
(துறைத்தலைவர், தத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
Dr. திருமதி சிவசண்முகராஜா பிரேமா அவர்கள்
(வைத்திய பொறுப்பதிகாரி, அரசினர் சித்த போதனா வைத்தியசாலை, கைதடி)
Dr. பொன். இராமநாதன் அவர்கள்
(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, கைதடி)
Dr. திருமதி க.பரமசிவம் அவர்கள்
(அதிபர், லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, சுன்னாகம்)

## நிகழ்ச்சி நிரல்

* மங்கள விளக்கேற்றல்
  வரவேற்புரை : Dr. கு.கணநாதன்
  (முகாமைப்பணிப்பாளர், யாழ் மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம்)
* ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
  (நல்லை ஆதீனம்)
* தலைமையுரை
* பிரதம விருந்தினர் உரை
* சிறப்பு விருந்தினர் உரை
* நூல் அறிமுக உரை : Dr. செ.சிவசண்முகராஜா
  (சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, கைதடி)
* அறிமுக உரை : செல்வி சுஜி ஜீவகன் (குடும்ப உறுப்பினர்)

நூல் வெளியீடு

முதற்பிரதி பெறுபவர்கள் : திரு. சண்முகவடிவேல் ஜீவகன்
திரு. முத்துலிங்கம் சிவதாசன்

சிறப்புப் பிரதி வழங்கல்

ஆய்வுரை :
Dr. பூ.உரோ மகேஸ்வரன்
(முன்னாள் வடகிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர்)
Dr. சி. கதிரவேல்பிள்ளை M.B.B.S
(ஓய்வுபெற்ற மாவட்ட வைத்திய அதிகாரி, பருத்தித்துறை)
சாகித்திய ரத்னா
கலாநிதி செங்கை ஆழியான் (க.குணராசா)

பதிலுரையும் நன்றியுரையும் : நூலாசிரியர்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

இங்ஙனம்
நூல் வெளியீட்டு விழாக்குழு

(சி/569554)

# உயர் வகுப்பு மாணவருக்கு சித்திரப் பாட வினாத்தாள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். கந்தர்மடம், ஆத்திசூடி வீதியில் உள்ள ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனம் 2010 பரீட்சைக்குத் தயாராகும் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்காக சித்திரப் பாட மாதிரி வினாத்தாள் ஒன்றை www. iatart. webs.com என்ற இலவச இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளது. (ஒ)

# திறந்த பல்கலை கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

இலங்கை திறந்த பல்கலைக்கழக பொது ஆங்கில கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தரமதிப்பீட்டுப் பரீட்சை நாளை சனிக்கிழமை முற்பகல் 10 தொடக்கம் 12 மணிவரை இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் இடம்பெறும் என்றும் -

பொதுச் சிங்களச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விரிவுரைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இலங்கை பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் இடம்பெறும் என்றும் அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-323)

# நூலகத் திறப்புவிழாவும் புத்தகக் கண்காட்சியும்

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி முருகானந்த மகா வித்தியாலய நூலகத் திறப்பு விழாவும் புத்தகக் கண்காட்சியும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கண்டாவளைப் பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) கி.சின்னராசாவும், கௌரவ விருந்தினர்களாக கண்டாவளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் வீ.இராஜகுலசிங்கம், ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-16)

# வண.பிதா. மதுரநாயகம் கொழும்பில் காலமானார்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபர் வண.பிதா. ரி.ஏ.ஜே. மதுரநாயகம் நேற்றுமுன்தினம் கொழும்பில் காலமானார்.

1966ஆம் ஆண்டில் இருந்து 1976ஆம் ஆண்டுவரை அதிபராகப் பணியாற்றி வந்தார். அவரது பூதவுடல் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ். வலய அதிபர்களுக்கான விசேட கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 30

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள டெங்கு ஒழிப்பு சிரமதானம் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் இன்று முற்பகல் 9 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்திற்கு யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-16)

## தேவை

கணனி திருத்துநர், TYPYING தெரிந்தவர் தேவை.
தொடர்பு :-Sky Computer (Pvt.) Ltd.,
162, main street, Jaffna.
T.P. 0212221417

## HERO STREAM விற்பனைக்குண்டு

பெண்ணின் பாவனையிலுள்ள நீலநிற HERO STREAM மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 0789369185
0729585887

## பொருளியல் கல்லூரி யாழ்ப்பாணம்

A/L - 2010 வழிகாட்டல் கருத்தரங்கு
அரசியல் மூலதத்துவங்கள்
ஆசிரியர் :- திரு. கோகுலன்

ஆரம்பம் நேரம்
02.08.2010 திங்கள் 9-12 மணிவரை
வினாத்தாள் - I
03.08.2010 செவ்வாய் 9-12 மணிவரை
வினாத்தாள் - II
(கையேடுகள் வழங்கப்படும்)
கட்டணம் 120/-
உங்கள் [illegible] பெற்றுக்கொள்ளவும்.

## JOB Guaranteed "Certified Medical Assistant"

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்திய சாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை **லாவா வைத்தியசாலையில்** சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகப் பெற்றிடுங்கள்.




**மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி**

கல்வித்தகமை: G.C.E O/L நாலு பாடங்களில் சித்தி
காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)
தெரிவு : நேர்முகத் தேர்வு மூலம் அனுமதி.

M.B.B.S வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.

உள்ளகப்பயிற்சி வழங்குவோர்: Lava Hospitals
சான்றிதழை இணைந்து வழங்குவோர்: KNOWLEDGE UNIVERSE® Malaysian Soft Skills and ICT Development Centre

Tel: 0212224333 |# 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் பத்து ஆண்டுகள் (1966-1977) அதிபராகக் கடமையாற்றி 27.07.2010இல் இறைபதமடைந்த

**வண.பிதா. T.A.J. மதுரநாயகம்**

அடிகளாருக்கு எமது கண்ணீர்த்துளிகளைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள்,
மாணவர்கள்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/569555)

# துயர் பகிர்கின்றோம்

எமது சக ஊழியர் திருமதி சுகந்தி விக்னேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் சிவகுருமூர்த்தி தனபாலசிங்கம்**


அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர், உற்றார், உறவினர்களின் ஆறாத்துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்
ஹற்றன் நஷனல் வங்கி,
பருத்தித்துறை.

(சி/569558)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04 ★ 06 ★ 1928



மறைவு
22 ★ 07 ★ 2008

**அமரர் ஆறுமுகம் சிவகுரு**

(7ஆம் வட்டாரம், மண்டைதீவு)

எம் இதய தெய்வமே!
என்றென்றும் - உங்கள்
இனிய நினைவுகள் - எம்
இதயங்களில் நிறைந்திருக்கும்
குடும்பத்தின் ஒளிவிளக்கே! - எமைப்பிரிந்து
இரண்டாண்டுகள் கடந்தபோதும்
எம் நெஞ்சங்களின் வேதனைகள்
தீரவில்லை ஐயா! தீரவில்லை.....

நாச்சிமார் கோயிலடி,
நவாலி வடக்கு.

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(101276)

# மரண அறிவித்தல்

## Dr. சதாசிவம் சதானந்தன் (சுது)



யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.சதாசிவம் சதானந்தன் 25.07.2010 இங்கிலாந்தில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் கந்தர் மடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் காலஞ்சென்ற பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் லலிதாவின் அன்புக் கணவரும் டிலக்ஷினி, நிரஞ்சனி, தர்ஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மார்க், நிக், கெவின் ஆகியோரின் அன்பு மாமனாரும் லஷ்மி, அருண், ஒளி, லவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ராஜேஸ்வரி, ராஜகாரியர், புவனேஸ்வரி-துரைராஜா, மகேஸ்வரி-பரமநாதன், காலஞ்சென்ற சபாநடேசன், காலஞ்சென்ற பரமேஸ்வரி, ஆறுமுகம் மற்றும் திலகேஸ்வரி, அருளம்பலம், காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் சரோஜினி, துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவதாசன், ஜெகதீசன், நந்தினி(ராஜி), ஸ்ரீகாந்தா, ரேணுகா ஸ்ரீ குமரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (01.08.2010) ஞாயிற்றுக்கிழமை டார்லிங்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-
*24, Lazenby Grove, Mowden Park,*
*Darlington. U.K.* T.P. 00441325481831

தகவல்:
குடும்பத்தினர்.

(101365)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அமைச்சர்களின் தூது ஏற்புடையதா?

நாட்டின் அரசமைப்புச் சட்டத்தில் நல்லாட்சிக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் ஒவ்வாத, தூக்கி வீசப்பட வேண்டிய அம்சங்கள் பல அடங்கியுள்ளன. அவற்றைத் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று நீண்ட காலமாகப் பல தரப்புகளாலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

உலக நாடுகள் பலவும் இந்தத் தவிர்க்க முடியாத தேவையை தெரிவித்து வந்துள்ளன; வருகின்றன. குறிப்பாக நிதி உதவி வழங்கும் நாடுகளும் அபிவிருத்திக்கு உதவும் நாடுகளும் நல்லாட்சியை விரும்பும் நாடுகளும் இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கி, மக்கள் நல்வாழ்வுக்கும், சுதந்திரத்துக்கும் உதவும் விதத்தில் அவை மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்து வருகின்றன. அரசாங்கம் இப்போது அரசமைப்புத் திருத்தத்தில் திடீர் கவனமும் செலுத்துவதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

அதன் ஓர் அங்கமாக, அரசின் மூத்த அமைச்சர்கள், இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நாடுளுக்கு விஜயம் செய்து அரசின் செயற்பாடுகளை விளக்கி வருகின்றனர். இந்த வகையில் அமைச்சர்கள் ஜி.எல். பீரிஸும், பசில் ராஜபக்ஷவும் ஜப்பானுக்குச் சென்றுள்ளனர்.

இலங்கை அரசுக்கு அதிக நிதி உதவி வழங்கும் நாடுகளில் ஜப்பான் முன்னிலை வகிக்கிறது. அந்த நாட்டு அரசியல் பிரதானிகளுடனும் உயர் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாக நாட்டின் அபிவிருத்திக்கும் நிதித் தேவைக்கும் உதவுவதற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாஷியைத் திருப்திப்படுத்தினால் அவர் ஊடாகப் பெருந்தொகையான நிதி உதவியைப் பெறமுடியும். அதனால் இலங்கை அமைச்சர்கள் இருவர் தூதுக்குழுவாகச் சென்று அவருடன் பேச்சு நடத்தி வெற்றியும் கண்டுள்ளனர்.

மக்கள் நலன் நாடிய பணிகளில் தாம் அக்கறை கொண்டிருப்பதாகவும் முதலில் ஏனைய கட்சிகளின் ஆதரவோடு அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக இங்கிருந்து ஜப்பான் சென்ற அமைச்சர்கள் விவரித்திருக்கின்றனர். அவை குறித்து அகாஷி திருப்தி தெரிவித்திருக்கிறார்.

மக்கள் நலனுக்கும் நல்லாட்சிக்கும் உதவும் வகையில் அரசாங்கம் உண்மையாகவும், உணர்வு பூர்வமாகவும் செயற்பட்டால் அமைச்சர்கள் விழுந்தடித்துக் கொண்டு ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் காவடி எடுக்கத் தேவையிராது. ஜனநாயக அம்சங்கள் - பண்புகள் - அடங்கும் அரசமைப்புச் சட்டத்தையும், மக்களுக்குரிய உரிமைகளை அப் பழுக்கின்றி, அவர்களின் நலன் நாடியே வழங் கும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தினால், அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் சென்றுதான் அபிவிருத்திக்கான பணம் பெற வேண்டும் அல்லது இயலும் என்பதல்ல.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைத் தனது கைக்குள் போட்டுக் கொண்டு கருமமாற்றத்தொடங்கியுள்ள அரசாங்கம், அந்தப் பேச்சுக்கள் முற்றுமுழுதாக வெற்றி அளித்திருப்பதால் போலும், அவசர அவசரமாக ஜப்பானுக்கும் மற்றும் நாடுகளுக்கும் அமைச்சர்களை தூதுக்கு அனுப்புகிறது என்றும் கருதலாம்.

அரசு - ஐ.தே.க. இணக்கம் கண்ட விடயங்களுக்கு ஏனைய கட்சிகள் ஆதரவு நல்குமா என்பது வெளிப்படையாகத் தெரிவதற்கு முன்னரே, வெளிநாடுகளுக்கு தூதர்களை அனுப்புவது இரண்டு தரப்பினரும் செய்த முடிவுகளை ஏனைய கட்சிகள் ஏற்கத்தான் ஆகவேண்டும் என்ற நிலைக்கு அரசு வந்துவிட்டது என்பதற்கான அறிகுறி எனலாம்.

இது ஏற்புடையதல்ல. ஜனநாயகம் என்பது வெறும் பெரும்பான்மை முடிவை மட்டும் கொண்டதல்ல. சகல தரப்பினருடனும் கலந்துரையாடி ஆலோசனை பெற்று மேற்கொள்ளும் முடிவுகளே நிலையானவை. ஏனையவை எந்த நேரத்திலும் கரைந்து கசிந்தேகிவிடக் கூடியவை என்பதனை மறக்கக் கூடாது.

# தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் பங்கேற்குமாறு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்குக் கடிதம்

## இந்தியாவில் இருந்து திரும்பியதும் நேரில் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு ஒன்றிணைந்த தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பங்கேற்குமாறு அதன் தலைவர் இரா.சம்பந்தனுக்கு நேற்று அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஒன்று கூடிய தமிழ்க்கட்சிகளின் அரங்கத்தின் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கலந்துகொள்ள வேண்டும் என்று அனைத்துக் கட்சிகளும் விருப்பம் தெரிவித்தன.

எனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பைக் கலந்துகொள்ளுமாறு அழைப்புக் கடிதம் அனுப்புவதுடன், நேரில் சந்திப்பதற்கும் கட்சிகள் இணக்கம் தெரிவித்தன.

தற்போது இந்தியாவில் தங்கி இருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடு திரும்பியதும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் பங்கேற்குமாறு அவருடன் நேரில் சென்று கலந்துரையாட உள்ளதாகவும் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார். (த-6)

# வாக்காளர் இடாப்பில் பதிவதன் அவசியம்; வீடு வீடாகச் சென்று மக்களுக்கு விளக்கம்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழ் மக்கள் வாக்காளர் இடாப்பில் தம்மைப் பதிவு செய்வதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் வீடு, வீடாகச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆரம்பித்தனர்.

சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவில் தமது விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரிக்குச் சென்று பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கு விளக்கம் அளித்தனர்.

அத்துடன் பறாளாய், ஓடக்கரை, சங்கரத்தை, துணைவி, வழக்கம்பரை, கல்லூண்டாய் கரையோரப் பகுதி, நவாலி ஆகிய பகுதிகளில் உள்ள மக்களின் வீடுகளுக்கும் சென்றும் வாக்காளர்களாகப் பதிவு செய்வதன் அவசியம் குறித்துப் பல்கலைக்கழக மாணவர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட மாணவர்களாலும் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தச் செயற்பாட்டில் 45 மாணவர்கள் நேற்றையதினம் ஈடுபட்டிருந்தனர்.

ஒரே தேர்தல் மாவட்டமாக உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இவ்விழிப்புணர்வு செயற்பாடு தொடர்ந்தும் முன்னெடுக்கப்டவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை இந்தச் செயற்பாடு பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் உள்ள பிரதேச செயலகம் உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊடாக கிராம மக்களின் நிலை தொடர்பாக ஆராய்ந்து அவர்களின் ஆலோசனைகளுடன் மக்களின் இருப்பிடங்களுக்கு நேரில் சென்று விழிப்புணர்வு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மாணவர் பிரதிநிதியால் குறிப்பிடப்பட்டது.

யாழ். மனித உரிமை இல்லத்தின் ஆதரவுடன் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஒ- 14)

## பல்கலை பேராசிரியர்கள் அரசுக்கு கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 30

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் அடையாள வேலை நிறுத்தத்துக்கு உரிய பதில் அளிக்கப்படாமையால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டியேற்படும் என பல்கலைக்கழக பேராசிரியர் சங்கத் தலைவர் சம்பத் அமரதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமைக்காக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஒருநாள் சம்பளம் வெட்டப்படும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கை அப்பட்டமான அடிப்படை மனித உரிமை மீறலாகும் எனவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் உள்ள 13 பல்கலைக் கழகங்களில் கடமையாற்றும் சுமார் நான்காயிரம் விரிவுரையாளர்கள் கடந்த 27ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## சனி, ஞாயிறு தினங்களில் மின்வெட்டு அமுல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில், வீதி அகலமாக்கும் வேலைகளுக்காக உயர் அழுத்த மின் கம்பங்களை இடமாற்ற வேண்டி இருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்றும் -

மேலும் மின்விநியோக மார்க்கங்களில் அவசர பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளும் பொருட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய் மற்றும் காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, சரவணை, அல்லைப்பிட்டி ஆகிய தீவகப் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்றும் - மின்சார சபையின் யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 15 | 31.07.2010 |
| | சனிக்கிழமை |
| திதி | :பஞ்சமி |
| | பி.ப. 04.28 வரை |
| நட்சத்திரம் | : உத்திரட்டாதி |
| | மு.இ. 10.05 வரை |
| சுபநேரம் | : 03.03 - 04.33 |
| ராகுகாலம் | : 09.03 - 10.33 |

## சண்டிலிப்பாய் பகுதியில் மீளக்குடியமர்ந்தோருக்கு ரூபா 5000 கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூலை 30

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து சண்டிலிப்பாய் செயலகப் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது.

மீளக்குடியமர்ந்து இதுவரை இந்தக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு விரைவில் அதனை வழங்க வசதியாக சம்பந்தப்பட்டவர்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் ஏ.அன்ரன் யோகநாதன் அறிவித்துள்ளார். (எ-318-313)

# இறைவரித் திணைக்கள அலுவலகம் விரைவில் மார்ட்டீன் வீதிக்கு மாறும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வடபிராந்திய அலுவலகம் மிக விரைவில் யாழ்ப்பாணம், மார்ட்டீன் வீதியிலுள்ள கட்டடத்துக்கு இடம் மாற்றம் செய்யப்பட உள்ளது.

யாழ். வீரசிங்கம் கட்டடத் தொகுதியின் 3 ஆம் மாடியில் இந்தத் திணைக்களத்தின் வடபிராந்திய அலுவலகம் தற்போது செயற்பட்டு வருகிறது.

முதியவர்கள், ஊனமுற்றவர்கள், பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே அலுவலகத்துக்குச் சென்று தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

இதனைக் கருத்தில் கொண்டு அதற்கான தீர்வாகவே அலுவலகம் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக அலுவலகத்தின் பொறுப்பாதிகாரி. க.இராசையா தெரிவித்தார். (ஒ- 14)

# செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் பணிப் பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்

## யாழ். அரச அதிபரின் உறுதிமொழியை அடுத்து



யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரிந்துவரும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி மேற்கொண்டு வந்த பணி பகிஷ்கரிப்பை நேற்றுமுன்தினம் தொடக்கம் இடைநிறுத்திக் கொண்டனர்.

கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வந்த சுகாதாரத் தொண்டர்கள் கடந்த 29 ஆம் திகதி யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரைச் சந் தித்து தமது கோரிக்கைகள் அடங் கிய மகஜரைக் கைய ளித்தனர்.

அதனைப் பெற்றுக் கொண்ட யாழ். அரச அதிபர், இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் உரையாடி நிரந்தர நியமனத்துக் கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்ததைத் தொடர்ந்தே பணிப்புறக்கணிப்பை கைவிட்டுள்ளதாக சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை-

நிரந்தர நியமனம் வழங்கக் கோரிய மகஜரை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கடந்த 27 ஆம் திகதி சுகாதாரத் தொண்டர்கள் கையளித்திருந்தனர். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்

புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் விவரம்

தலைவர்:- சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்
உபதலைவர்கள்:- சிவஸ்ரீ யோ. பிரபாகரக் குருக்கள்
சிவஸ்ரீ பா.ஜோதீஸ்வரக் குருக்கள்
செயலாளர்:- சிவஸ்ரீ ச.ஸ்ரீகாந்தக் குருக்கள்
உபசெயலாளர்:- பிரம்மஸ்ரீ பா.சுந்தரராஜசர்மா
பொருளாளர்:- சிவஸ்ரீ வ.உமாசுதக்குருக்கள்

**நிர்வாக சபை உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| ★ சிவஸ்ரீ இ.விக்கினேஸ்வரக்குருக்கள் | பிரம்மஸ்ரீ ச.கணநாதசர்மா |
| ★ சிவஸ்ரீ வ.கைலாசராஜக்குருக்கள் | பிரம்மஸ்ரீ சோ. கேதீஸ்வரசர்மா |
| ★ சிவஸ்ரீ ப.சண்முகராஜக்குருக்கள் | பிரம்மஸ்ரீ ஜெ.மயூரன்சர்மா |
| ★ சிவஸ்ரீ ம. பிரசன்னரூபக்குருக்கள் | பிரம்மஸ்ரீ பிரகலாதசர்மா |
| ★ சிவஸ்ரீ சபா.சந்தனக்குருக்கள் | பிரம்மஸ்ரீ.திலகேஸ்வரசர்மா |

நேற்று 29.07.2010 வியாழன் நடைபெற்ற மஹாசபைக் கூட்டத்தில் மேற்கண்ட புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

புதிய குருபீடாதிபதியாக சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள் சபையினரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியம்.


## மாடி வீடு விற்பனைக்கு



அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் யாழ் - பருத்தித்துறை வீதியில் 3 பரப்புக் காணியில் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்கு உள்ளது. (முன் பகுதியில் 4 கடை கட்டக்கூடிய வசதியுள்ளது). விலை விபரம் நேடியாகப் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
தொலைபேசி இல:- 0213735135

(101274)


## கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி அவர்களின் அன்புத் துணைவர்

**கணேசலிங்கம் ரமேஸ்**


அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி. (சி/569564)

செயலாளரும்,
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்

### செல்லையா கதிர்காமு (முறிகண்டி மணியம்)



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி செல்லையா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-தெய்வானை தம்பதியரின் மருமகனுமாகிய செல்லையா கதிர்காமு (முறிகண்டி மணியம்) நேற்று (29.07.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, சின்னத்தங்கம் ஆகியோரின் சகோதரனும் உதயகுமாரன், ஜெயக்குமாரன் (பிரான்ஸ்), விமலகுமாரன் (நோர்வே), அற்புதமலர், அற்புதராணி (கனடா), அற்புதலீலா, அற்புதலதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரஞ்சிதமலர், ஜெயராணி (பிரான்ஸ்), வனிதா (நோர்வே), அருணாசலம் (இ.போ.ச. சாலைப் பரிசோதகர்), சிறிகாந்தன் (கனடா), நவரத்தினம், கலைச்செல்வன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் அபிரா, அதிதரன் (பிரான்ஸ்), அபர்ணா (பிரான்ஸ்), ஆருதன் (நோர்வே), அம்புஜன் (நோர்வே), ஆரவி (நோர்வே) ஆகியோரின் அப்பப்பாவும் வனிதா, முஜிந்தா, சாரங்கன் (கனடா), சாந்தனா (கனடா), சாலவன் (கனடா), கோபிநாத் (கனடா), மாதங்கி, விசாகன், அங்கவின் (சுவிஸ்), வித்தகன் (சுவிஸ்) ஆகியோரின் அம்மப்பாவும் சிவகுமாரின் பேரனும் அறிவகன், அம்சனா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (101280)

தகவல்:
குடும்பத்தினர்.

## இலங்கை நூலக சங்க பொன்விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 30

இலங்கை நூலக சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு "நூலகங்கள் தகவலுக்கான வாய்ப்பினை வழங்கலும் மக்களை வலுவூட்டலும் என்னும் தொனிப்பொருளில் பிராந்தியக் கருத்தரங்கு யாழ்.பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று காலை 9 மணிக்கு இலங்கை நூலகச் சங்கத் தலைவர் உபாலி அமரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா பிரதம விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ம.வசந்தகுமார், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் மா. சின்னத்தம்பி ஆகியோரும் கலந்துகொள்வர். (ஒ-319)

## புதிய நிதி நிறுவனம் யாழ்.நகரில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.நகரில் இல.74, கன்னாதிட்டி வீதியில் 'ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட் மென்ட்ஸ் லிமிட்டெட்' என்ற நிதி நிறுவனம் திறக்கப்படுகின்றது.

இந்த நிறுவனத்துக்கான திறப்பு விழா எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.9.15 மணிக்கும் 10.15 மணிக்கும் இடைப்பட்ட சுபவேளையில் இடம்பெறும். (ஒ- 323)

## சந்நிதியில் தங்கியிருந்த முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

தொண்டைமானாறு, சந்நிதி கோயிலில் தங்கியிருந்த 83 வயதுடைய ஏ.பாலசிங்கம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அங்கு மரணமானார்.

நேற்று வியாழக்கிழமை மரணமடைந்த இவரின் உடல் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரதே அறையில் வைக்கப்பட்டுள்ளது. உறவினர்கள் அங்கு தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-323)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 20 ★ 12 ★ 1936

மறைவு 27 ★ 06 ★ 2010

**அமரர் வைத்திலிங்கம் விநாயகராஜா**

எமது குலவிளக்காய் இருந்து இறைபாதம் எய்திய எம் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்தும், வேண்டிய உதவி ஒத்தாசைகளை நல்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நாளை (31/07/2010) சனிக்கிழமை பகல் 11 மணியளவில், பம்பலப்பிட்டி அரசதொடர்மாடி நலன்புரி சங்க சனசமூகநிலைய மண்டபத்தில் அன்னாரின் ஆத்மசாந்தி நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
18. ரனஜெயகம, வைத்தியா றோட்,
தெகிவளை.
T.P : 112721156, 0777575872


## யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

# Diploma in Mobile Phone Repairing

## (Software & Hardware Repairing)

(பல புதிய விடயங்களுடன்)

(எமது இக் கற்கை நெறியை கற்பதன் மூலம் 100% நீங்கள் Mobile Phone இனை திருத்தி கொடுக்க முடியும்)

**Fees - Rs.6000/= Only**

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

வகுப்பு ஆரம்பம் - 31/07/2010 நேரம்12மணி

உங்கள் பதிவுகளை உடன் மேற்க்கொள்ளவும் !!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
19.02.1953

விண்ணில்
30.06.2010

திதி: சதுர்த்தி
30.07.2010

நாள்கள் எண்ணி இன்று
31 தினங்கள் கழிந்தனவே
இன்று போல் இருக்கிறதே அப்பா!
பதினான்கு ஆண்டுகள் வனவாசம்
இருந்து வந்தேன். ஆனாலும்
கடமை செய்ய முடியாத
பாவி நான். உங்கள் அன்பு
முகம் காணாத தம்பி பிரதீப்
தினமும் ஈர விழிகளுடன்
நாள்களைக் கழிக்கின்றான்.
மீண்டும் ஒருமுறை அவனுக்காய்
வருவீரே அப்பா....
தினமும் கண்ணீரோடு அம்மா
ஆற்றுவார் யார் அப்பா
ஆறுமோ அவன் துயரம்.
என்றும் உங்கள் நீங்காத
நினைவுடன் மகன்.

**அமரர் வீரகத்தி மனோகரன்**

மனோகரன் செல்வரத்தினம்,
துன்னாலை தெற்கு,
தில்லையம்பலம், கரவெட்டி.

நிர்மல் (பிரான்ஸ்),
பிரதீப் (லண்டன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு வசதியீனங்களுடன் இயங்கி வரும் நெடுந்தீவுப் பிரதேசப் பாடசாலைகள்

## நடவடிக்கை எடுக்குமாறு எம்.பிக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 30

நெடுந்தீவுப் பிரதேச பாடசாலைகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாக அங்குள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை அங்கு விஜயம்செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறிதரன் ஆகியோரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.





இது தொடர்பாக அங்குள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நெடுந்தீவிலுள்ள மாணவர்களுக்காக 8 பாடசாலைகள் காணப்படுகின்றன. அவற்றில் 3 பாடசாலைகள் மட்டுமே உயர்தர வகுப்புக்களைக் கொண்டவையாகும்.

நெடுந்தீவு மகா வித்தியாலயம், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு றோ.க. மகளிர் பாடசாலை என்பனவே அவையாகும்.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் 400 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு 38 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். இங்குள்ள ஆசிரியர்களில் சிலர் வேறு இடங்களிலிருந்து வந்தே கற்பிக்கின்றனர். ஆனால் இந்த ஆசிரியர்களுக்கு எந்தவித விடுதி வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. இப்பாடசாலையின் கணனி அறைக்குப் 13 கணனிகள் வழங்கப்பட்ட போதும் அவை அனைத்தும் பழுதடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இந்தப் பாடசாலையில் கணித பாடம் மற்றும் அழகியல் பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை.

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் 225 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இங்கு 22 ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். கணனி ஆய்வு கூடத்துக்கு 4 கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் நெடுந்தீவுப் பிரதேசத்தில் தற்போது நீண்ட நேரமின்வெட்டு காரணமாக கணனிகளைப் பாடசாலை நேரங்களில் உபயோகிக்க முடியாமல் உள்ளது.

நெடுந்தீவு றோ.க. மகளிர் பாடசாலையில் 221 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர். 23 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். பாடசாலைக்குத் தொலைபேசி வசதிஇல்லை. அங்கு கணித பாடத்துக்குத் தொண்டர் ஆசிரியர் ஒருவரையே நியமித்துள்ளனர். மற்றும் பாடசாலை மாணவர்கள் கற்காத பாடங்களான விவசாய பாடத்துக்கு ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் மாணவர்கள் கற்கும் நடனம், மனைப் பொருளியல் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை.

இந்தப் பாடசாலைகளில் உள்ள மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் வெளிஉலகம் தெரியாதவர்களாகவே இருக்கின்றனர்.

கல்விச் சுற்றுலா எதனையும் வேறு இடங்களுக்கு தாம் இதுவரை மேற்கொள்ளவில்லை என மாணவர்கள் தெரிவித்தனர்.

உயர்தர வகுப்புக்கள் உள்ள 3 பாடசாலைகளிலும் கலைப்பிரிவு மட்டுமே காணப்படுகின்றது. கலைப்பிரிவிலும் குறிப்பிட்ட பாடங்கள் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன. ஏனைய துறையில் கற்க விரும்பும் மாணவர்கள் வேறு இடங்களுக்கு செல்லவேண்டி உள்ளது- என்றனர்.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (த-319)

## வளன்புரம், கொழும்புத்துறைப் பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

கொழும்புத்துறை, ஜூலை 30

வளன்புரம், கொழும்புத்துறைப் பகுதியில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத மின் பெறுவோரின் செயற்பாடுகளால் சட்டபூர்வ மின் பாவனையாளர்கள் பாதிப்புக்குள்ளாவதாகவும், குறைந்த மின்வலுவே தமக்குக் கிடைப்பதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் இப்பகுதிகளில் மின்சார சபையினரும் இராணுவத்தினரும் இணைந்து சட்டவிரோத மின்னிணைப்புகளைத் துண்டித்தனர். ஆயினும் மீண்டும் அவர்கள் சட்டவிரோத மின்னிணைப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு மின்சாரம் பெறுவோர் இரவு பகலாக மின்விளக்குகளை எரிய விடுவதாகவும், கைத்தொழில் இயந்திர சாதனங்களை இயக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-135)

## நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கைநெறி செப்ரெம்பரில்

யாழ்ப்பாணம், ஜூலை 30

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி-தரம் II-2010/2011 இனது புதிய பிரிவானது இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்.நிலையத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

மேற்படி டிப்ளோமா கற்கைநெறியின் தரம்-I ஐப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரம் இக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்களை இலங்கை நூலகச் சங்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளரை யாழ்.பல்கலைக்கழக நூலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-16)

## பெருந் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள் ஸ்ரீபர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (த-204)




## மணிப்புரிப் பகுதியில் இதுவரை 25 குடும்பங்கள் மீளக் குடியமர்வு

கொழும்புத்துறை, ஜூலை 30

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மணிப்புரிப் பகுதியில் இதுவரை 25 குடும்பங்களே குடியமர்ந்துள்ளதாகவும் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இடப்பெயர்வுக்கு முன்னர் 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்தபோதிலும் வீடுகள் அனைத்தும் முற்றாக அழிவுற்றதால் மீளக் குடியமர்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

தற்போது குடியேறியுள்ளவர்கள் சிறு கொட்டில்களை அமைத்து எவ்வித உதவிகளும் அற்ற நிலையில் வாழ்ந்து வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். (த-135)

## வாக்காளர் பதிவுகள் 17ஆம் திகதி யாழ்.செயலகத்தில் கையேற்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற வாக்காளர் கணக்கெடுப்புப் பணிகள் நிறைவுபெற்றதும் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் அதனைக் கையேற்கும் நிகழ்வு இடம்பெறும்.

கிராம உத்தியோகத்தர்கள் தாமே நேரடியாக யாழ்.தேர்தல் திணைக்களத்திற்கு வருகை தந்து பதிவுகளை உத்தியோகபூர்வமாகக் கையளிக்க வேண்டும் என்று திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் நீண்டகாலத்திற்குப் பின்னர் வாக்காளர் கணக்கெடுப்பு மிகவும் துரிதமான முறையில் நடைபெற்று வருகின்றது.

இத்தகைய கணக்கெடுப்புப் பணிகள் பெரும்பாலும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கிராம உத்தியோகத்தர்களால் நிறைவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.கணக்கெடுப்புப் பணிகள் நிறைவு பெற்றதும் கிராம உத்தியோகத்தர்கள் தாமாகவே நேரடியாக யாழ். தேர்தல் திணைக்களத்தின் அலுவலகத்திற்கு வருகைதந்து உத்தியோகபூர்வமாகக் கையளிக்க வேண்டும் என்றார். (த-9)

## குறிகாட்டுவான் உபதபாலகத்தை மீண்டும் சொந்த இடத்தில் இயக்கக் கோரிக்கை

புங்குடுதீவு, ஜூலை 30

நீண்டகாலமாக இடம்பெயர்ந்து பெருங்காட்டுப் பகுதியில் இயங்கிவரும் புங்குடுதீவு குறிகாட்டுவான் உப தபாலகத்தை மீண்டும் சொந்த இடத்தில் இயக்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.


கடந்த காலங்களில் நிலவிய யுத்த நடவடிக்கை காரணமாக குறிகாட்டுவான் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெருங்காட்டுப் பிரதேசத்தில் வசித்தனர். இதனால் குறிகாட்டுவான் உப தபாலகமும் பெருங்காட்டில் இயங்கியது.

இரு தசாப்தங்களின் பின்னர் குறிகாட்டுவான் பிரதேச மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டனர். ஆனால் உப தபாலகம் தொடர்ந்து பெருங்காட்டுப் பகுதியிலேயே இயங்கி வருகின்றது. இதனால் மக்களும் பொதுசன உதவிப் பணம் பெறுபவர்களும் மிகுந்த கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

எனவே குறிகாட்டுவான் உப தபாலகத்தை மீளவும் சொந்த இடத்தில் இயக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-6-188)







யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொலிஸ்-மக்கள் தினத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இதில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி.சில்வா மற்றும் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ ஆகியோர் அழைத்து வரப்படுவதை முதல் படத்திலும் பொதுமக்களின் பிரச்சினைகள் தொடர்பாக விசாரணைகள் நடைபெறுவதை அடுத்துள்ள படத்திலும், பெண்ணொருவரது முறைப்பாட்டை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(படங்கள்: சுகந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையுடன் பல்கலாசார நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நயினாதீவு மேகலை அரங்கில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வுகளில் தேசிய மொழிகள் அமைச்சின் செயலாளர் திருமதி எஸ்.எம்.விக்கிரமசிங்க, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ வாமதேவக்குருக்கள், நயினாதீவு நாகவிகாரா திபதி நவின்டகல பதும கீதி திஸ்ஸ தேரர், மௌலவி இர்ஷாத் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் வரிசைப்படங்களிலும்,

நிகழ்வில் கலந்து கொண்ட கடற்படை அதிகாரிகளையும், வவுனியா தெற்கு அடமங்கட வித்தியாலய மாணவிகள், நயினை மகாவித்தியாலய மாணவிகள், நயினாதீவு இஸ்லாமிய சனசமூக நிலையத்தினர் ஆகியோரும் நடன நிகழ்வுகளையும் இரண்டாவது வரிசையில் உள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

## 'விளையாட்டுக்களின் கொண்டாட்டம்'

'விளையாட்டுக்களின் கொண்டாட்டம்' எனும் தலைப்பிலான நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத்தின் பிரதிநிதி திருமதி நவநீதம் ஜெகதீஸன் கலந்து கொள்ளவுள்ளார். (த-6)


## பொதுச்சபைக் கூட்டம் 06.08.2010

கூட்டுறவுச் சங்க ஆணையாளரும் பதிவாளரும் (வ.மா) அவர்களின் NP/15/JA/4/8/1595 இலக்க 2010.04.28ஆம் திகதிய கடிதம் மூலம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.த.பத்மானந்தன் ஆகிய எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் வரையுள்ள பதிவு இல யா/1595 கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தைக் கீழ்வரும் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய 06.08.2010 வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு சங்கத்தலைமை அலுவலகத்தில் எனது தலைமையின் கீழ் கூட்டவிருப்பதால் அக்கூட்டத்திற்கு பொதுச்சபை உறுப்பினர்கள் சகலரும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

*குறிப்பு :* ஒவ்வொரு அங்கத்தவருக்குமான தனித்தனி அழைப்புக்கள் பதிவுத் தபாலில் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி நிரல்

1) இறைவணக்கம்
2) தலைமையுரை
3) சங்க நெறியாளர் குழுவின் தற்கால நிலை பற்றி ஆராய்தலும் அவசியம் ஏற்படின் புதிய நெறியாளர் குழுவை தெரிவு செய்தலும்.

த.பத்மானந்தன்
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்,
யாழ்ப்பாணம்.
(101252)



## கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண உள்ளூராட்சி, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் அவர்களின் அன்புக் கணவர்

### கணேசலிங்கம் ரமேஸ்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.
(சி/569553)



## இதய அஞ்சலி

### அமரர் நடராசா குமாரதேவன் (தேவன்)



(பொதுமுகாமையாளர்,
தெ.மரா.மே.ப.நோ.கூ. சங்கம், கைதடி)

28.07.2010 அன்று இறையடி சேர்ந்த நடராசா குமாரதேவன் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது இதயபூர்வமான அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கென்ஸ்மன் லேன்,
சாவகச்சேரி.
(சி/569548)
வாணி ரெக்ஸ்,
யாழ்ப்பாணம்.


## அவுஸ்திரேலிய இரசாயனவியல் வினாவிடைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 30

அவுஸ்திரேலியா நாட்டின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் துறையால் நடத்தப்படும் இரசாயனவியல் வினாவிடைப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் மாணவர்களையும், அவர்களை வழிநடத்தும் ஆசிரியர்களையும் யாழ். பல்கலைக்கழக இரசாயனவியற்றுறை மண்டபத்திற்கு முன்பாக கூடுமாறு, யாழ். மாவட்ட பிரதம பரீட்சகரான இ.ஸ்ரீகரன் கேட்டுக் கொண்டுள்ளார். (த-319)

## இறை மீட்பர் சபையின் முதல் குருவாக ஜீசஸ்

கொழும்புத்துறை , ஜூலை 30

நாவாந்துறை புனித மரியாள் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு குருத்துவ திருநிலைப்படுத்தல் சடங்கு நடைபெறவுள்ளது.

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையினால் பிலிப்பைன்ஸில் உள்ள இறை மீட்பர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரன் மைக்கல் ராஜா ஜீசஸ் குருவாக திரு நிலைப்படுத்தபடவுள்ளார்.

மெய்யியல், இறையியல், உளவியல் பட்டங்கள் பெற்ற இவர் இறைமீட்பர் சபையின் யாழ். மறை மாவட்டத்தை சேர்ந்த முதல் குருவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-135)


## தவறிவிட்டது

உதயநகர், கிளிநொச்சியைச் சேர்ந்த கிருஸ்ணசாமி விசுவநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (801135137V), தற்காலிக அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: கி.விசுவநாதன்
215, கச்சேரி றோட், நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0779266747, 0772405462



## காணி விற்பனைக்குண்டு

மானிப்பாய் வீதியில் உடுவில் சந்திக்கு அண்மையில் பழைய வீட்டுடன் கூடிய 5½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
தொ.பே.இல. 0770784841



## காணி விற்பனைக்குண்டு

மருதனார்மடம், வலிகாமம் கல்வி வலய அலுவலகத்துக்கு அண்மையில் கிணற்றுடன் கூடிய 12 பரப்புக் காணி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: தொ.பே.இல. 0777110513



## அரையாண்டுக்கான பொதுக்கூட்டமும் மாணவர்களுக்கான நிதி உதவி ஆரம்ப நிகழ்வும்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் மேற்படி நிகழ்வுகள் 31.07.2010 சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளதால் சகல அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

சாவகச்சேரி கைத்தொழில்
வணிகர் மன்றம். (சி/569552) செயலாளர்.



## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்
திருமதி விஜயலட்சுமியின் அன்புக் கணவர்

### அமரர் கணேசலிங்கம் ரமேஸ்

(உதவி பிரதம பொலிஸ் பரீட்சகர்)

அவர்களது மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். அன்னாரின் மறைவினால் துயருறுவோருடன் இணைந்து நாமும் துயர் பகிர்ந்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித்
திணைக்கள உத்தியோகத்தர்கள்.
(101258)



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை பிரதி அதிபர் திருமதி லலிதாம்பாள் நாகையா அவர்களின் மாமனார் வைத்திலிங்கம் இரத்தினம் 29.07.2010 அன்று இறைபதம் எய்தியமையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்,
பாடசாலைச் சமூகம்.
(101259)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின்
இளைப்பாறிய உப அதிபர்

### திருமதி கிருபா பவசிங்கம்



அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள், பாடசாலை
அபிவிருத்திச்சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.
(101255)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவரித் திணைக்களத்தின் வடக்கு அலுவலகத்துக்கு கிடைக்கும் வருமானம் இப்பகுதிகளின் அபிவிருத்திக்கு

## பிராந்தியப் பொறுப்பதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஜூலை30

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வடபிராந்திய அலுவலகத்துக்கு வியாபார மொத்த விற்பனை வரி மற்றும் முத்திரை வரி மூலமாகக் கிடைக்கப்பெறும் வருமானம் வடபகுதியின் அபிவிருத்திக்கும் சேவைத் துறைக்குமே பயன்படுத்தப்படுகிறது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வடபிராந்திய அலுவலகத்தின் பொறுப்பதிகாரி க.இராசையா இத்தகவலை 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

வியாபார மொத்த விற்பனைவரி, முத்திரை வரி மூலம் கிடைக்கும் வருமானம் வடமாகாணத்தின் அபிவிருத்திக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. ஏனைய மாகாணங்களுக்கு அவை கொண்டு செல்லப்படுவதில்லை.

வடமாகாணத்தில் கிடைக்கும் இந்த வரிகள் மூலமான வருமானம் வடபகுதிக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்பது தொடர்பாக வரி செலுத்துவோர் மத்தியில் இருக்கும் சந்தேகம் நீங்கவேண்டும்.

வட மாகாணத்தில் ஏதேனும் பகுதியில் பொருள்களை வாங்குவோர் விற்பனை செய்வோர் இந்த வியாபார மொத்தவிற்பனை வரி செலுத்தவேண்டும். வாங்கும் போதும் விற்கும்போதும் ஒரு சதவீத வரி விடப்படும்.

உற்பத்தியாளர்கள் இறக்குமதியாளர்களிடம் இருந்து பொருளை வாங்கி விற்பனை செய்யும் முகவர்களிடமும் வரி அறவிடப்படுகின்றது. குறிப்பாக மதுபானம், சிகரெட், தளபாடங்கள், நகைகள் விற்பனை செய்யும் முகவர்களிடம் இருந்து 5 சதவீதம் வியாபார மொத்த விற்பனை வரியாக அறிவிடப்படுகிறது - என்றார்.

முத்திரை வரி தொடர்பாக அவர் குறிப்பிடும்போது:-

வடமாகாணத்தில் காணிக் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பாக வரி அறவிடப்படும். அதாவது ஏதேனும் ஆதனம் தொடர்பாக நன்கொடை மற்றும் ஒப்படைத்தல் செயற்பாட்டுக்கு முத்திரை வரி செலுத்தப்படவேண்டும்.

நன்கொடையின்போது முதல் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகைக்கு 3 வீதமும் அடுத்து வரும் தொகைக்கு 2 வீதமும் முத்திரை வரியாக அறவிடப்படுகிறது.

அதேபோல ஆதனம் ஒப்படைத்தலுக்கு முதல் ஒரு லட்சம் ரூபா பெறுமதிக்கு 3வீதமும் அடுத்துவரும் தொகைக்கு 4 வீதமும் அறவிடப்படுகிறது - என்றார். (த-14)

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவு இறுதித் தினம் இன்று

நல்லூர்,ஜூலை30

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியமர்ந்தவர்களுக்கான 5 ஆயிரம் ரூபா தற்சமயம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கொடுப்பனவை இதுவரை பெற்றுக்கொள்ளதவர்கள் இன்று வெள்ளிக் கிழமை தமக்குரிய கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறும், இன்றைய தினம் மட்டுமே இறுதிக் கொடுப்பனவு தினமாகும் எனவும், தமக்குரிய கொடுப்பனவுகளை இன்று பெற்றுக்கொள்ளாவிடின் இனி வழங்கப்படமாட்டாது எனவும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (த-111)






கவிஞர் சோ.பத்மநாதனின் 'சுவட்டெச்சம்' கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், தமிழ்த்துறைத்தலைவர் சி.சிவலிங்கராஜா, கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் -

விரிவுரையாளர் ராஜேஸ்கண்ணன் ஆய்வுரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் முதற்பிரதியை துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் வெளியிட்டு வைக்க தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் முகாமையாளர் வி.அருளானந்தம் பெற்றுக்கொள்வதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள் : ரட்ணம்)

## கடற்கரை வீதி புனரமைக்கப்படாமையால் வேறு மார்க்கங்களில் பயணிகள் பஸ் சேவை

கொழும்புத்துறை,ஜூலை30

அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்து மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்ட யாழ். கடற்கரை வீதி பல மாதங்களாகியும் இதுவரை புனரமைப்புச் செய்யப்படாதிருப்பதாக மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

யாழ். நகரிலிருந்து கொழும்புத்துறை வரை போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் வண்டிகள் இந்த வீதியூடாகவே தமது சேவையை நடத்தி வந்தன.

இந்த வீதி வாகனங்கள் பயணிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளமையால் வேறு மார்க்கங்களில் தனியார் போக்குவரத்துச் சேவை இடம்பெறுகிறது. இதனால் இப்பகுதிகளில் வாழும் மக்கள் அன்றாட தேவைகளுக்கு யாழ். நகருக்கு சென்று வருவதில் பல அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

இவ்வீதியில் உள்ள பல பாலங்கள் புனரமைக்கப்பட்ட நிலையில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இவ்வீதி புனரமைக்கப்படாதிருப்பதாகவும் உரியவர்கள் கவனமெடுத்து இப்பகுதி மக்களின் போக்குவரத்தை சீர்செய்து தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (த-135)

## சைவசித்தாந்த ஆய்வுரை

யாழ்ப்பாணம்,ஜூலை 30

திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் பண்பாட்டு பிரிவின் ஏற்பாட்டில் சைவ சித்தாந்தத்தைப் பயில்கின்ற மாணவர்கள் மற்றும் அதனோடு ஈடுபாடுடையவர்களுக்கு உதவும் முகமாக நாளை 31ஆம் திகதி சனிக்கிழமையும் நாளை மறுதினம் 01ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் சைவசித்தாந்த ஆய்வுரை இடம்பெறவுள்ளது.

286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இரு நாள்களும் மு.ப. 10 மணி முதல் 12.30 மணிவரை இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் 'மெய்கண்டதேவர், உமாபதி சிவாச்சாரியார் ஊடாக முப்பொருள் விளக்கம் என்னும் பொருளில் ஆய்வுரை இடம்பெறும். (த)

## சித்திரபாட செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 30

கல்வி அமைச்சு நடத்தும் சித்திரபாடச் செயலமர்வு யாழ.மத்திய கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 8.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் ஜி.சி.ஈ. உயர்தர வகுப்புக்குச் சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் 2010 ஜி.சீ.ஈ. உயர் தர வகுப்பு மாணவர்களையும் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு சித்திரம் கற்பிக்கும் ஒரு ஆசிரியரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

செயலமர்வுக்கு வருகை தரும்போது எழுதுபொருள்கள், காகிதாதிகள், மதிய போசனம் என்பவற்றை எடுத்துவருமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (த-319)

## மாகாண ஆங்கில தினப் போட்டிக்கு உடுவில் மகளிரின் 80 மாணவிகள்

வலி. வடக்கு,ஜூலை30

நடந்து முடிந்த 2010 ஆம் ஆண்டுக்கான மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகளில் இடம்பெற்ற 11 வகைப் போட்டிகளில் 8 போட்டிகளில் மட்டும் பங்கேற்ற உடுவில் மகளிர் கல்லூரி 6முதலாம் இடங்களையும், 5 இரண்டாம் இடங்களையும் 2 மூன்றாமிடங்களையும் பெற்றுக்கொண்டது.

இவற்றுள் குழு நிகழ்வுகளாகிய ஆங்கில நாடகங்களில் 2 முதல் இடங்களையும், ஆங்கிலப் பாடல் போட்டிகளில் 2 முதல் இடங்களையும் பெற்றதன் மூலம் மொத்தமாக 80 மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.

இதன்மூலம் வழமைபோல் யாழ். மாவட்டத்திலே அதிகூடிய எண்ணிக்கை யான மாணவர்களை மாகாண மட்டப் போட்டிகளுக்கு அனுப்புவதில் உடுவில் மகளிர் கல்லூரி இந்த முறையும் முதன்மை நிலையை வகிக்கின்றது. (த-86)

## இரவு வேளைகளில் தினமும் மின்தடை; சிரமப்படுவதாக பொது மக்கள் விசனம்

கொழும்புத்துறை,ஜூலை30

அரியாலை, கல்வியங்காடு, கொழும்புத்துறை, தென்மராட்சிப் பகுதிகளில் தினமும் இரவுவேளைகளில் மின் தடை ஏற்படுவதால் அப்பகுதி மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

தினசரி மணிக்கணக்காக இந்த மின்சார சீரின்மை நிலவுவதாகவும் இது மின் தடையா? மின்வெட்டா என்று தெரியாது மக்கள் தமது இரவுக் கடமைகளை திட்டமிடமுடியாதுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை தற்போது பாடசாலை தவணைப் பரீட்சைகள் நடைபெறும் காலமென்பதால் மாணவர்கள் தமது கல்வி மீட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ள இந்த மின்சாரத் தடையால் பெரும் பாதிப்பு ஏற்படுவதாகவும் பெற்றோரும் மாணவர்களும் கவலை தெரிவிக்கின்றனர். (த-135)

## புகையிலைப் பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் அனுமதி பெறவேண்டும்; இல்லையேல் சட்ட நடவடிக்கை

### மதுவரித் திணைக்களம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை30

யாழ்.மாவட்டத்தில் பீடி, புகையிலைப் பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் மதுவரித் திணைக்களத்திடம் அனுமதி பெறவேண்டியது அவசியம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பீடி, புகையிலைப் பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் இனங்காணப்பட்டு மதுவரித் திணைக்கள கட்டளைச் சட்டத்தின் கீழ் புகையிலை உற்பத்தி செய்வதற்கான பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே உற்பத்தியாளர்கள் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அதனைப் பூரணப்படுத்தி மதுவரித் திணைக்களத்திடம் அனுமதியைப் பெற்று பீடி, புகையிலைப் பொருள்களை உற்பத்தி செய்யுமாறும், அவ்வாறு அனுமதி பெறாது உற்பத்தி செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மதுவரித் திணைக்களம் எச்சரித்துள்ளது. (த-6-316-317)

## 'சுபீட்சம்' செய்திமடல் ஞாயிறு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை 30

பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் 'சுபீட்சம்' செய்திமடல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் மு.ப. 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

சமுர்த்தி மகாசங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் இ.அன்ரனி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதே செயலர் இ.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.(ஐ)

## துர்நாற்றம் வீசும் வடிகால்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வேம்படி வீதியில் காணப்படும் வாய்க்கால்களில் கழிவுநீர் தேங்கி, துர்நாற்றம் வீசுகிறது.

இதனால் அப்பகுதியில் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தொற்றுநோய்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாய்க்கால்களைச் சுத்தம் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-316-317)

## சண்டிலிப்பாய் பிரதேச முதியோர்களின் கூட்டம்

நவாலி, ஜூலை 30

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங் கங்களினதும் விசேட தேவைக்குரியோரினதும் கூட்டம் நாளை சனிக்கிழமை பிர தேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறும்.,

காலை 9 மணிக்கு முதியோர் சங்கங்களினதும் , 10 மணிக்கு விசேட தேவைக்குரியோரினதும் கூட்டம் நடைபெறும்.

அனைத்து சங்க உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (த-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.04.1993

✱சித்தங்கேணி, சண்டிலிப்பாய் பகுதிகளில் படையினரின் இரு வெவ்வேறு தாக்குதல் சம்பவங்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் மயிரிழையில் உயிர் தப்பியதாகத் தெரிவிப்பு.

✱ வலிகாமம் மேற்கு நேற்று இடம்பெற்ற மோசமான விமானத் தாக்குதல்கள், ஷெல் வீச்சுக்களைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிப்பு.

17.04.1993

✱ யாழ்.செஞ்சிலுவைச் சங்க உபதலைவர் புவனேந்திரன் கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் விமானப் படையினரால் படுகொலையுண்டமையைக் கண்டித்து யாழ் நகரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிப்பு.

✱ கச்சதீவைத் திரும்பப் பெறுவதில் ஆளும் அ.தி.மு.க வும் காங்கிரஸ் கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதா வேண்டுகோள்.

18.04.1993

✱ எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத் தெரிவுக்குழு கூடும் போது தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கையில் வெளியிடப்பட்ட வடக்குக்கும் கிழக்குக்கும் தனியான சமஷ்டி அலகு யோசனைக்கு பல திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிப்பு.

✱ ஆடை ஏற்றுமதி மூலம் கடந்த ஆண்டு 5 ஆயிரத்து 60 கோடி ரூபா அரசுக்கு வருமானமாகக் கிடைத்ததாக திறைசேரிப் பிரதிச் செயலாளர் தெரிவிப்பு.

19.04.1993

✱ யாழ்ப்பாணத்துக்கு வந்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேச நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆர்வமாக உள்ளதாகத் தெரிவிப்பு.

✱ லண்டன் சென்றுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்க இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அங்கு விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களைச் சந்திக்கலாம் என ஊகம் தெரிவிப்பு.

20.04.1993

✱மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் நாளை முதல் ஆரம்பமாவதாக அறிவிப்பு.

✱ உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிர் நீத்த அன்னை பூபதியின் 5 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் யாழ்.குடாநாடு எங்கும் அனுஷ்டிக்கப் பட்டதாகத் தெரிவிப்பு.

21.04.1993

✱ இயக்கச்சிப் பகுதியில் நேற்றுக் காலை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட முன்னேறுவதற்கான முயற்சி விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப் பட்டதாகத் தெரிவிப்பு.

✱ ஈழத்தில் அமைதி நிலை தோன்றுவதை இந்திய அரசு விரும்பவில்லை என பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் பேட்டியொன்றின் போது தெரிவிப்பு.

22.04.1993

✱ ஆனையிறவுப் பகுதியில் நேற்றுக் காலை வான், தரை, கடல் ஆகிய மூன்று வழிகளிலும் தாக்குதல் நடத்தியவாறு இரு முனைகளில் முன்னேற முயன்ற பாதுகாப்புப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஐந்து மணி நேர கடும் சண்டையின் முடிவில் படையினர் பின்வாங்கித் தமது நிலைக்குத் திரும்பியதாகத் தெரிவிப்பு.

✱ மாகாணசபைத் தேர்தலை பின்போட அரசு திட்டமிட்டு வருவதாக தென்பகுதி அரசியல் விமர்சகர்கள் தெரிவிப்பு.

23.04.1993

✱ மன்னார் தீவில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டை விடுதலைப் புலிகள் உடைத்து விடக்கூடிய சாத்தியமிருப்பதாக படை அதிகாரிகள் உணர்கின்றனர் என்று 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறை மிகவும் திறமை வாய்ந்ததாக இருப்பதாக பாதுகாப்பு மற்றும் இராஜ தந்திர வட்டாரங்கள் ஒப்புக் கொண்டுள்ளன என 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை தெரிவிப்பு.

24.04.1993

✱ ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான லலித் அத்துலத் முதலி கொழும்பு கிருலப்பனையில் நடந்த பிரசாரக் கூட்டமொன்றில் வைத்து நேற்று சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

✱ மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் உட்புகுந்து வெற்றிகரமான தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

25.04.1993

✱ முன்னாள் அமைச்சரும் ஜ.ஐ.தே. முன்னணியின் தலைவருமான லலித் அத்துலத் முதலி சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து கொழும்பில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.

✱ லலித் அத்துலத் முதலியை கொலை செய்ததாக நம்பப்படும் தமிழ் இளைஞர் ஒருவரின் சடலத்தை கிருலப்பனை பொலிஸார் நேற்று கண்டுபிடித்து மீட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

26.04.1993

✱ அரசாங்கத்துடன் நெருக்கமுடைய பரா இராணுவத் துருப்புக்களே அரசின் தூண்டுதலின் பேரில் லலித் அத்துலத் முதலியைச் சுட்டுக் கொன்றனர் என லலித் கட்சியின் சிரேஷ்ட உதவித் தலைவர் காமினி திஸநாயக்க குற்றச்சாட்டு.

✱ முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து தாம் அதிர்ச்சியும் துயரமும் அடைந்துள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

27.04.1993

✱ லலித் அத்துலத் முதலியின் கொலையுடன் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்திப் பிரசாரம் செய்வதன் மூலம் தெற்கில் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் ஒன்றை உருவாக்க அரசு முயற்சிப்பதாக எதிர்க் கட்சிப் பிரமுகர்கள் அரசு மீது குற்றச்சாட்டு.

✱ லலித் உயிரைப் பாதுகாக்கத் தவறியதற்காக ஜனாதிபதி பிரேமதாஸவையும், பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவையும் பதவி விலகவேண்டுமென காமினி திஸநாயக கோரியுள்ளதாகத் தெரிவிப்பு.

28.04.1993

✱ லலித் அத்துலத் முதலி சுடப்பட்ட கிருலப்பனைக் கூட்டத்துக்கு பாதுகாப்பு வழங்கவேண்டாம் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் வாய்மொழி மூலம் தமக்கு உத்தரவிட்டதாக கிருலப்பனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு.

✱ அத்துலத் முதலி கொலை குறித்து அப்பாவியான என் மீது போலியான குற்றச்சாட்டைச் சுமத்துகிறார்கள். உண்மை ஒருநாள் வெளிவந்தே தீரும் என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

29.04.1993

✱ சுட்டுக்கொல்லப்பட்ட லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலம் நேற்று கொழும்பில் நடைபெற்ற போது அங்கு பெரும் கலவரம் வெடித்ததாகத் தெரிவிப்பு.

✱ நேற்று கொழும்பில் இடம்பெற்ற வன் செயல்களின் போது ஆகக் குறைந்தது ஐந்து படையினரின் ஜீப்புக்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதாகத் தெரிவிப்பு.

30.04.1993

✱ அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலத்தின் போது அரசாங்கமே வன்முறைகளைத் தூண்டி விட்டதாக எதிர்க் கட்சிகள் குற்றச்சாட்டு.

✱ விடுதலைப் புலிகளின் கார்க் குண்டுத் தாக்குதல் பிரிவினர் கொழும்புக்குள் ஊடுருவி இருப்பதாக இரகசியப் புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்ததை அடுத்து கொழும்பில் இராணுவத் தலைமையகத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

---

# ஓராண்டு நினைவலைகள்



அன்னை மடியில்:
16.06.1922

ஆண்டவன் அடியில்:
10.08.2009

திருமதி
## கந்தையா மகேஸ்வரி
திதி: சதுர்த்தி

ஆண்டொன்று கடந்த போதிலும்
-அன்னையே
அன்பு நிறைந்த உன் முகம்
மறையவில்லை-எமைவிட்டு
தந்தையை இழந்து நாமிங்கு
தவித்தவேளை
தளராத மனம் கொண்டு
பார்போற்ற ஆளாக்கினாய்
- எம்மவரை சீருடனே
நான்கு தலைமுறையுடன்
உறவாடிய - பெருமை
என்றுமே உன்னையே சார்ந்திடும்
பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய
- எம் அன்னையே
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உம் நினைவு எமைவிட்டகலா?
வேண்டுகின்றோம் இறையடியை
- என்றும் அன்னையே
மறவாத உன் நினைவுகளாய்...

குடும்பத்தினர்
MPCS ஒழுங்கை, கோப்பாய்.

---

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

## சின்னச்சாமி சுப்பையா
(இரத்தினம்)
(உரிமையாளர், துர்க்கா விற்பனை நிலையம்)




(101251)

ஆலமரமாய் எமக்கெல்லாம்
நிழல் தந்து காத்தவரே
ஆறு ஆண்டுகளென்ன
நூறாறு ஜென்மம் கடந்தாலும்
நாம் என்றும் மறவோம் உம்மை

பிறப்பு:
19.09.1949

இறப்பு:
04.08.2004



தகவல்:
குடும்பத்தினர்

22 A, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்துறையில் ஈடுபடுவோரின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவி

## கலந்துரையாடலில் முடிவு

அம்பாறை,ஜூலை30

விவசாயத்துறையில் ஈடுபடுவோரின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்வதென, கலந்துரையாடல் ஒன்றில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மனித அபிவிருத்தி தாபனத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் பி.ஸ்ரீகாந்த் தலைமையில் இரண்டாவது கலந்துரையாடல் அண்மையில் அட்டைப்பள பாலர் பாடசாலையில் நடைபெற்றது.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சேதனப்பசளையின் முக்கியத்தும், அதைப் பயன்படுத்தாமைக்கான காரணங்கள், விவசாயக் குழுக்களின் செயற்பாடுகள் ஆகியவை தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டது.

இப்பிரதேசத்தில் விவசாயக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், 25 விவசாயிகள் விவசாயக் குழுக்களில் பதிவு செய்யப்படவில்லை. அவர்களை மனித அபிவிருத்தி தாபனம் விவசாயக் குழுக்களில் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் என கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இதில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:-

* சேதனப் பசளை தயாரிப்பு முறையை வீட்டுத் தோட்டம் செய்பவர்களுக்கு உடனடியாக அறிமுகப்படுத்துதல்.
* இயற்கைப் பசளை சம்பந்தமான செயலமர்வுகளை நடத்துதல்.
* விவசாயத் துறையில் ஈடுபடுவோரின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்தல்.
* குரங்குத் தொல்லையில் இருந்து சேனைப் பயிர்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். (ளி)

# கேணிப் பித்தனின் நூல் வெளியீடு

மட்டக்களப்பு,ஜூலை30

கேணிப் பித்தன் ச. அருளானந்தம் எழுதிய ''அந்த மாணவர் உலகம்'' என்னும் சிறுவர் நெடுங்கதை நூல் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கிழக்கில் ஆகக்கூடிய சிறுவர் ஆக்கங்களைப் படைத்து வரும் அருளானந்தத்தின் 36ஆவது நூல் இதுவென்பது குறிப்பிடத்தக்கத்து.

விபுலானந்தரின் அடுத்தவாரிசான சுவாமி நடராஜானந்தா அடிகளுக்கு இந் நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.(ளி)




# கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலேயே அம்மன் முகக் கலைக்கு ஆலயம்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் அனுமதி

மட்டக்களப்பு,ஜூலை30

வாகரைப் பிரதேசத்தில் பொதுமக்களால் கண்டுபிடிக்கப்பட்ட அம்மன் முகக் கலையினை (முகவடிவம்) அவ்விடத்திலேயே ஆலயம் அமைத்து வழிபாடு செய்வதற்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் அனுமதி அளித்துள்ளார்.

அண்மையில் கண்டெடுக்கப்பட்ட அம்மனின் முகக்கலையினை ஆலயம் அமைத்து வழிபாடு செய்வதற்கு அனுமதிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் வாகரை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இக்கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொதுமக்களின் விருப்பத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் திரவியம் ஆகியோர் கூட்டத்துக்குத் தலைமை வகித்த முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டனர்.

இதனையடுத்து முதலமைச்சர் இந்த அனுமதியை வழங்கினார். இருப்பினும் வாகரைப் பொலிஸார் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட முகக் கலையினை வாழைச்சேனை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

அதனால் இவ்விடயத்தில் நீதிமன்றத்தின் அனுமதிக்காகக் காத்திருக்க வேண்டிய நிலையும் எழுந்துள்ளது.

(ளி)

# தென்கிழக்கு பல்கலை வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சை

ஏறாவூர்,ஜூலை30

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொண்டு வரும் வியாபார நிர்வாகமாணி, வணிகமாணி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த முதலாம் வருட மாணவர்களுக்கான பட்டப் பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி முதல் 6ஆம் திகதிவரை ஒலுவில் வளாகத்தில் நடைபெறும்.

பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.ஐ.நௌபர் இத்தகவலை வெளியிட்டுள்ளார். பரீட்சைக்காக விண்ணப்பித்த சகல வெளிவாரி மாணவர்களுக்கும் பரீட்சை அனுமதி அட்டைகள் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத மாணவர்களை உடனடியாகத் தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகளுக்கான நிலையத்தால் நடத்தப்படும் ஆங்கில மொழிச் சான்றிதழ், கணனி பிரயோக சான்றிதழ் ஆகிய கற்கை நெறிகளுக்கு தகுதியான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நுழைவுப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 07ஆம் திகதி ஒலுவில் வளாகத்தில் நடைபெறும் என்றும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ளி)

# மூன்றாவது ஹாபிழ் பட்டமளிப்பு விழா

அம்பாறை,ஜூலை30

மருதமுனை மர்க்கஸித் தல்லமில் இஸ்லாமிய கலாபீடத்தின் மூன்றாவது ஹாபிழ் பட்டமளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஷம்ஸ் மத்திய கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

இஸ்லாமிய கலாபீடத் தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமான ஏ.எல்.பீரா முஹைதீன் இதற்குத் தலைமை வகிப்பார். இவ்விழாவில் தேசிய காங்கிரஸ் தலைவரும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

விசேட அதிதியாகக் கலந்துகொள்ளும் காத்தான்குடி ஜாமி அதுல் பலாஹ் அரபுக் கல்லூரி அதிபர் சேகுல் பலாஹ் அப்துல்லாஹ், 12 மாணவர்களுக்கு தலைப்பாகை அணிவிப்பார். சிறப்பு மலரொன்றும் இவ் விழாவில் வெளியிடப்படும்.

(ளி)

# மாணவிகள் தற்கொலை; பெரும் அச்சத்தில்பெற்றோர்

கண்டி,ஜூலை30

புசல்லாவைச் சேர்ந்த மாணவிகள் நால்வர் தொடர்ச்சியாகத் தற்கொலை செய்து கொண்டனர். இதையடுத்து இப்பகுதி பெற்றோர் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்து பெரும் அச்சம் கொண்டுள்ளனர்.

எனவே, மத்திய மாகாண தமிழ்க்கல்வி அமைச்சர் அனுஷியா சிவராஜாவும், மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவும் இது தொடர்பாக ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ்.இராஜரட்ணம் வேண்டு கோள் விடுத்தார்.

மாகாணசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் பள்ளேகலவில் நடைபெற்றது. இதன்போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:- புசல்லாவையில் காரணங்களின்றி மாணவிகள் நால்வர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இதனால் பிரதேசத்திலுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளின் செயற்பாடுகள் தொடர்பில் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ளி)

# கண்டி நகரில் புதிய போக்குவரத்துத் திட்டம் பொலிஸாருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்

## மாநகரசபை உறுப்பினர்கள் தெரிவிப்பு

கண்டி,ஜூலை30

நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி கண்டி மாநகரில் போக்குவரத்து ஒழுங்கமைப்பை மாற்றிய பொலிஸாருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம் - என கண்டி மாநகர சபை உறுப்பினர்களான அஸ்மின் மரிக்கார், அநுரகுமார கோனாவல ஆகியோர் தெரிவித்தனர்

கண்டி ஃபுட்லண்ட் ஹோட்டலில் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில், நீதிமன்ற தீர்ப்புக்கேற்ப நீதிமன்றால் நியமிக்கப்பட்ட பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட வீதிப் போக்குவரத்து நிபுணர் கலாநிதி ஜீ.ஜீ.குருசிங்கவும் கலந்துகொண்டார்.




அஸ்மின் மரிக்கார் தெரிவித்தவை வருமாறு:-

தலதா வீதி பற்றிக் கதைத்தால் அது தடை செய்யப்பட்ட வசனமாகவுள்ளது. மாநகரசபை தலதா வீதியைத் திறப்பதற்கான தீர்மானத்தை இரண்டு தடவை நிறைவேற்றியது. எனினும் அது செயற்படுத்தப்படவில்லை.

கண்டி மாநகர வீதிகள் மாநகர ஆணையாளருக்கு உரியவை. இங்கு பொலிஸாரின் அறிவுறுத்தல்களே விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. இவை மாற்றப்படவேண்டும். மாநகர ஆணையாளருக்கான அதிகாரம் மீறப்படுவதைத் தடுக்க வேண்டும்.

மாநகரசபை வீதிப்போக்குவரத்து குழுவின் தீர்மானம் இங்கு உதாசீனம் செய்யப்படுகிறது. மாநகரசபைக் குழுவோடு பேச வந்த பிரதி பொலிஸ் மா அதிபர், ஆணையாளர் மற்றும் உறுப்பினர்களது ஆலோசனைகளைக் கேட்டபின் இத்திட்டம் ஒத்திவைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

45 நிமிடநேர வீதி நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக 24 மணிநேர நெரிசலை பொலிஸார் ஏற்படுத்தியுள்ளனர் - இப்படி அஸ்மின் மரிக்கார்தெரிவித்தார்.

அநுரகுமார கோனவல தெரிவித்தவை வருமாறு:-

மக்களின் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. மாநகரசபை தீர்மானம் மீறப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு அவமதிக்கப்பட்டுள்ளது. ஆணையாளரின் உரிமைகளை பொலிஸார் கையிலெடுத்துள்ளனர். நிபுணர்குழுவின் பரிந்துரைகள் பின்பற்றப்படவில்லை. கூட்டங்களுக்கு கூட அழைக்கப்பட வில்லை.

இந்த நிலையில் மக்களின் உதவியோடு நீதிமன்றத்தினை அவமதித்ததற்காக உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்படும். இது தொடர்பான கடிதம் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.- என்றார்.

கலாநிதி ஜீ.ஜீ.குருசிங்க தெரிவித்தவை வருமாறு:-

பொலிஸார் மேற்கொண்டுள்ள ஒருவழிப் பாதை ஒழுங்குவிதி நீதிமன்றத் தீர்ப்பை மீறிய செயலாகும். நீதிமன்றம் பெயர் குறித்து ஐந்துபேரை பேராதனை பல்கலைக் கழகத்திலிருந்து நியமித்தது.

அவர்களது ஆலோசனைப்படி வீதி ஒழுங்குமுறையை வில்லியம் கொபல்லாவ மாவத்தையிலும் பேராதனை வீதியிலும் பின்பற்றப் பணித்தது.

பாடசாலை நேரமும், பாடசாலை முடியும் நேரமும் வீதி நெரிசல் உண்டு. இங்கு பயண நேரம் கணிக்கப்பட்டது.

தனியார் மற்றும் போக்குவரத்து சபை பஸ்களை வீதி நடுவில் நிறுத்தாமல் பஸ் தரிப்பிடங்களைச் செய்தல், தபால் காரியாலயத்திற்கு முன்பாக இரண்டுதட்டு மேம்பாலம் அமைத்து வாகனங்களைத் திருப்பல் போன்ற முன்மொழிவுகளை வைத்தோம்.

ஆனால் பொலிஸார் எம்மையும் அழைக்காது கூட்டம் நடத்தி நீதிமன்ற தீர்ப்பையும் மீறிச் செயற்பட்டுள்ளனர்.- இப்படி ரூப சிங்க தெரிவித்தார். (ளி)

# தோட்டத்தொழிலாளர்களின் வாழ்வை முன்னேற்றுவது சவாலான விடயம்

## முதலாளிமார் சம்மேளன ஆலோசகர் ஸ்ரீகுமார் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை30

இலங்கையில் பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவது பெரும் சவாலாகவே இருக்கின்றது - என்று பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் ஆலோசகர் எஸ்.ஸ்ரீகுமார் தெரிவித்தார்.

தோட்டத் தொழில்துறையின் இன்றைய நிலைமை குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு அண்மையில் நுவரெலியாவில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு :-

இலங்கையின் பெருந் தோட்டத்துறையானது சம்மேளனங்களின் தலையீடற்ற துறை. தொழிற்சங்கங்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் துறை. கூட்டுப்பேரம் பேசுதலுக்கு முக்கியத்துவம் வழங்கும் ஒரு துறை.

1998 ஆம் ஆண்டு முதல் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திற்கும், தொழிற்சங்கங்களுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலமாக தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கும் முறை அமுல்ப்படுத்தப்படுகின்றது.

இந்த உடன்படிக்கையின் மூலம் தொழிலாளர்களின் சம்பள விடயமும் ஏனைய சலுகைகள் தொடர்பான விடயங்களும் உறுதி செய்யப்படுகின்றன.

2009ஆம் ஆண்டு இறுதியாக மேற்கொள்ளப்பட்ட கூட்டொப்பந்தத்தின் மூலம் தொழிலாளர்களின் நாட்சம்பளம் 405 ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அடிப்படைச் சம்பளமாக 285 ரூபாவும், ஊக்குவிப்பு கொடுப்பனவுகளாக நிபந்தனைக்கு உட்பட்ட 30 ரூபாவும், 90 ரூபாவும் வழங்கப்படுகின்றது.

மேலும், இவர்கள் தமது மாதாந்த வருமானத்திற்கு மேலதிகமாக மாதம் 1,500 ரூபா சலுகையை அனுபவிக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும், தோட்டத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதும், அவர்களை வறுமை நிலையிலிருந்து மீட்பதும் பெரும் சவாலாகவே உள்ளது. பெருந்தோட்டத்துறையைப் பாதுகாப்பது அனைத்துத் தரப்பினரதும் கடப்பாடாகும் - இப்படி ஸ்ரீ குமார் தெரிவித்தார். (ளி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அனலைதீவு நயினாகுளம் ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயத் தேர்த்திருவிழாவின் போது சுவாமி தேருக்கு எழுந்தருளிவருவதையும் அடியார்கள் புடைசூழ தேரில் சுவாமி வீதியுலா வருவதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்: தென்னவன்)*


மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தின் பத்தாம் நாள் திருவிழாவில் சுவாமி வீதி உலா வரும் காட்சியைப் படங்களில் காணலாம்.
*(படங்கள்: நேசன்)*











நல்லூர் பால கதிர்காமம் ஆலய ஆடிவேல் விழாவையொட்டி தேர்ப் பவனி நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப் பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பால கதிர்காமம் ஆலயத்திலிருந்து ஐராவதம் யானை பூரண கும்பம் தாங்கி ஊர்வலம் வருவதை முதலாவது படத்திலும் நவ வீரர்கள் வீதியுலா வருவதையும் வேல் ரத பவனியையும் இறுதி இரண்டு படங் களிலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன், நேசன்)*




Your Future
**STUDY in UK**
UKRAINE, NEWZELAND, INDIA, CYPRUS
INTAKES @ August, September, October

- MBBS, MS, MD [Ukraine, India]
- COMPUTING & IT
- BUSINESS & MANAGEMENT
- ACCOUNTING & FINANCE
- TRAVEL & TOURISAM
- DESIGNING & ARCHITECTURE
- ENGINEERING
- HOTEL MANAGEMENT
- LANGUAGE & EDUCATION

**Also Handling :**
* Tourist Visa
* Visit Visa
* Dependent Visa
* Administrative Review
* Re-Apply

**Our Services for Students :**
* Visa Consulting
* Career Advice
* Scholarship
* Accommodation
* Air Ticket
* Airport Pick-Up
* Part Time Jobs

**Note**
Conditional Offer and CAS Statement Within 5 Days

Minimum Entry Qualification : O/L or Equivalent

SPONSOR களுக்கான ஆலோசனைகள் வழங்கப்படும்

SIEG
SRIRAM INTERNATIONAL EDUCATION GROUP

**111 / 2, Brown Road, Kokuvil East, Jaffna.**
**Tel - 021- 2221875**
Head Office : 169, George R De Silva Mawatha, Kotahena, Colombo-13.
Tel: 011-2434989 Fax: 011-24347[illegible]
After Office Hours & Sundays Please Contact 077 3592612


## சகல செல்வங்களையும் அருள்பவள் சக்தி

உயிர்களின் பிறப்புக்கு மூல காரணமாக இருப்பவள் தாய், தாய்த்தெய்வமே சக்தியாவாள். சிவமின்றிச் சக்தியில்லை என்பது மெய்யடியார்களின் முடிவாகும். சக்தியானவள் இறைவனது சரிபாதி வடிவிலே அர்த்தநாரீஸ்வரராக வீற்றிருந்து அடி யார்களுக்கு அருள்பாலிக்கின்றாள்.

இற்றைக்கு ஏறக்குறைய நாலாயிரம் வருடங்களுக்கு முன்பு சிந்துவெளிப் பிர தேசத்தில் வாழ்ந்த மக்கள் சக்தி வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர் என்பது அகழ் வாராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. சிவனைத் தந்தையாகவும் சக்தியைத் தாயா கவும் இணைத்து வழிபடுதலும் மரபு.

நாம் காணும் உலகம் கண்ணுக்கு எட்டாத, பரந்து விரிந்த அண்டம். அலை பாயும் கடல், வானுயரும் மலைகள், காற்று, ஆகாயம் எல்லாவற்றின் ஆக்கத்திற்கும் அவை களின் இயக்கத்துக்கும் காரணமானவள் சக்தியே. சிவன் வேறு சக்தி வேறு அல்ல. சிவனும் சக்தியும் ஒன்றே. அறிவு நிலை சிவம். இயக்க நிலை சக்தி.

**ஞானக்கதிர்**

நான்கு வேதத்தில் முதன்மை வேதமாகிய இருக்கு வேதத்தில் பெண் தெய்வம் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. 'தேவி ஆக்தம்' என்ற பகுதியில் உஷஸ், இராத்ரி, அதிதி, வாசி, புரங்கி, சிசசு, ஈனா, வாருணி ஆகிய பெண் தெய்வங்கள் பற் றிக் கூறப்பட்டுள்ளன. இதனால் வேத காலத்துக்கு முன்பே சக்தி வழிபாடு இருந்துள்ளது என்பது வெளிப்படை.

சக்தியை நினைந்து மனமுருகி வழிபடுபவர்களுக்குச் சகல செல்வங்களையும், யோகங்களையும், பெருவாழ்வையும் அளிப்பாள் என ஆதி சங்கர் என்னும் சக்தியை வழிபாடு செய்த மெய்யடியார் தான் இயற்றிய சௌந்தர்யலகரி என்னும் நூலில் கூறி யுள்ளார்.

சீர்காழியிலே ஞானக்குழந்தை திருஞானசம்பந்தர் தந்தையைக் காணாது 'அம் மையே அப்பா...' என அழுதபோது சிவனுடன் தோன்றி, தனது ஞானப்பாலை ஊட்டி யருளி, ஞானக்குழந்தையாக மிளிரச் செய்தவர் சக்தியே.

அறிவும் ஆற்றலும் இணைந்ததே பரம்பொருள். அறிவு சிவன். ஆற்றல் சக்தி. அறிவு சதாசிவனாகவும், பரமசிவனாகவும் தந்தையாகவும் ஆற்றல் பராசக்தியாகவும் ஆதிசக்தியாகவும் தயாகவும் வழிபாடுகள் செய்கின்றார்கள் மெய்யடியார்கள்.

சக்தியானவள் பராசக்தி, பார்வதி, துர்க்கை, திருமகள், சரஸ்வதி, காளி, பவானி, புவனேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, லலிதாமகா சுந்தரி எனப் பல வடிவங்களில் அடிய வர்களுக்கு அருள்பாலிக்கின்றாள்.

அன்னை மேலும் காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, கௌரியம்மை, மாதுமையாள் எனவும் இவற்றைப்போல் ஒவ்வொரு ஆலயங்களிலும் வெவ்வேறு பெயர்களிலே வழிபடப்படுகின்றாள்.

அன்னைத் தாய் அருளால் உலகில் நன்மைகள் நிகழ்கின்றன. நோய்கள் தீர்ப்பவள் அவளே. [illegible] போக்குபவள் அவளே. அவள் தனம் தருவாள், தளர்வறியா மனம் தருவாள், நல்லன எல்லாம் தருவாள். அன்னை தாள் பணிந்து அருள்பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் திருத்தலம்



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

வழிபடுவோர் சபையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனையும் வருடம் முழுவதும் புராண படனம் (கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், திருவாதவூரார் புராணம்) என்பன நடைபெறுகின்றன.

தேவார முற்றோதல், திருவாசக முற்றோதல், பிள்ளையார் கதை படித்தல் ஆகியவையும் வருடந்தோறும் மாணவர்களிடையே சமய அறிவுப்போட்டிகள், திருமுறை ஓதற் போட்டிகள், சமய பொது அறிவுப் போட்டிகள், மாலை கட்டும் போட்டிகள் போன்றவை நடத்தப்படுகின்றன. அத்துடன் சபையின் அனுசரணையுடன் பண்ணிசை வகுப்பும், சமயம் சம்பந்தமான பொது நூல் நிலையமும் நடத்தப்பட்டு வருகின்றன. தென்மராட்சி பிரதேசத்திலே தினமும் பூஜை வேளைகளில் பிள்ளையாருக்கு மோதக நைவேத்தியம் என்பன படைத்து பூசைகள் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

ஆலய பூஜைகள் தொன்று தொட்டு சைவக் குருமாரினாலேயே நடத்தப்பட்டுவருகின்றன. உடுவில் குருக்கள், குமாரசுவாமிக் குருக்கள், நடேச ஐயர், கணபதிப்பிள்ளை ஐயர், பாலசுந்தரக் குருக்கள், கந்தவேள் குருக்கள், வேலுப்பிள்ளை ஐயர் என்போர் நித்திய பூஜைகளை விதிமுறை தவறாது மேற்கொண்டு வருகின்றனர். ஆலய பிரதம சிவாச்சாரியாராக வேதாகம சோதிட பூசணம் சிவாச்சாரிய திலகம், சிவாகமபூசணம், சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் மேற்கொண்டு வருகிறார்.

கொடுக்கள் விதானை வழித்தோன்றல் தங்கமுத்துவினால் ஆரம்பிக்கப்பட்ட இராஜகோபுரப் பணிகள் 2003ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 2006.06.16ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. ஆலயப் பணிகள் மீண்டும் புனரமைக்கப்பட்டு 04.06.2010இல் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. *(முற்றும்)*

---

தொகுப்பு: ஜெயந்தன்






# சாவகச்சேரி குழந்தை யேசு முன்பள்ளி

முன்னைய காலங்களில் சிறார்களின் ஆரம்பக்கல்வி பாடசாலைகளிலேயே ஊட்டப்பட்டு வந்தன. சகல பாடசாலைகளிலும் அரிவரி வகுப்புகளில் மாணவர்கள் சேர்க்கப்பட்டு கல்வி புகட்டப்பட்டு வந்தது.

காலப்போக்கில் அரசாங்கத்தினால் பாடசாலைகளில் ஐந்து வயதில் மாணவர்களை தரம் 1 வகுப்பில் இணைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டதையடுத்து பாடசாலைகளில் அரிவரி வகுப்பு முறை நீக்கப்பட்டது. அத்துடன் 4 வயதில் ஆரம்பக்கல்வி புகட்ட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டு முன்பள்ளி கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து ஒவ்வொரு கிராமங்களிலும் முன்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு சிறார்களுக்கு ஆரம்பக் கல்வி புகட்டப்பட்டது.

அவ்வேளையில் சாவகச்சேரி வாழ் கத்தோலிக்க சிறார்களுக்கு ஆரம்பக்கல்வி போதிக்க கடந்த 2000.01.16ஆம் திகதி குழந்தை யேசு முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி ஆனந்தகுமார் அடிகளின் உதவியுடன் தேவாலய வின்சன் டிபோல் சபையினரால் முன்பள்ளி நிறுவப்பட்டது. தேவாலய வளாகத்தில் 16' x 32' விஸ்தீரணமான கட்டடம்நிர்மாணிக்கப்பட்டு முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பிக்க முதல் நாளே இந்த முன்பள்ளியில் 20 சிறார்கள் இணைந்து கொண்டனர். முன்பள்ளி ஆசிரியையாக செல்வி ஆன் பமீலா நியமிக்கப்பட்டார். முன்பள்ளிக்கு அருகில் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டது. அருட்பணி ஆனந்தகுமார் அடிகளின் முயற்சியினால் கியூடெக் நிறுவனத்தினரால் முன்பள்ளிக்குரிய தளபாடங்கள் வழங்கப்பட்டன.

2000 மே மாதம் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் மக்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியிருந்த வேளையில் பொன்னகரில் குழந்தையேசு முன்பள்ளி தற்காலிகமாக இயங்கியது. யுத்த அனர்த்தங்களின்போது முன்பள்ளிக் கட்டடம் முழுமையாகச் சேதமடைந்த நிலையில் இருந்ததை மீளக் குடியமர்ந்த மக்கள் கண்டனர்.

அவ்வேளையில் பங்குத் தந்தையாக பொறுப்பேற்ற அருட்பணி ரவிச்சந்திரன் அடிகள் சேதமடைந்த தேவாலயக் கட்டடத்துடன் குழந்தை யேசு முன்பள்ளி கட்டடத்தினையும் புனரமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டார். சேதமடைந்த முன்பள்ளி கட்டடத்தினை வின்சன் டி போல் சபையினர் புனரமைத்து வழங்கினர். கட்டடம் புனரமைக்கும் வரை முன்பள்ளி சிறார்களுக்கு தேவாலய முன் மண்டபத்திலும் மர நிழலிலும் கல்வி புகட்டப்பட்டன. செல்வி நளாயினியும் செல்வி ஜயசீலியும் ஆசிரியர்களாக பணிபுரிந்தனர்.

புனரமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடம் 2003டிசெம்பர் மாதம் வின்சன் டிபோல் சபையின் மத்திய சபைத் தலைவர் அமலரத்தினம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 2004ஆம் ஆண்டு தொடக்கம் யேசு சபை அகதிகள் பணி (J.R.S) நிறுவனத்தினர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனம் மற்றும் பயிற்சியினையும் உபகரணங்களையும் வழங்கி வருகின்றனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராசா ரவிராஜ் 2005ஆம்ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் முன்பள்ளி விளையாட்டு முற்றத்தில் சுழல் ராட்டினம், சீசோ ஆகியவை அமைக்கப்பட்டன. 2006இல் பெரிய மாவடி கடற்றொழிலாளர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட மேசை, கதிரைகள் ஆகியவற்றை முன்பள்ளிக்கு அன்பளிப்பாக வழங்கினர். 2007இல் சமூக சேவைகள் அமைச்சினால் வாங்குகள், கதிரைகள், அலுமாரி, மேசை ஆகியவற்றை வழங்கினர். சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினர் முன்பள்ளி விளையாட்டு முற்றத்தினை முற்றாக புனரமைத்து வழங்கினர். *(தொடரும்)*

தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுதி முன்னோடிப் பரீட்சை - 2010, ஜூலை

## கேம்பிரிட்ஜ் கல்வி நிலையம், கண்டி.

**உயிரியல்** Two Hours

### பகுதி A - அமைப்புக்கட்டுரை வினாக்கள்

01. A. 1) முதன்முதலாகக் கலக்கொள்கை ஒன்றை முன்மொழிந்த உயிரியலாளரின் பெயரை எழுதுக.

2) முதன்முதலாக முன்மொழியப்பட்ட கலக்கொள்கையின் எண்ணக்கரு யாது?

3) பிந்திய காலங்களில் முன்மொழியப்பட்ட மற்றும் கலக்கொள்கைக்குரிய எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

4) விஞ்ஞான முறையின் பிரதான படிகளை வரிசைக்கிரமத்தில் எழுதுக.

B. 1) ஒளி நுணுக்குக்காட்டியை விட இலத்திரன் நுணுக்குக்காட்டி எந்த வகையில் அனுகூலம் உடையது?

2) இலத்திரன் நுணுக்குக்காட்டியின் பிரிவலு ஒளிநுணுக்குக் காட்டியிலும் எத்தனை மடங்கு?

3) ஒரு மாணவன் ஒளி நுணுக்குக்காட்டியின் தாழ்வலு பொருளியின் (×50) பார்வைப் புலத்தின் விட்டம் 4mm எனத் துணிந்தான். ஒரு மாதிரி உயர் வலுப் பொருளியின் (×1000) கீழ் அவதானிக்கப்பட்டபோது அது பார்வைப் புலத்தின் 1/4 ஆகத் தென்பட்டது. அவதானித்த மாதிரியின் பருமனை μm இல் துணிக.

4) மேலே அவதானிக்கப்பட்ட மாதிரியினது பருமனை ஒத்த சராசரிப் பருமனுடைய கலவகையைப் பெயரிடுக.

5) வெற்றுக்கண்ணால் அவதானிக்கக்கூடிய உயிர்க்கலம் ஒன்றைப் பெயரிடுக.

6) இருவித்திலைத் தாவரத்தண்டு ஒன்றின் வெட்டுமுகத்தை அனிலீன் சல்பேற்றினால் நிறமூட்டி நுணுக்குக்காட்டியின் கீழ் அவதானிக்கும்போது நிறமேற்றப்பட்டிருக்கும் அடிப்படை இழையவகைகள் இரண்டினையும் பெயரிடுக.

C. 1) இயூக்கரியோற்றாக் கலக் குழியவுருவினுள் புதைந்திருப்பதும் தனிமென்சவ்வால் சைற்றோசொல்லிலிருந்து உள்ளிடம் ஒன்றைப் பிரித்து வைப்பதுமான கட்டமைப்புகள் யாவும் ஒன்றாக அகமென்சவ்வுச் சிக்கல் தொகுதி என அழைக்கப்படும். இத்தொகுதிக்குரிய அடிப்படைக் கட்டமைப்புகள் மூன்றைப் பெயரிட்டு ஒவ்வொரு தொழிலைக் குறிப்படவும்.


| கட்டமைப்பு | தொழில் |
|---|---|

2) இயூக்கரியோற்றாக் கலங்களில் காணப்படும் இழைமணிகள் எதிலிருந்து வருவிக்கப்பட்டவை?

3) C (2) இல் நீங்கள் குறிப்பிட்ட விடைக்கான சான்றுகள் யாவை?

4) தசைக்கலங்களில் கல்சியம் அயன்களைச் சேமிக்கும் உபகலக் கட்டமைப்பைப் பெயரிடுக.

D. உயிரியலுக்குரிய மாமூலக்கூறு ஒன்றின் ஒரு பகுதியின் படம் கீழே தரப்பட்டுள்ளது.





1) படத்தில் P-Q வரை குறிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பெயரிடுக.

2) பிறப்புரிமைப் பரிபாடை (Genetic Code) என்றால் என்ன?

3) பிறப்புரிமைப் பரிபாடையில் எத்தனை வகை வேறுபட்ட கோடோன்கள் காணப்படும்?

4) இலற்றோசுக் கரைசல், குளுட்டமிக் அமிலம், இன்வெற்றேசு நொதியம் அடங்கிய பெயர் குறிப்பிடப்படாத போத்தல்கள் மூன்று தரப்பட்டுள்ளன. இவற்றை இரசாயன முறையில் எவ்வாறு பிரித்தறிவீர் என்பதைக் குறிப்பிடவும். ( போதியளவு சோதனைக் குழாய்கள், பெனடிக் கரைசல், செப்புசல்பேற்றுக் கரைசல், 10%KOH) கரைசல், பன்சன் சுடரடுப்பு என்பன வழங்கப்பட்டுள்ளன. )

2. A. மனிதனின் சுவாசத்தொகுதியின் கட்டமைப்புத் தொடர்பான சில படங்கள் கீழே தரப்பட்டுள்ளன.




1) 1. A-E வரையான பகுதிகளைப் பெயரிடுக.

2. B இனது சுவரை அணையிடும் மேலணியைப் பெயரிடுக.

3. B இனது சுவரைத் தாங்கும் இழையவகையைப் பெயரிடுக.


2) மனிதனின் குருதியில் காபனீரொட்சைட்டு கடத்தப்படும் பிரதான வடிவம் யாது?

3) சுவாச மரம் சுவாச அங்கமாகக் காணப்படும் விலங்குகள் அடங்கும் கணத்தைப் பெயரிடுக.

4) வகுப்பு Crustacea உயிரிகளின் சுவாச நிறப்பொருள் யாது?

5) குருதிகலன் செறிவற்ற முக்கிய சுவாச அங்கம் ஒன்றைப் பெயரிட்டு அவ் அங்கம் காணப்படும் விலங்கு வகுப்பு ஒன்றையும் பெயரிடுக.

B. மனிதனின் நுரையீரல் கனவளவுகள் / கொள்ளளவுகள் கீழே வரைபு ஒன்றில் தரப்பட்டுள்ளன.




1) S, T, R எனக் குறிக்கப்பட்டுள்ள கனவளவுகள் / கொள்ளளவுகளைப் பெயரிடுக.

2) P, Q ஆகிய கனவளவுகளின் பெறுமானங்களை ml இல் குறிப்படுக.

3) சாதாரண சுவாசவட்டம் ஒன்று எத்தனை விநாடிகள் நீடிக்கும்?

4) வரைபில் உடற்பயிற்சியின் போது நுரையீரல் காற்றூட்டலில் காணப்படும் மாற்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

5) இறந்த வெளி என்றால் என்ன?

6) வற்றுப்பெருக்கு வளியின் என்ன சதவீதம் சுவாசப்பைகளைச் சென்றடைகின்றது?

C. 1) அகஞ்சுரக்கும் தொகுதியின் ஒட்டுமொத்தத் தொழில் யாது?

2) கீழ்க்காணும் தொழில்களுக்குப் பொறுப்பான முக்கிய ஓமோனைப் பெயரிடுக.

1. மனித குருதி கல்சியம் மட்டத்தை அதிகரிக்கச்செய்தல்

2. மனித குருதிக் குளுக்கோசு மட்டத்தைக் குறைக்கச்செய்தல்

3. வன்கூட்டுத்தசைக் கலங்களில் புரத உடைவைத் தூண்டுதல்

4. மஞ்சட் சடலத்தின் விருத்தியைத் தூண்டுதல்

5. மனித முளையத்தின் கலப்பிரிவைத் தூண்டுதல்

3) மனிதனின் சாதாரண உடல் வெப்பநிலையைக் குறிப்பிடுக.

4) மனித உடல் வெப்பநிலை உயர்வடையச்செய்வதில் பங்கேற்கும் ஓமோன்கள் இரண்டும் யாவை?

5) ஒரேவெப்பத்தை சீராக்கும் மூளையின் பகுதியைப் பெயரிடுக.

6) ஒரேவெப்பமுள்ள விலங்குகளை உள்ளடக்கும் வகுப்புகள் இரண்டைப் பெயரிடுக.

D. 1) மனித ஈரலின் அமைவிடத்தைக் குறிப்பிடுக.

2) மனித ஈரல் புரியும் ஒருசீர்திடநிலை தொடர்பான தொழில்கள் மூன்றைக் குறிப்பிடவும்.

3) மனித ஈரலின் புறஞ்சுரக்கும் சுரப்பு யாது?

யாழ், கொழும்பு, கண்டி பிரபல ஆசிரியர்களின் இறுதி மாதிரி வினாத்தாள்கள் இன்றுமுதல் வெளிவருகின்றன.

நேரடித் தொடர்புகளுக்கு:
ஆசிரியர்,
S.H.A.மௌலானா BSc,
கேம்பிரிட்ஜ் கல்விநிலையம்,கண்டி.
தொ.பே.இல: 077-3299706

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரியல், பகுதி II: தொடர்ச்சி......

4) நீங்கள் குறிப்பிட்ட சுரப்பு எங்கே சேமிக்கப்படும்?

5) நீங்கள் குறிப்பிட்ட சுரப்பின் விடுவித்தலைத் தூண்டும் ஓமோனைப் பெயரிடுக.

6) மனித ஈரலில் சேமிக்கப்படும் ஒரு மாமூலக்கூறைப் பெயரிடுக.

7) மனித ஈரல் கலங்களில் தொகுக்கப்படும் திரளல் காரணி ஒன்றைப் பெயரிடுக.

8) மனித ஈரல் கலங்களைத் தாக்கும் தனிக்கல ஒட்டுண்ணி இனம் ஒன்றைப் பெயரிடுக.

03\. A. 1) உயிரினக் கூட்டம் (Biome) என்றால் என்ன?

2) கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரதேசங்கள் உலகின் எந்தப் பிரதான உயிரினக்கூட்டத்திற்குரியது என்பதைக் குறிப்பிடுக.




3) உலகின் உயிரினக் கூட்டங்களின் பரம்பலைத் தீர்மானிக்கும் முக்கிய கால நிலை சாராமாறியைக் குறிப்பிடுக.

4) இலங்கையில் காணப்படாத பிரதான அயனமண்டல உயிரினக் கூட்டம் எது?

5) உலகில் மிகவும் பெரிய இடைவெப்பப் புல்வெளியைப் பெயரிடவும்.

B. 1) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு பிரகடனம்/வுரைவேடு என்பவற்றின் முக்கிய நோக்கங்களைக் குறிப்பிடுக.

1. மொன்றியல் வரைவேடு
2. ரம்சா பிரகடனம்
3. மாபோல் பிரகடனம்
4. CITES

2) அமில மழைக்குப் பொறுப்பான முக்கிய பதார்த்தங்கள் இரண்டினைப் பெயரிடுக.

3) நீங்கள் குறிப்பிட்ட பதார்த்தங்களின் பிரதான மூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக

4) அமிலமழையின் விளைவாக ஏற்படக்கூடிய தீய பக்கவிளைவுகள் இரண்டைக் குறிப்பிடுக.

5) அமிலமழை தவிர்ந்த பூகோளப் பிரச்சினைகள் இரண்டைக் குறிப்பிடுக.

C. 1) IUCN அரிய வர்க்கங்களுள் அச்சுறுத்தலுக்கு உள்ளானவற்றைக் குறிப்பிடுக.

2) நீங்கள் குறிப்பிட்டவற்றுள் முதலில் அழிந்துபோகக்கூடியது எது?

3) நீங்கள் குறிப்பிட்டவற்றுள் எதில் கீழே தரப்பட்டுள்ள இலங்கைத் தீவுக்கு உரிய அங்கிகள் அடங்கும்?

1. யானை
2. தேவாங்கு

4) உள்நாட்டுக்குரிய இனம் என்றால் என்ன?

5) இலங்கைத் தீவுக்குரிய உள்நாட்டினமாகக் கருதப்படும் தாவர இனம் ஒன்றைப் பெயரிடுக.

6) தீவுகளில் வாழும் அங்கிகளின் உள்நாட்டுக்குரிய இயல்பைக் குறைக்கும், அவை காண்பிக்கும் அம்சங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

D. 1) புவிமீது முதல் உயிரி தோன்றியதாக நம்பப்படுவது எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர்?

2) முதல் உயிர் எவ்வகைப் போசணைமுறை ஒன்றைக் கொண்டிருந்ததாக நம்பப்படுகிறது?

3) வளிமண்டலத்திற்கு முதன்முதலில் ஒட்சிசனை ($O_2$) விடுவித்ததாக நம்பப்படும் அங்கிக் கூட்டத்தைப் பெயரிடுக.

4) எத்தனை மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஓசோன் படை தோன்றியதாக நம்பப்படுகிறது?

5) இறுதியான பேரழிவு ஏற்பட்டதாக நம்பப்படும் யுகத்தைப் பெயரிடுக.

6) இறுதியான பேரழிவின்போது அழிந்தொழிந்ததாக நம்பப்படும் முள்ளந்தண்டிலி விலங்குக் கூட்டத்தைப் பெயரிடுக.


7) 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் அழிந்தொழிந்ததாக நம்பப்படும் ஒரு விலங்குக் கூட்டத்தைப் பெயரிடுக.

8) இலங்கைக்குரிய எச்ச இனங்களுள் முள்ளந்தண்டுளி ஒன்றைப் பெயரிடுக.

9) உயிர்ப்பல்வகைமையைக் காப்பதற்குரிய

1. உள்நிலைக் காப்புமுறை ஒன்றைப் பெயரிடுக.
2. வெளிநிலைக் காப்புமுறை ஒன்றைப் பெயரிடுக.

04\. A. பச்சையவுருவம், இழைமணி என்பவற்றின் விளக்கப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன.




1) P-T வரையான பகுதிகளைப் பெயரிடுக.

2) R இல் நிகழும் முக்கிய தாக்கத்தைப் பெயரிடுக.

3) T இல் நிகழும் முக்கிய தாக்கத்தைப் பெயரிடுக.

4) நீங்கள் மேலே குறிப்பிட்ட தாக்கங்களுக்கு இடையிலான முக்கிய வேறுபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

| R இல் நிகழும் தாக்கம் | T இல் நிகழும் தாக்கம் |
|---|---|
| | |

5) Q இல் நீர் மூலக்கூறுகள் தாக்கியாக பங்குபற்றும் தாக்கத்தின் சமன்பாட்டை எழுதுக.

B. 1) ஒளித்தொகுப்பின் முதன்மை இலத்திரன் வழங்கியாகச் செயற்படும் சேவையைப் பெயரிடுக.

2) ஒளித்தொகுதி I இல் காணப்படும் பிரதான குளோரபில் a வகையைப் பெயரிடுக.

3) $O_4$ தாவரங்களில் முதன்மை $CO_2$ வாங்கிச் சேர்வையைப் பெயரிடுக.

4) $C_3$ தாவரங்களின் $CO_2$ ஈடுசெய் புள்ளியின் பெறுமானம் யாது?

5) பகல் பொழுதில் தரைத் தாவரங்களில் வழக்கமாக ஒளித்தொகுப்பை எல்லைப்படுத்தும் காரணி எது?

C. 1) நிர்ப்பீடனம் என்றால் என்ன?

2) நிர்ப்பீடனப் பொறிமுறையில் முக்கிய கருமமாற்றும் குருதிக் கலவகையைப் பெயரிடுக.

3) நீங்கள் குறிப்பிட்ட கலவகை சுரக்கும் பதார்த்தத்தைப் பெயரிடுக.

4) சிசு தாய்ப்பால் மூலம் பெற்றுக்கொள்ளும் நிர்ப்பீடனம் எவ்வகையைச் சேர்ந்தது?

5) தொட்சினுரு என்றால் என்ன?

D. 1) ஆழ்கடலில் மாத்திரம் பயன்படுத்தப்படும் மீன்பிடி சாதனம் ஒன்றைப் பெயரிடுக.

2) சாதாரண கெண்டையை ஏனைய உள்நாட்டுக்குரிய நன்னீர் வளர்ப்பில் பயன்படுத்தப்படும் செட்டைமீனினங்களில் இருந்து பிரித்தறிய உதவும் முக்கிய இயல்பு ஒன்றைக் குறிப்பிடுக.

3) நீண்ட இழைகள் இரண்டு உடைய அலங்கார மீன் ஒன்றைப் பெயரிடுக.

4) நைல் திலாப்பியாவின் உணவு யாது?

5) இலங்கையில் *Penaeus indicus* பொதுவாக வைப்புச்செய்யப்படும் நீர் வளர்ப்பு முறையைப் பெயரிடுக.

### பகுதி B - கட்டுரை வினாக்கள்

* நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

01\. மனித முளையத்தின் கலவட்டத்தின் கட்டங்களைச் சுருக்கமாக விவரித்து அதன் இழையுருப்பிரிவின் நிகழ்ச்சிகளை விளக்குக.

02\. கணம் Mollusca அங்கிகள் பற்றி ஓர் உரை எழுதுக.

03\. பொதுமைப்பாடான இருவித்திலைத் தாவர இலை ஒன்றின் உருவம், கட்டமைப்பு என்பவற்றை விவரித்து அவ்விலையானது அதன் தொழிலுக்காக எவ்வாறு நன்கு இசைவாக்கப்பட்டுள்ளது என்பதையும் விவரிக்குக.

04\. மனித சிறுநீரகத்தி ஒன்றின் நுண்கட்டமைப்பை விளக்கிக் கூறி மனிதனில் சிறுநீர் உற்பத்தி எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விவரிக்குக.

05\. இலங்கையின் கண்டல் காடுகள் பற்றி ஓர் உரை எழுதுக. அதில் காட்டின் அமைவு, பௌதிகச் சூழல், தாவர வகைகளின் சூழலுக்கான இசைவாக்கங்கள், காட்டின் முக்கியத்துவம் என்பன உள்ளடக்கப்படவேண்டும்.

06\. பின்வருவனபற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.

1) சிறுவில்லடியவுண்மை. 2) பற்சுகாதாரம்.
3) கோலியுரு அங்கிகள்.

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

### மேடம்



பழைய நண்பர் ஒருவர் மூலம் புதியவர்களின் நட்பு கிடைக்கும். லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். அரசியல் தொடர்புடையவர்கள் அலைச்சல்களுக்கு ஆட்படலாம். பெண்கள் குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். அடமானமாக வைத்த பொருட்களை மீட்கலாம். விருப்பமான உணவுகளை சாப்பிடுவீர்கள்.

### இடபம்




சில விஷயங்களில் கருணை, பிரிவு மனப்பான்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழிலில் தேக்க நிலைமை மாறி சுறுசுறுப்பு கூடும். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். கடன் பிரச்சினைகளை மாற்றி அமைப்பீர்கள். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க வெளியூர் செல்லலாம்.

### மிதுனம்



முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். வெளியிடங்களுக்கு செல்லும் போது, உறவினர் அல்லது நண்பர் ஒருவரை எதிர்பாராமல் பார்க்கலாம். தாய் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். தொழில் ரீதியான வெளியூர் பயணங்கள் செல்லலாம். பக்தி நாட்டம் அதிகரிக்கும்.

### கடகம்



பிள்ளைகள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். வரவுகள் வருவதற்கு முன்பே செலவுகள் காத்திருக்கும். முக்கியமான ஒருவரை தொடர்பு கொண்டு பேச முற்பட்டு அவர்கள் கிடைக்காமல் போகலாம். தந்தையின் செயற்பாடுகளால் எரிச்சல், கோபம் அடையலாம். எங்காவது வெளியில் செல்லும் நேரத்தில் யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம்.

### சிங்கம்



நோய் உபாதைகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். இடம், பூமி வாங்கப் போட்ட திட்டங்கள் தள்ளிப் போகலாம். எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வீர்கள். உறவினர்கள் பகை வராமல் இருக்க பேச்சுக்களை தவிர்க்க வேண்டியது அவசியம். பெண்கள் பிறந்த வீட்டில் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சியடைவர்.

### கன்னி



சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என, கலக்கம் அடையலாம். உங்களின் தனிப்பட்ட ரகசியங்களை மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம். கோபித்துக் கொண்டு சென்ற உறவினர் ஒருவரிடம் நீங்களே வலியச் சென்று பேசுவீர்கள். குழந்தைகளின் செயற்பாடுகளால் பெருமை அடைவீர்கள். மற்றவர்களுக்காக பிணை கொடுப்பீர்கள்.

### துலாம்



கடனாக வாங்கிய பணம் ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள். வெளிநாட்டு பயண முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு பேசலாம். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். மற்றவர்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்க வேண்டாம்.

### விருச்சிகம்



நினைத்த காரியம் ஒன்றை நிறைவாக செய்து முடிப்பீர்கள். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். கடனாக, கைமாத்தாகக் கொடுத்த பணம் திரும்ப வரும். நண்பர்கள் சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம். குறுக்கு வழி சிந்தனைகளைத் தவிர்த்து எதிலும் நேர் வழியில் செயற்படுவீர்கள். செல்வாக்குக் கூடும்.

### தனுசு



தெரியாமல் ஒரு காரியத்தில் இறங்கி விட்டு, பின்னர் அதிலிருந்து பின் வாங்கலாம். எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சகோதரிகள் வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். அயலார் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வர். குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகளை விமர்சிப்பீர்கள்.

### மகரம்



ஒரு செலவை நினைத்து கவலைப்படும் நேரத்தில் மற்ற செலவு உருவாகலாம். சிரமப்பட்டு செய்த சில வேலைகளுக்கு பலன் கிடைக்காமல் போகலாம். உங்களின் தொழில் ரீதியான பணிகளை மேலதிகாரிகள் விமர்சிக்கலாம். தொடங்கிய வேலை ஒன்றை பாதியில் விட்டு, விட்டு வேறு வேலைகளில் ஈடுபடுவீர்கள்.

### கும்பம்



கணிசமான பணச் செலவுகளைச் சந்திக்கலாம். பணிபுரிவோர் தேவையற்ற அலைக்கழிப்புகளுக்கு ஆட்படலாம். கைநழுவிப் போனதாக நினைத்த வாய்ப்புகள் மீண்டும் வந்து சேரலாம். உங்களைப் பயன்படுத்தி மற்ற சிலர் காரியம் சாதிக்கலாம். வீட்டை சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

### மீனம்



உறவினர்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். குறைந்த செலவில் முடியுமென நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே பிரச்சினை வராமல் கோபம், வேகத்தைத் தவிர்க்க வேண்டும். வெளியூர் பயணங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். கனவுத் தொல்லையுண்டு.

---


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100%சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

**றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்**

PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 42
திகதி - 28.07.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: **T** அதிர்ஷ்ட இலக்கம்: **05** வெற்றி இலக்கம்: **2 3 1 7 5**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | T | 05 | 2 3 1 7 5 | ரூ. 14,502,379.00 | - |
| 1 பரிசு | | 05 | 2 3 1 7 5 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | | | 2 3 1 7 5 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | | | 3 1 7 5 | ரூ. 10,000.00 | 27 |
| 4 பரிசு | | | 1 7 5 | ரூ. 1,000.00 | 264 |
| 5 பரிசு | | | 7 5 | ரூ. 50.00 | 2625 |
| 6 பரிசு | | | 5 | ரூ. 20.00 | 25022 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 2 3 1 7 | ரூ. 1,000.00 | 25 |
| 8 பரிசு | | | 2 3 1 | ரூ. 100.00 | 264 |
| 9 பரிசு | | | 2 3 | ரூ. 50.00 | 2637 |
| 10 பரிசு | T | | | ரூ. 20.00 | 10420 |
| 11 பரிசு | T | 05 | | ரூ. 100.00 | 1126 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,869,940.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 14,502,379.00

## கருத்துப் பகிர்வும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

"பேசு பொருளாக இனப்பெருக்க சுகாதாரம்" நூல் வெளியீடும், கருத்துப் பகிர்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். நாவலர் வீதி, தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணியக பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.கதிர்காமநாதன், நெல்லியடி ம.ம.வி அதிபர் செ.சேதுராஜா, யாழ். நீதிமன்ற நீதிபதி அ.ஆனந்தராஜா, தாய் சேய்நல வைத்திய அதிகாரி சி.திருமகள், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் த.கலாமணி, ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதிய மஹாடமாஜ், வட மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராஜா, உளமருத்துவ நிபுணர் சா. சிவயோகன், சாந்திகம் தலைவர் ச. இராசேந்திரன் ஆகியோர் கருத்துக்களைப் பகிர உள்ளனர்.

(ஒ-319)


**விருது பெற்ற இதழியலாளன் ந. வித்தியாதரன் அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்**



கால் நூற்றாண்டு கால இதழியலாளன் தினபதி நாள் இதழில் கால்பதித்து உதயன், சுடர்ஒளி ஆசிரியராகப் பணியாற்றிய பண்பாளன்

**ந. வித்தியாதரன்** அவர்களின் இதழியல் பணி மேலும் பல ஆண்டுகளுக்கு தொடர பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

337-1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 5102

கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை.


## வேலணை பிரதேசசபை- வேலணை
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி: 02.08.2010 முதல் 09.08.2010 பிற்பகல் 1.00 மணி வரை.
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி: 11.08.2010 நண்பகல் 12 மணி வரை.
கேள்வி திறக்கும் திகதி: 11.08.2010 பிற்பகல் 1.30 மணி.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவு தரம் |
|---|---|---|---|
| உப அலுவலக கட்டடத் திருத்தம்- அல்லைப்பிட்டி | 10400.00 | 560.00 | C 10 |
| அம்பலவாணர் வீதி திருத்தம் பகுதி-II (புங்குடுதீவு) | 19500.00 | 560.00 | C 09 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் இக்ராட் தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து எம்மால் கோரப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களின் இரு பிரதிகளை செயலாளர், வேலணை பிரதேசசபை, வேலணை என முகவரியிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விவரத்தை குறிப்பிட்டு எமது அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடல்வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் எமக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி திறக்கும் போது கேள்விக்காரரோ அல்லது அவர் சார்பான பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

பிரதேசசபை, வேலணை.
29.07.2010

(சி/569532)

கெ.ஜெயரத்தினம் தனராசா
செயலாளர், பிரதேச சபை, வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனக்காக வாழ்க

" இதோ இருக்கிறாரே சார்! இவர் மற்றவர்களுக்காக தன்னையே தியாகம் பண்ணுவதற்கு தயாராக இருக்கிறார்" அப்படி யாராவது சொன்னால் அது ஏமாற்று வேலை என்கிறார் பெரியவர். உங்களை நீங்கள் முதலில் கவனியுங்கள் சார். தனக்காக சேவை செய்து கொள்வதுதான் உலக இயல்பு "இன்னொருவருக்கு சேவை செய்வதுதான் நோக்கம்" என்று யாரும் இயங்க முடியாது. தனக்காக வாழ்வதில் 2 வகை உண்டு. அவற்றில் ஒன்று தனது நலனுக்காக மற்றவர் நலனை அழிப்பது, மற்றையது தனக்காக வாழ்வதில் மற்றையவர்களுக்கு பயன் ஏற்படுதல். இதில் இரண்டாவது வகையிலே தனது நலன்களை பாதுகாத்து வளர்ச்சி அடைவதுதான் நல்லது. தனக்காக வாழ்வது மனித இயற்கை என்று சொல்வது தவறாகவும், பண்பாடற்றதாகவும் தெரியலாம். ஆனால் அதுதான் உண்மை என உதாரணம் மூலம் அவர் சொல்கிறார்.

" ஓடும் வெள்ளத்தில் ஒருவன் விழுந்துவிட்டான். அவனை காப்பாற்ற ஓடிய அடுத்தவன் கூட, அடிப்படையில் தனக்கொரு சேவையைத்தான் செய்கிறான். எப்படித் தெரியுமா? அவன் விழுந்தவுடன் அடுத்தவன் மனதில் துன்பம். அதைப் போக்க இவன் வெள்ளத்தில் குதித்து காப்பாற்றுகிறான். தனது வாழ்க்கையை நடத்தவே ஒவ்வொரு மனிதனும் பிறக்கிறான். அப்படிப் பிறக்கும் மனிதன் தன்னலச் செயற்பாடுகளில் ஈடுபடுவது நல்லது. அது ஒன்றும் பாவமில்லை! தனக்காக வாழும்படி யாரும் போதனை செய்வதில்லை. நீ சமுதாயத்துக்காக வாழ்! மனுக்குலத்துக்காக வாழ்! என்று போதனை செய்வதால்தான் போலித்தன்மை ஏற்படுகிறது என்கிறார் அவர். தனக்காக வாழ்வதே கொஞ்சம் ஆழமான நிலையில் மற்றவர்களுக்கும் சேவை செய்வதாகலாம்.

மற்றவர்களைப் பார்த்து அவர்கள் மாதிரி வரவேண்டும் என்று முயற்சி செய்யக்கூடாது. மற்றவர்கள் மாதிரி வரும் முயற்சியிலே உங்களை நீங்கள் இழந்துவிடுவீர்கள். இதனாலே நீங்கள் தானாக அடையக் கூடிய வளர்ச்சியை அடையாமல் தவறவிட்டு விடுவீர்கள். நீங்கள் எந்த அளவுக்கு முன்னேற முடியுமோ அதை முழுமையாக அடைவது தான் உங்கள் இலட்சியமாக இருக்க வேண்டும். இவையெல்லாம் ஒரு பெரியவருடைய சிந்தனைகள்.

இதைக் கேட்டதும் எல்லோரும் சுயநலவாதியாக மாறுங்கள் என்று சொல்வதாக நினைத்துவிடக் கூடாது. சுயநலம் என்ற வார்த்தைக்கு நாம் இப்பொழுது வைத்துள்ள அர்த்தம் வேறு. ஒரு பெரிய மாளிகை. அதற்கு முன்னால் ஒருவர் பெரிய சங்கீத குழுவுடன் நின்று " பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள் எனப் பாடிக் கொண்டிருக்கிறார். அந்த வழியால் போன வெளியூரைச் சேர்ந்த ஒருவர் "யாருக்காக இங்கே நின்று இப்படிப் பாடிக் கொண்டு நிற்கிறீர்கள்? " என்றார். அதற்கு அவர் "இந்த மாளிகையின் சொந்தக்காரனுக்கு இன்று பிறந்தநாள். அதுதான் இப்படிச் செய்கிறேன்" என்றார். " என்ன இது ? அந்த மனிதனுக்குக் கொஞ்சம் கூட மரியாதை தெரியவில்லை. நீங்கள் இவ்வளவு ஆர்வமாய் இங்கே வாழ்த்துப் பாடுகிறீர்கள். அந்த மனிதன் யன்னலையாவது திறந்து இதைப் பார்த்து இரசிக்க வேண்டாமா? என்றார் வேற்றாள்.

உடனே அந்த மனிதன் " விவரம் தெரியாமல் பேசாதே! நானே இரண்டிடத்தில் எப்படி இருக்க முடியும்? நான்தானே அந்த பெரிய மனிதன்! என்றான்.

*தனக்காக வாழ்வதிலே இது ஒரு தனிரகம்.*

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பிரச்சினை தீர என்ன வழி?

பிரச்சினைகள் எங்குதான் இல்லை. அங்கிங்கெனாதபடி ஆண்டவனை மாதிரி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் வல்லமை பிரச்சினைகளுக்கு உண்டு. பிரச்சினைகளுக்குக் காரணம் என்ன? தீர்வு என்ன? யோசிக்க வேண்டாமா? தொழில் நிறுவனங்களில் பாருங்கள் ஊழியர் சங்கத்திற்கும் நிர்வாகத்திற்கும் மோதல் பொறுப்பற்றவர்கள் என்று ஊழியர்களை நிர்வாகம் (சில) குற்றம் சாட்டும். நிர்வாகத்தை ஈவு இரக்கமற்ற இரத்த உறிஞ்சி என தொழிற் சங்கம் (சில) குற்றம் சாட்டும். தவறு உன்பக்கம். நியாயம் என் பக்கம் என்கிற அழுத்தமான எண்ணம் ஆச்சரியமாக இரண்டு பக்கத்திலும் இருக்கும்.

கணவன் மனைவி கூட தகராறுகளில் கூட இதே வாதம் எதிரொலிக்கும். நான் செய்வதெல்லாம் சரி.. ஆனால் அவள் (அல்லது) அவர் செய்வதெல்லாம் தப்பு தவிர வேறெதுவுமில்லை என்கிற ஆவேசம், ஆத்திரம் இரு பக்கத்திலும் அலை எறியும். பெற்றோர்கள், ஆசிரியர்களைக் குறை கூறுவார்கள் "பிள்ளைகளைக் கெடுப்பதே பெற்றோர்கள்தான் ரிவி, ரிவி என்று சனல் மாற்றி சனல் மாற்றி பார்க்கிற பெற்றோர்களால் தான் பிள்ளைகள் படிப்பில் கவனம் செலுத்துவதே இல்லை. கெட்டுப் போகிறார்கள். இப்படி அடுக்கடுக்காக அடுக்குவார்கள் ஆசிரியர்கள்.

உண்மைதான் உலகின் எல்லா பாகங்களிலும் பிரச்சினை, சண்டை வேதனை, பகை இப்படி நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. மனிதர்கள் என்றால்அப்படித்தான். பல மனிதர்கள் புழங்கும் இடத்தில் பிரச்சினை வராதா என்ன? என்று சிலர் இதனை நியாயப்படுத்தவும் செய்வார்கள். உயர் திரு டி.டி.ரங்கராஜன் என்ற நல்வழி சிந்தனையாளர் ஆயிரக்கணக்காண மக்களை நல்வழியில் ஆற்றுப்படுத்தும் தலைமைப் பண்பு மிக்கவர். இதற்கு ஒரு நல்ல தீர்வு சொல்கிறார். கவனமாகக் கேளுங்கள்.

இரண்டு மனிதர்கள் இருக்கும் இடத்தில் ஏதோ ஒரு பிரச்சினை எழுகிறது என்றால் ஒருவர் காரணமாக இருக்கலாம். சில சமயங்களில் இருவருமே கூட காரணமாக இருக்கலாம். பிரச்சினைக்கான காரணம் நபர்கள் அல்ல. அவர்களிடம் நல்ல முதிர்ச்சி இன்மைதான். இரண்டு பேர் சண்டையிடும் இடத்தில் எல்லாம் கண்டிப்பாக அங்கு ஒரு முதிர்ச்சி அற்றவர் இருக்கிறார் என்பதே ஆழமான உண்மை. முதிர்ச்சி உள்ளவர் முதிர்ச்சி அற்றவர்களோடு தொடர்ந்து சண்டை பிடிக்கலாமா? முதிர்ச்சி இன்மையை உணர வேண்டும். அல்லது உணர்த்த வேண்டும். முதிர்ச்சி என்பது என்ன? ஒரு வகையான ஒரு சம்பவம் சொல்கிறேன். இமய மலையின் சாரலில் இரண்டு சந்நியாசிகள் சந்தோஷமாக, ஆனந்தமாக மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீர் என்று ஒரு சுவாமிக்கு விசித்திரமான எண்ணம் தோன்றியது.

"ஏன்... சுவாமி ... நாம் இருவரும் கொஞ்ச நேரம் எதற்காகவாவது சண்டை போடுவோமா? நாம் சண்டையே போட்டத்தில்லையே" என்றார் முதல் சுவாமி. "ஆஹா... போடுவோமா? நாம் சண்டையே போட்டதில்லையே" என்றார் முதல் சுவாமி. "ஆஹா ... போடுவோமே... ஆனால் எதை வைத்துக் கொண்டு எப்படி சண்டை போடுவது. நமக்குள் சண்டை போட விஷயங்களே இல்லையே!" என்றார் இரண்டாம் சுவாமி, கையில் ஒரு சின்னக் கல்லை எடுத்து உருட்டியபடி...

"அதற்கென்ன... இதோ இந்தக் கல் இருக்கிறது. இது போதுமே... நாம் சண்டை போட... நான் ஆரம்பிக்கிறேன்... பாருங்கள். ஏய் சாமி... இந்தக் கல் என்னுடையது அதை ஏன் நீர் உருட்டுகிறீர்... இது என்னுடையது. இது என்னுடையது என்று சண்டையைத் தொடங்கினார் முதல் சுவாமி.

"சரி.. வைத்துக் கொள்ளுங்கள்" என்றபடி பட்டென்று கல்லைக் கீழே வைத்தார். இரண்டாம் சுவாமி சப்பென்று சண்டை முடிந்து விட்டது. இனி எப்படி சண்டை போட? முதிர்ச்சியற்ற மனிதரே சண்டையிட முடியும். சண்டை போடுகிற எதிர்தரப்பில் உள்ளவர் மட்டும் முதிர்ச்சி அற்றவர் என்று பொருள் இல்லை. நீங்களும் முதிர்ச்சி அற்றவர்தான். முதிர்ச்சி உள்ளவர் என்றால் சண்டை உடனடியாக நிறுத்தப்படும். சரிதானா?

எனவே இன்றைய பிரச்சினைகளை இன்றைய முதிர்ச்சியுடன் சந்தித்தால் பிரச்சினைகள் தீராது. நாளைய முதிர்ச்சியும் சந்தித்தால்... போச்சே ... போயிந்தி... போயே போச்சு... சரிதானா?

இதை புரிந்து கொண்டால் இந்த நாள் ஓர் இனிய நாள்.

சுகி சிவம்.

# உயிர் மேல் ஆசை



ஓர் ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு நாள் மாலை வேளையில் தன்னுடைய குழந்தையை மடியிலே வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தார்.

அரண்மனை சேவகர்களெல்லாம் பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜா அவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். 'இந்த உலகத்திலேயே மிகவும் பிரியமானது எது?' என்றார். அங்கே நின்றவர்கள் அதற்குப் பதில் சொன்னார்கள்.

'மன்னா! இந்த உலகத்திலேயே மிகவும் பிரியமானது சொந்தக் குழந்தையை மடியிலே வைத்துக் கொஞ்சுவதுதான்!' என்றார்கள்.

இப்பதிலைக் கேட்டதும் ராஜாவுக்கு சந்தோசம். சிரித்தார். இந்த நேரத்திலே புத்திசாலியான மந்திரி ஒருத்தர் அந்தப் பக்கமாக வந்தார். ராஜா இதே கேள்வியைக் கேட்டார்.

மந்திரி மனதிலே பட்டதைச் சொன்னார்.

'இந்த உலகத்திலே அவங்க அவங்க உயிர்தான் மிகவும் பிரியமானது' என்றார்.

ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை!

சரி அதை நிரூபித்துக் காட்ட முடியுமா? என்றார்.

மந்திரியும் சரியென்று ஒத்துக் கொண்டார். இப்பவே நிருபிக்க வேண்டும் என்றார்'

'சரி... வாங்க! என்று சொல்லி எல்லோரையும் அரண்மனைத் தோட்டத்துப் பக்கமாக அழைத்துக் கொண்டு போனார்.

அங்கே ஒரு குளம் இருந்தது. அதிலே இருக்கின்ற நீரையெல்லாம் வெளியே இறைக்கச் சொன்னார்.

இப்பொழுது குளத்தில் நீரே இல்லை. சுத்தமாக இருந்தது. ஒருத்தரை மிருகக் காட்சிச்சாலைக்குப் போய் ஒரு தாய்க் குரங்கையும் அதோட குட்டிக் குரங்கையும் பிடித்துக் கொண்டு வரச் சொன்னார். அதுவும் வந்து சேர்ந்தது.

அந்தக் குரங்கு இரண்டையும் குளத்தின் மத்தியிலே கொண்டுபோய் விட்டு விட்டு குளத்துக்கு வருகின்ற நீரைத் திறந்து விட்டார். குளத்துநீர் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து வந்தது.

தாய்க் குரங்கு பார்த்தது... குட்டியை தூக்கி இடுப்பிலே வைத்துக் கொண்டது. நீர் மட்டம் இன்னமும் உயர்ந்தது. குட்டியைத் தூக்கித் தோளிலே வைத்தது.

நீர் மட்டம் இன்னும் உயர்ந்தது. தலையிலே தூக்கி வைத்தது. ராஜா பார்த்தார். பார்த்தீர்களா! அந்தத் தாய்க்குரங்கு தன்னோட உயிரைவிட.. குட்டியைக் காப்பாற்றுவதுதான் முக்கியம் என நினைக்குது என்றார்.

'கொஞ்சம் பொறுங்கள்' என்றார் அமைச்சர்.

நீர் தாய்க் குரங்கோட வாய் அளவுக்கு வந்தது. அவ்வளவு தான் குட்டியை விட்டுவிட்டு தாய்க்குரங்கு தாவி கரையிலே வந்து நின்றது.

உடனே மற்றவர்கள் தண்ணீரிலே தத்தளித்த குட்டிக் குரங்கைக் காப்பாற்றிக் கரையிலே கொண்டு வந்து விட்டார்கள்.

'அவங்க அவங்களுக்கும் தங்களுடைய உயிர்மேல் தான் ஆசை' என்றார் அமைச்சர்.

ராஜாவும் அதை ஒப்புக் கொண்டார்.

அப்படியென்றால் இந்த உலகத்திலே உயிர்மேலே ஆசை இல்லாதவர்களே இல்லையா?

இருக்கிறார்கள். அது வேறு நிலை!

உயிரை வெறுக்கின்றவர்கள் ஒரு மாதிரி ரகம்!

உயிர்மேலே ஆசையில்லாமலே இருக்கிறார்கள் வேற மாதிரி ரகம்!

காட்டிலே ஒரு வேட்ன் அவனுக்கு மிகவும் பசி. பசி தாங்காமலே மூர்ச்சையாகி கீழே விழுந்துவிட்டான்.

விழுவதற்கு முன் வலையிலே ஒரு பெண் புறாவை பிடித்தான். ஆண் புறா மரத்துக் கிளையிலே இருந்தது. வலையிலே சிக்கிக் கொண்ட பெண் புறா அதைப்பார்த்துச் சொன்னது.

இந்த வேடன் உணவுக்காக நம்மிடத்தில் அடைக்கலம் ஆகிவிட்டான். அவனைக் காப்பாற்றுவது நமது கடமை. அதனாலே இந்த வலையிலிருந்து என்னை விடுவித்து விடு நான் நெருப்பிலே விழுந்து அவனுக்கு உணவு ஆயிடுறேன். அதே மாதிரி நீயும் ஆயிடு! என்றது.

சரணாகாத ரட்சகனாகிய பகவானுக்கே உரிய குணம் இது.

கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி.டீ.எம்.ஏ விலைகுறைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். ரெலிக்கொம் நிறுவனம் சி.டீ. எம்.ஏ தொலைபேசிகளுக்கான சீ.டி.எம்.ஏ விற்பனை விலையைக் குறைத்துள்ளது. இந்த விலை குறைப்பு கடந்த 23 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி வரை முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

விலை குறைப்பின்படி தற்போது இந்த தொலைபேசிகள் 4 ஆயிரத்து 620 ரூபா வாக விற்கப்படும் என்று அந்த வட்டா ரங்கள் மேலும் தெரிவித்தன.

(எ-224)

**வேலைக்கு ஆள் தேவை**

ஆண்களுக்கான ஆடைகளைச் சிறந்த முறையில் தைக்கத்தெரிந்த, 35 வயதுக்குட் பட்ட ஆண்கள் உடனடியாகத் தேவை.
தொடர்பு:- 0775591366
**வைஷ்ணவி தையலகம்,**
*219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

## 7 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு: 19.10.1932
உதிர்வு: 27.07.2003





மலர்வு: 19.05.1961
உதிர்வு: 01.08.2003

அமரர் சிவக்கொழுந்து நடராசா — அமரர் நடராசா பாலேந்திரா

ஆண்டுகள் ஏழு சென்றாலும்
ஆறாது எமது துயர்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: கே.வெற்றிவேலாயுதம்,
48/8, தேங்காய் மூலை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (101035)

மனைவி, மகன்மார், மகள்மார்,
பேரப்பிள்ளைகள்.

## நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



## அமரர் தணிகாசலம் பத்மநாதன்

(ஓய்வுபெற்ற உதவிமுகாமையாளர், இலங்கை வங்கி)

26.06.2010 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர் தணிகாசலம் பத்மநாதன் அவர்கள் நோயுற்றிருந்தபோது அவருக்கு அக்கறையுடனும், பிரிவுடனும் வைத்திய சேவையினை வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலை யின் வைத்திய நிபுணர்கள், அவசர சிகிச்சைப் பிரிவு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, விடுதி இல.8 ஆகியவற்றைச் சேர்ந்த வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் மறைவிற்கு பத்திரிகை மூலம் அஞ்சலி செலுத்தியோர், மலர்வளையங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோர், கடிதங்கள், தந்திகள், தொலை பேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது நன்றிக ளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதி அஞ்சலியில் நேரடியாகக் கலந்துகொண்டவர்களுக்கும், இறைதுதிப் பாடல்களை இசைத்த அன்பர்களுக்கும், அஞ்சலி உரைகளை நிகழ்த்தி யோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (30.07.2010) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிமுதல் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ் விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளு மாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.09, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (101083) குடும்பத்தினர்.

## கையடக்கத் தொலைபேசிகளில் ஆபாசப்படங்களை தடைசெய்வது குறித்து பொலிஸார் ஆலோசனை

கொழும்பு,ஜூலை, 30

கையடக்கத் தொலைபேசிகளில் ஆபாசப் படங்களை தடை செய்வது குறித்த கலந்து ரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.இந்த கலந்துரையாடலை இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, கொழும்புப் பல்கலைக்கழக தகவல் தொழில் நுட்பப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள், சிறுவர் நீதிமன்றத்தைச் சேர்ந்த நீதிவான் ஆகியோருடன் பொலிஸ் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவு நடத் தியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பது குறித்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸாருக்கு உத்தர விட்டதைத் தொடர்ந்தே இந்தக் கலந்துரை யாடல் இடம்பெற்றுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக தனக்கு பிரத்தியேகமாகக் கிடைத்த பல முறைப்பாடுகள் குறித்து அமைச்சரவை யின் கவனத்திற்கு கொண்டுவந்ததாகவும், இந்த நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இந்நிலையில் கையடக்கத் தொலை பேசிகளில் ஆபாச படங்களை தடுப்பதற்கு பொலிஸார் நீதிமன்ற உத்தரவொன்றை எதிர்பார்த்துள்ளதுடன், தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களின் உதவியையும் கோரியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (சி)

**Diploma in Digital Video Production** 3 Months
**Advanced Dip. in Digital Pre-Press** 3 Months
100% செயன்முறைப் பயிற்சி
இலவச பாடநூல்கள்
**ASIAN COMPUTERS**
யாழ்ப்பாணம் : T.P : 021-2225677
நெல்லியடி : T.P : 021-3734088
சாவகச்சேரி : T.P : 021-3213390

### கட்சிப்பதிவு விண்ணப்பங்கள் தேர்தல் செயலகம்ஆராய்வு

கொழும்பு, ஜூலை, 30

அரசியல் கட்சி யாக பதிவு செய்வ தற்காக சமர்ப்பிக் கப்பட்ட விண்ணப் பங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு வரு கின்றது எனத் தேர் தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டிற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள தேர்தல்கள் ஆணை யாளர் நாயகம் தயா னந்த திஸாநாயக்க மீண்டும்நாடு திரும் பியவுடன் இது தொடர்பாக ஆரா யப்படும் என செய லகத்தின் பேச்சா ளர் ஒருவர் தெரி வித்தார்.

அரசியல் கட்சி களாக பதிவு செய் வதற்காக விண் ணப்பிக்கும் திகதி கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்திருந் தது.

இந்நிலையில், அன்றைய தினம் வரை 88 விண்ணப் பங்கள் தமக்கு கிடைக்கப் பெற்ற தாகதேர்தல்கள்செய லகம் தெரிவித்துள் ளது. (சி)

### காலமானார்

திருகோணமலை, ஜூலை, 30

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச் சின் செயலாளர் திரு மதி ஆர். விஜயலட் சுமியின் கணவரான கணேசலிங்கம் ரமேஷ் (வயது -47) நேற்று முன்தினம் புதன்கி ழமை அதிகாலை 3 மணியளவில் மார டைப்பால்காலமானார்.

இவர்திருகோண மலைபொலிஸ்நிலை யத்தின் தலைமைப் பொலிஸ் பரிசோத கராக் கடமையாற்றி வந்துள்ளார். அவரது இறுதிக் கிரியைகள் திருகோணமலை இராஜவரோதயம் வீதியில் அமைந் துள்ள அவரது இல் லத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

(201-288)

**ஜயவிரு JAYAVIRU**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் **521**
சீட்டிழுப்பு திகதி: **28.07.2010**

வெற்றி எழுத்து: **V** வெற்றி இலக்கங்கள்: **14 21 56 58**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 17,268,733.60 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 10 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 224 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 444 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 11050 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6323 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 158576 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25407 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,429,580.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 17,439,321.60

## நாற்பத்திநான்காம் நாள் நினைவஞ்சலி



### அமரர் பறுபதம் மயில்வாகனம்

மண்ணில் 12★03★1926
விண்ணில் 17★06★2010

காலத்தின் நீரோட்டத்தில்
காலன் உன்னை அழைத்தாலும்
ஞாலத்தில் உம்மோடு
வாழ்ந்த நாள்களை எப்படி
மறப்போம்!

இல.36,கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(101093)

## OBITUARY NOTICE

**Rev.Fr.T.A.J.Mathuranayagam-Rector Emeritus**
***St.Patrick's College Jaffna.***

The Members of St.Patrick's College Old Boys' Association Jaffna Mourn the demise of Rev.Fr.T.A.J.Mathuranayagam Rector Emeritus, St. Patrick's College Jaffna and pay their tribute.The O.B.A.members are requested to be present at the College at 1.00 pm. on Friday 30th. July 2010 to pay their last respects.

**N.B.The A.G.M.scheduled to be held on 31st. July 2010 will be held on SUNDAY 1ST.AUGUST 2010 at the same time at the same venue.**

**S.Mariathas**
*Gen.Secretary - S.P.C.-O.B.A, Jaffna.* (C/569547)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பற்ற முறையில் குப்பைகள் கொட்டப்படுவதால் உமையாள் புரத்தில் தொற்று நோய் பரவும் அபாய நிலை

கண்டாவளை,ஜூலை30

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் கொட்டப்படும் கழிவுப் பொருள்கள், பாதுகாப்பாக கொட்டப்படாமையால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கழிவுப் பொருள்கள் கொட்டுவதற்கு தெரிவு செய்யப்பட்ட இடமான உமையாள்புரம் பகுதியில் கழிவுப் பொருள்கள் உரியமுறையில் பாதுகாப்பாக கொட்டப்படுவதில்லை.

பௌசர்கள் மூலம் கொண்டுவரப்படும் கழிவுகள் போட ஏ9 வீதிக்கு சமீப மாக ஏனோ தானோ என்ற முறையில் கொட்டப்படுகின்றன.

இதனால் உமையாள்புரம் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் குடியிருக்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகிறது. ஏ9 வீதிக்கு சமீபமாக கொட்டப்படுவதால் இவ் வீதியால் செல்வோரும் முகம் சுழிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

கழிவுப் பொருள்கள் விரைவில் உக்கிப் போகும் என்பதற்காகவே உமையாள்புரம் பகுதி கழிவு பொருள்கள் கொட்டுவதற்காக தெரிவு செய்யப்பட்டது. ஆனால் இங்கு கழிவுப் பொருள்களை உரியவாறு பாதுகாப்பாக புதைக்கப்படாததாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து தொற்று நோய்களில் இருந்து தம்மை பாதுகாக்குமாறு இப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ-432)

# உயர்தர மாணவருக்கு செயலமர்வு ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூலை30

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இருந்து 2010 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள கலை,வணிகப் பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு நேற்று ஆரம்பமானது.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் இந்தச் செயலமர்வு இன்றும் தொடர்ந்து இடம்பெறும்.

தமிழ், இந்துசமயம், இந்துநாகரீகம், புவியியல், வரலாறு, அரசியல், நாடகமும் அரங்கியலும்; பொருளியல், வணிகக் கல்வி, கணக்கீடு ஆகிய பத்து பாடங்களுக்கும் அனுபவம் வாய்ந்த வளவாளர்களால் இச் செயலமர்வு நடத்தப்படுகிறது. (ஐ-405)

# விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்கிறது கூ.சங்கம்

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்பட்டு வரும் கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கமானது தனது எல்லைப் பரப்பிற்குட்பட்ட விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவினை மேற்கொண்டு வருவதாக அதன் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

உருத்திரபுரம் அரிசி ஆலைக்கு முன்பாகவுள்ள நெற்களஞ்சியத்திலேயே இக் கொள்வனவு இடம் பெற்று வருகின்றது.

கடந்த 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் படி வெள்ளை நெல் கிலோ ஒன்று இருபத்தெட்டு ரூபாவிற்கும் சிவப்பு, சம்பா நெல் என்பன கிலோ ஒன்று இருபத்தொன்பது ரூபாவிற்கும் கொள்வனவு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-405)

# வன்னியில் முழுவீச்சில் தபால் சேவை விஸ்தரிப்பு

## அஞ்சல் அத்தியட்சகர் தகவல்

கிளிநொச்சி,ஜூலை30

வன்னியில் தபால் சேவைகள் தற்போது சீரடைந்துள்ளதாக வவுனியா மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் கே.புஸ்பநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வன்னி மாவட்டத்திற்கான தபால்கள் விநியோகிக்கும் பணிகள் முழு வீச்சில் இடம் பெற்று வருகின்றன.

இந்த தபால் சேவைகள் முன்னரை விட தற்போது அதன் பணிகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

போரினால் சேதமடைந்த தபாலக கட்டடங்களை மீள் புனர்நிர்மாணம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அதேசமயம் வன்னியில் சேகரிக்கப்படும் தபால்கள் வாகனங்கள் மூலம் உடனேயே உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன - என்றார். (ஐ-224)

# பெற்றோரை இழந்த நான்கு மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி,ஜூலை30

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கல்விக்கற்கும் தாய், தந்தையர் இருவரையும் இழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கு நலன் விரும்பி ஒருவரால் அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியைச் சேர்ந்த இக்குடும்பத்தில் தாய், தந்தையர் இருவரும் யுத்தத்தினால் இறந்துள்ளனர். இவர்களது நான்கு பிள்ளைகளும் பெரிய தாயாரின் பராமரிப்பில் உள்ளனர்.

இவர்களுக்கு துவிச்சக்கர வண்டி ஒன்றும், சப்பாத்துக்கள், மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பனவும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மன்னாரைச் சொந்த முகவரியாகக் கொண்டவரும் தற்போது பிரான்ஸில் வசித்து வருபவருமான இராசநாயகம் அருள்தாஸ் என்பவரே இந்த அன்பளிப்புக்களை வழங்கியுள்ளார்.

துவிச்சக்கர வண்டியும், கற்றல் உபகரணங்களும் உரிய மாணவர்களிடம் மத்திய கல்லூரி அதிபர் க.இரத்தினகுமாரால் கையளிக்கப்பட்டன. (ஐ-405)

# மன்னார் பிரதேசசபைப் பகுதியில் 'நெல்சிப்' திட்டங்கள்தயார்

மன்னார்,ஜூலை30

நெல்சிப் -அபிவிருத்திக்கான அனைத்துத் திட்டங்களையும் முழுமையாக சகல மக்களுக்குமாக தயாரித்துள்ளது மன்னார் பிரதேச சபை.

மன்னார் பிரதேச சபை உரிய காலத்தில் கொத்தணித் திட்டங்களை முழுமைப்படுத்தியதால் அனைத்து அபிவிருத்திக்கும் ஏனைய பிரதேச சபை, நகரசபைகளின் வளர்ச்சிக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளது.

இவ்வாறு திருமலை முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் ஜி.கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னாரில் 5 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. ஆனால் மன்னார் பிரதேச சபை செயலாளர் சி.எம்.யேசுநேசனின் பிரத்தியேகமான செயற்பாட்டினால் நெல்சிப் அபிவிருத்தி முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேசசபை தற்போது உள்ளூராட்சிக்கான திட்டங்களை தயாரித்து வருகிறது.

விரைவில் உள்ளூராட்சிக்கான திட்டம் என்னிடம் வழங்கப்படும். ஏனைய மன்னார் பிரதேச சபை, நகரசபைகளின் நெல்சிப் அபிவிருத்தி தொடர்பான விடயங்களை பார்வையிட செல்லவுள்ளேன் - என்றார். (ஐ-302)

# கிளிநொச்சி எரிபொருள் நிலையங்களில் அடிக்கடி பெற்றோலுக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சி,ஜூலை30

கிளிநொச்சி காக்கடிபோக்குச் சந்தியில் அமைந்துள்ள கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கத்தின் எரிபொருள் நிலையத்தில் அடிக்கடி எரிபொருள் முடிவடைந்து எரிபொருள் அற்ற நிலை காணப்படுகின்றது.

இம்மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அடிக்கடி இவ்வாறு நிகழ்வதால் வாகன உரிமையாளர்களும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பலதடவைகள் இங்கு சென்று எரிபொருள் இல்லாது இவ்வாறு திரும்புகின்ற போதிலும் கிளிநொச்சியில் வேறு எரிபொருள் நிரப்பு நிலையம் இல்லாததால் இவர்கள் மீண்டும் மீண்டும் அங்கு செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

முறிகண்டியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் இவ்வாறான நிலை தொடர்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தை கவனத்தில் எடுத்து முழுமையாக இப்பிரதேச மக்களின் எரிபொருள் தேவையினைப் பூர்த்தி செய்ய முன்வர வேண்டுமென பொதுமக்கள் கோருகின்றனர். (ஐ-405)




# தையல் இயந்திரம் அன்பளிப்பு

கிளிநொச்சி,ஜூலை30

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வருமானம் குறைந்த விதவை ஒருவருக்கு தையல் இயந்திரம் ஒன்று சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

வருமானம் குறைந்த இவ் விதவையின் குடும்ப நிலையை மேம்படுத்தும் நோக்கிலேயே இது வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுபோன்று வருமானம் குறைந்த வணிகர் ஒருவருக்கும் அவரது வணிகத்தை ஆரம்பிப்பதற்கான உதவியும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-405)

# நெத்தலியாற்றுப் பகுதியில் சட்டவிரோதமண் அகழ்வு; உடன் நிறுத்துமாறு கல்மடு சங்கம் கோருகிறது

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கல்மடு குளத்தின் ஆறான நெத்தலி ஆற்றுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் மணல் அகழ்வினைத் தவிர்க்குமாறு கல்மடு நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்கள் மீள்குடியேற்றப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இனிவரும் காலங்களில் இவ்வாறு சட்டவிரோதமாக மணல் அகழ்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இம் மணலைப் பெறவிரும்புவோர் கல்மடு நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறும், அவர்களுக்கான மணல் கல்மடு நகர், தொப்பி கடையடியில் அமைக்கப்பட்டுள்ள மணல் களஞ்சியத்தில் வைத்து வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மணல் ஒரு உழவு இயந்திரப் பெட்டி ஆயிரம் ரூபாவுக்கு வழங்கப்படும் எனவும் கூறப்படுகின்றது.

இதன் மூலம் இப்பிரதேச மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க முடிவதுடன் இந் நிதியின் மூலம் பிரதேச அபிவிருத்தியை மேம்படுத்த முடியும் எனவும் கூறப்படுகின்றது. (ஐ-405)





வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் டெங்கு ஒழிப்புத்திட்டம் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த விசேட கலந்துரையாடலுக்கு தலைமை தாங்கிய வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி சாள்ஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதனை முதல் படத்திலும், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள், அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர் பங்கேற்றிருப்பதனையும் அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள்: உமா)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசமைப்புத் திருத்தம்; தேர்தல் முறைமை மாற்றம் குறித்து ஆராய

# தென்னிலங்கை தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்க மனோகணேசன் ஏற்பாடு

கொழும்பு, ஜூலை, 30

உத்தேச அரசமைப்பு திருத்தங்கள், தேர்தல் முறைமை மாற்றம், அதிகாரபரவலாக்கல் ஆகிய பொது நோக்கங்களில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதற்காக வடக்கு, கிழக்கிற்கு வெளியே தென்னிலங்கையிலே செயற்படும் தமிழ் கட்சி களை ஒன்று திரட்டும் பணியிலே ஈடுபட வுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை முழுவதும் வாழும் தமிழ்ப் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் தேர்தல் நோக்கங்களுக்கு அப்பால் சென்று ஒன்று சேரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். வடக்கு, கிழக்கு கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும் ஒன்றுகூடி பேச்சுகளை முன்னெடுக்கவேண்டும். அதேபோல் வடக்கு, கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற மலையக இந்தியாவம்சாவளி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஒன்று சேரவேண்டும். இது எதிர்காலத்தில் தமிழ்ப் பேசும் மக்களின் அனைத்து அணிகளும் ஒன்று சேர்ந்து எமது ஜன நாயக அபிலாசைகளை பெற்றுக்கொள் வதற்கு வழிகாட்டும்.

தென்னிலங்கை தமிழ் கட்சிகளை ஒன்று திரட்டும் பணியில் ஈடுபடுவதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி அரசியல் குழு தீர்மானித்துள்ளது. தேர்தல் முறைமை மாற்றம் என்பது குறிப்பாக வடக்கு, கிழக்கிற்கு வெளியே செயற்படும் சிறுபான்மை கட்சிகள் எதிர்நோக்கும் பாரிய சவாலாகும். இந்த பிரச்சினையில் நாம் எமது ஒருமித்த கருத்தை ஏற்படுத்தாவிட்டால் எதிர்காலத்திலே எங்களது பிரதிநிதித்துவம் பாரதூரமாக குறையக்கூடிய அபாயம் தெளிவாக தெரிகின்றது. அதேபோல் உத்தேச அர சமைப்பு திருத்தங்கள், அதிகாரப்பரவலாக்கல் உள்ளிட்ட அரசியல் தீர்வு, பிரதேச செயலக மற்றும் கிராமசேவக பிரிவு எல்லைகள் மீள் சீரமைப்பு ஆகிய பிரச்சினைகள் தொடர்பாகவும் ஒருமித்த கருத்து தென்னி லங்கையிலே ஏற்படுத்தப்பட வேண்டும்.

இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும், இலங்கை விவகாரத்திலே ஈடுபாடு கொண்ட சர்வதேச சமூகத்திற்கும் வடக்கு - கிழக்கிற்கு வெளியேயும் தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள் என்பது பற்றிய அறிவுருத்தல்களை வழங்கவும், எமது தரப்பு நியாயங்கள் தொடர்பில் ஒருமித்த குரலில் பேச்சுகள் நடத்துவதற்கும் நாம் தயாராக வேண்டும். அதற்கான காலகட்டம் தற்போது உதயமாகிக்கொண்டிருக்கின்றது. எமது மக்களின் எதிர்காலத்தை பெரும்பான்மை கட்சிகள் கைகளில் ஒப்படைத்து விட்டு நாம் இனிமேலும் அமைதியாக இருக்க முடியாது. இது தொடர்பில் ஓகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் முதல் சந்திப்பை தென்னிலங்கை தமிழ் கட்சிகள் மத்தியிலே ஏற்படுத்துவதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி ஆர்வம் கொண்டிருக்கின்றது. - இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(சி)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2142 திகதி 28-07-2010

ஆங்கில எழுத்திற்கும் I

வெற்றி எண்கள்: 22 28 37 50

போனஸ் இல: 23

ஜக்பொட் பரிசு ரூ. 15,385,650/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 191248 | 20/- | 3,824,960/- |
| 2 இல | 13653 | 100/- | 1,365,300/- |
| 3 இல | 303 | 1,000/- | 303,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8025 | 40/- | 321,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 557 | 1,000/- | 557,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,385,650/- | - |
| 1 இல + போனஸ் இல | 9132 | 100/- | 913,200/- |
| 2 இல + போனஸ் இல | 432 | 500/- | 216,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 394 | 200/- | 78,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 12 | 1,500/- | 18,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,177,260/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கோடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 223780 | | 9,777,260/- |

ரு. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மாத்தறை | 202127469-4-10 |
| அனுராதபுரம் | 202133840-4-38 |
| கொழும்பு | 202130303-3-18 |
| கம்பஹா | 202131156-7-33 |
| நுவரேலியா | 202129246-2-31 |
| கண்டி | 202129086-7-25 |
| மொணராகலை | 202128163-4-27 |
| மட்டக்களப்பு | 202127217-7-30 |
| அம்பாந்தோட்டை | 202129656-7-31 |
| குருநாகல் | 202125716-7-29 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரு. 15,908,525/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஜுலை 31 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333547


## இந்துவின் மைந்தன் இணையற்ற வித்தியாதரன்



யாழ் இந்துவின் மைந்தன்
உதயன், சுடரொளி
நாள் இதழ்
முன்னாள் ஆசான்
உண்மையை உள்ளவாறு
உரைத்தோன்

இன்று பத்திரிகை ஆசிரியர் சங்கமும் பத்திரிகைச் சம்மேளனமும் சிறந்த பத்திரிகையாளன் விருதை வழங்கிக் கௌரவித்துள்ளன. நாமும் அவரை வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம். யாழ் இந்துக் கல்லூரி




சிவகாளியம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவின் பிரபல ஜோதிடர்

**கங்காதர ஆச்சாரி சுவாமிகள்**

திருப்பதியில் இருந்து வந்துள்ள சுவாமிகள்

*இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமிகள் அவர்கள் வம்சாவழியாக காளியம்மனின் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில் வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாகப் பெற்றோர்களுடன் நிலைத்திருத்தல் போன்ற விடயங்களையும் கணவன், மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்குப் பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடல், வெளியூர் பயணங்கள், நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், இலட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், வதிவிடப் பிரச்சினைகள், எதிரிகள் கண் திருஷ்டி இவற்றுடன் எதிர்காலப் பலாபலன்களைத் தெரிவிப்பார். ஒருமுறை சந்தியுங்கள்.*

தொ.பே.: 077 6337702 / 077 6335621
கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம்:
காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை.
பீப்பிள்ஸ் இன்
இல. 112/1, மானிப்பாய் வீதி,
(பிள்ளையார் சோடாக் கம்பனி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(100666)





"நான் படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்தேன். வீணாகக் கஷ்டப்பட்டு எனது பணம் முழுவதையும் இழந்தேன்."

சத்தூர், வயது 28
வெளிநாட்டில் தடுத்து வைக்கப்பட்டு
இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர்.

ஒழுங்கற்ற முறையில் அவுஸ்திரேலியா செல்வதற்காக சத்தூர் தனது வாழ்நாள் சேமிப்புக்கள் அனைத்தையும் செலவிட்டதுடன் கடனும் வாங்கினார். துரதிஷ்டவசமாக ஆட்கடத்தல்காரர்கள் வழங்கிய உறுதிமொழி நிறைவேறவில்லை. மற்றொரு நாட்டில் தடுத்து நிறுத்தப்பட்ட சத்தூர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். தற்போழுது, சத்தூர் எல்லாவற்றையும் இழந்துள்ளார். தன்னையும், தனது குடும்பத்தையும் பராமரிக்க முடியாதுள்ளது. முறையற்ற விதத்தில் அவுஸ்திரேலியா செல்ல முயற்சிக்கும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் அனர்த்தங்களை விளக்கும் கதைகளில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் எண்ணிலடங்கா இலங்கையர்கள் ஆட்கடத்தல்காரர்களுக்கு பலிக்கடாக்களாகின்றனர். படகு மூலம் முறையற்ற விதத்தில் பயணம் செய்பவர்கள் பட்டினியையும் துன்பங்களையும் எதிர்கொண்டு, தமது குடும்பம் உட்பட அனைத்தையும் இழக்கும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். நீங்கள் எதனை இழக்கப் போகின்றீர்கள்?

**மனிதக் கடத்தல்காரர்களால் பிழையாக வழிநடத்தப்பட வேண்டாம்.**

உங்கள் பணத்தை பயனற்ற பயணத்திற்கு வீணாக்க வேண்டாம்.
அவுஸ்திரேலிய அரசாங்கம் உங்களுக்கு வழங்கும் சேமநலச் செய்தி.

ஒருவர்: உண்மைச் சம்பவங்கள் மற்றும் மக்கள் கூறிய கதைகள், அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த சமூக அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தின் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான அணியினருக்கும் பாஷையூர் மக்கள் படை அணியினருக்கும் இடையிலான சினேகபூர்வ உதைபந்தாட்டம் அண்மையில் புனித அந்தோனியார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: தமிழினியன்)

### மலேஷியாவில் நாளை ஆரம்பமாகும்

# வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பங்கேற்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 30

சர்வதேச வலைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் மலேஷியாவில் நாளையும் மறுநாளும் இடம்பெறும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்கேற்க தெல்லிப்பழை யூனியன் கல்லூரி புறப்பட்டுள்ளது.

சர்வதேச வலைப்பந்தாட்டச் சங்கம் ''மலேஷியா பல்கலைக்கழகம் பான் செயின்'' அமைப்பின் அனுசரணையுடன் பினாங் மைதானத்தில் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்துகிறது.

இப்போட்டியில் 145 அணிகள் பங்குபற்றுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து பங்குபற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியின் இரண்டு ஆசிரியர்களும் 7 அணிவீரர்களும் புறப்பட்டு மலேஷியா சென்றுள்ளனர்.

இன்றும் நாளையும் நடைபெறும் ஆட்டங்களில் யூனியன் கல்லூரி பங்குபற்றும்.

வடகிழக்கில் இருந்து பங்குபற்று கின்ற ஒரே ஒரு அணி இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அணியை திருமதி ஜெயந்தி ஜெயதரன் பயிற்றுவித்து வருவதும் மாகாண மட்டப் போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கும் மூன்றாவது வருடமாக தெரிவாகியுள்ள அணி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினத்தை முன்னிட்டு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் ஆறு பேர் பங்கு கொள்ளும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி தலைமையில் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மத்திய கல்லூரி பழைய மாணவர் அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி மோதவுள்ளது. (ஐ-23)

## 50 மைல் சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

மாவட்ட மட்டத்திலான 50மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி நாளை சனிக்கிழமை நவாலியில் இடம்பெறவுள்ளது.

நவாலி வடக்கு சனசமூக நிலையம் இதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டுள்ளது.

நவாலி கலைமகள் முன்பள்ளிப் பாடசாலையின் அபிவிருத்திக்காக மாவட்ட மட்டத்தில் வயது வேறுபாடு இன்றி ஆண்களுக்கு மட்டும் இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நாளை சனிக்கிழமை 7மணிக்கு நவாலி அரசடிச் சந்தியில் போட்டி ஆரம்ப மாகும்.

போட்டியில் பங்குபற்றும் அனைத்து வீரர்களும் அன்று காலை 6.30மணிக்கு பதிவுகளை மேற்கொள்ளவும்.

முதலாம் இடத்தினைப் பெறும் வீரனுக்கு புத்தம்புதிய துவிச்சக்கரவண்டி வழங்கப்படும்.

இப்பரிசுப் பொதியை நவாலியூர் தெட்சணாமூர்த்தி குடும்பத்தினர் வழங்கியுள்ளனர். (த-302)






யாழ்.மாவட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட சுற்றுப்போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற தென்மராட்சிப் பிரதேச அணியின் வீராங்கனைகளையும் பயிற்சியாளர்களையும் படத்தில் காணலாம். (படம்: தென்னவன்)

# செல்ரனின் அரைச்சதத்துடன் 2 ஓட்டங்களால் சென்றல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 30

செல்ரனின் அதிடி ஆட்டம் 2 ஓட்டங்களால் சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணியை வெற்றிகொண்டது மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி.

மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினத்தை முன்னிட்டு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திவரும் 6பேர் பங்கு கொள்ளும் 5பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணியை எதிர்த்து மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணி 5 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 68 ஓட்டங்களைப் பெற்றது.

லவேந்திரா 42 ஓட்டங்களையும், குமணன் 23 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

69 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என களம் இறங்கிய மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி விக்கெட் இழப்பின்றி 70 ஓட்டங்களைப் பெற்றது.

செல்ரன் இரண்டு 6, நான்கு ஒன்பது ஓட்டங்கள் அடங்கல்களாக 54 ஓட்டங்களையும் றொகான் இரண்டு நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 14 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். (ஐ-23)

# டெனேல்ரன், திலீபன் அதிரடி; 30 ஓட்டங்களால் 'கப்பினஸ்' வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 30

டெனேல்ரன், தீலிபன் ஆகியோரின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க ''எயிற்றி எயிற்'' அணியை 30 ஓட்டங்களால் வெற்றி கொண்டது கப்பினஸ் (ஏ) அணி.

பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவுடன் கோல்டன் ஸ்ரார் அணியினர் அமரர் யோகேந்திரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக உள்ளூர் அணிகளுக்கு இடையிலான 6பேர் பங்கு கொள்ளும் 5 பந்துப் பரி மாற்றங்களைக் கொண்ட மென்பந்துச் சுற் றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

கப்பினஸ் (ஏ) அணியை எதிர்த்து ''எயிற்றி எயிற்'' (88) அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ''எயிற்றி எயிற்'' அணியினர் களத்தடுப்பில் ஈடுபடுவதாக தீர்மானித்தது. அதற்கு அமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கப்பினஸ் (ஏ) அணி எதுவித விக்கெட் இழப்பின்றி 101 ஓட்டங்களைப் பெற்றது.

டெனேல்ரன், ஆட்டம் இழக்காமல் 56 ஓட்டங்களையும் திலீபன் ஆட்டம் இழக்காமல் 25 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

102 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய ''எயிற்றி எயிற்'' அணியினர் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

நிசான், அருண் ஆகியோர் முறையே 26 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

டெனேல்ரன், யதீபன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர். (ஐ-23)



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகு மாணவர்கள் யாழ்.மாவட்ட ஹொக்கி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய ஹொக்கிப் போட்டியில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்ட தெல்லிப்பழை ''கிறாஸ் கொப்பேர்ஸ்'' விளையாட்டுக்கழக அணியையும் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்ட உடற்கல்வி அணியையும் [illegible] பணிப்பாளர் ஜெயக்குமார் உரையாற்றுவதையும் ஏனைய விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் இறுதிப்படத்தில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை பத்திரிகை நிறுவனமும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் ஒன்றியமும் இணைந்து நடத்திய பத்திரிகையாளர் விருது வழங்கும் விழாவில் சிறந்த விவரணக் கட்டுரையாளருக்கான விருதைத் தினக்குரல் பத்திரிகையாளர் பி.கிருபாகரனும், சிறந்த பத்தி கட்டுரையாளருக்கான விருதை தினக்குரல் பத்திரிகையாளர் அ.டிட்டோ குகனும் பெறுகின்றனர். 2009ஆம் ஆண்டுக்கான சூழலியல் செய்தியாளருக்கான சிறப்பு விருதை தினக்குரல் உதவி ஆசிரியர் குழந்தைவேல் ஜெயேந்திரனும் விளையாட்டுத்துறை சிறப்பு விருதை மெட்ரோ நியூஸ் பத்திரிகையாளர் ஏ.ரவிவர்மனும் பெறுகின்றனர்.

## தகுதி காண் பரீட்சையை நடத்துமாறு கோரிக்கை

புங்குடுதீவு,ஜூலை30

உபதபாலதிபர்களுக்கு இடையே நடத்தப்படும் வருடாந்தத் தகுதி காண் பரீட்சை பல வருடங்களாக நடத்தப்படாமையால் தாம் பாதிக்கப்படுவதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தகுதி காண் பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்டே பதவி உயர்வும் சம்பள உயர்வும் வழங்கப்படுகின்றது. பல வருடங்களாக இந்தப் பரீட்சை நடத்தப்படாததால் தாம் பாதிக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

எனவே தபால் திணைக்களம் தகுதி காண் பரீட்சைகளை நடத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-6-188)

## கற்கள் பறிக்கப்பட்டும் வீதி செப்பனிடப்படவில்லை; பொதுமக்கள் நீண்ட தூரம் கால் நடையாகவே பயணம்

புங்குடுதீவு,ஜூலை30

புங்குடுதீவு இறுப்பிட்டி வீதி பல தசாப்தங்களாகப் புனரமைக்கப்படாது இருந்த நிலையில் அதனைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரியிருந்தனர். இந்நிலையில் அந்த வீதியைப் புனரமைப்பதற்காகப் பல மாதங்களுக்கு முன்னர் கற்கள் பறிக்கப்பட்டன.

ஆனால் இக்கற்கள் பறிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் வீதியைப் புனரமைக்க அடுத்த கட்ட நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

வீதியில் கற்கள் பறிக்கப்பட்டுள்ளதால் மக்கள் போக்குவரத்தின் போது மிகுந்த கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர். இவ்வீதியின் ஊடாக சேவையில் ஈடுபடும் பஸ்கள் தொடர்ந்து பயணிக்க முடியாமையால் மக்கள் அனைவரும் இறங்கி நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது.

எனவே உரியவர்கள் உடனடியாக இவ் வீதியை செப்பனிட்டுத் தரும்படி பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-6-188)


மாபிள் வகைகள் மலிவு விற்பனையில்

வெளிநாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சுவர் மாபிள்கள், நில மாபிள்கள், கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், யாழ்ப்பாணத்திற்கு நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட கால்மிதிபேசன்கள் போன்றவற்றை தரமான பொருளாகவும் மலிவான விலையிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

ஸ்ரார் செரமிக்ஸ்
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
0215672061, 077 7578277.

போக்குவரத்து வசதி இலவசம்.



Computer Express
Institute of Information Teconology.
No-15, Sirampiyadi Lane
off Stanly Road, Jaffna. Tp- 021-2228250

மாணவர்களின் நலன்கருதி மீண்டும் Computer Express நிறுவனம் Cosy Hotel முதலாம்மாடிக்கு 25/07/2010இல் இருந்து இடமாற்றப்பட்டுள்ளது

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் – 2010 80% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 3 Months 3000/= | Diploma in Desktop Publishing 4 Months ~~22,500/=~~ 4500/= | Diploma in Web Page Designing 3 Months ~~22,500/=~~ 4500/= |
| Diploma in Graphic Designing 4 Months ~~22,500/=~~ 4500/= | Diploma in Hardware Engineering 3 Months ~~20,000/=~~ 4000/= | Diploma in Auto CAD 3 Months ~~22,500/=~~ 4500/= |
| Diploma in Accounting Package 3 Months ~~22,500/=~~ 4500/= | Diploma in Computer Science 4 Months ~~22,500/=~~ 4500/= | Honors Diploma in Computer Science 3 Months ~~32,500/=~~ 6500/= |

50% Off Advance Courses

DIPLOMA IN FILM TECHNOLOGY & VIDEO EDITING ~~10,000/=~~ 5,000/=
DIPLOMA IN STUDIO TECHNOLOGY & MULTY MEDIA ~~9,500/=~~ 4,750/=


- குறைந்தகட்டணம்
- அடியநேர செய்துறைப்பயிற்சி
- அனுபவம்வாய்ந்த விரிவுரைகள்
- அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சாண்றிதல்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்...

Batch i - 31-07-2010 - 9AM or 3PM
Batch ii - 01-08-2010 - 9AM or 3PM
Batch ii - 02-08-2010 - 9AM or 3PM
Batch ii - 04-08-2010 - 9AM or 3PM


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை குணராசா



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குணராசா 28.07.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதி-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னத்தின் அன்புக் கணவரும் பூமணியின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கதிரமலையின் அன்பு மைத்துனரும், வசந்தி, குணரஞ்சன், திரிலோகநாதன் (கனடா), குணரட்ணம் (கிளாக், தாரணி பஸ் உரிமையாளர்), செல்வரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்தலிங்கம் (சவூதி அரேபியா), பார்த்தீபன் (பிரான்ஸ்), றஞ்சினிதேவி, சுஜாதா மற்றும் காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் ஜீவராணி விமலாகரன் (சுவிஸ்), சாந்தி (பிரான்ஸ்), பிரபாகரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனும் துஷ்யந்தன், அமிர்தினி (பிரான்ஸ்), பிரசாந் (ஜேர்மனி), அமிர்சாந், தாரணி, மதுவந்தி (பிரான்ஸ்), சாருஜன் (பிரான்ஸ்), கானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. மனைவி, பிள்ளைகள்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04.05.1929



மறைவு
01.08.2007



அமரர் கலாநிதி
## அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை B.A., FCA.
(பட்டயக் கணக்காளர்)

(முன்னாள் பேரவை உறுப்பினர் , யாழ். பல்கலைக் கழகம், முன்னாள் போஷகர், ஞானசம்பந்தர் கலைமன்றம், புலோலிகிழக்கு, பருத்தித்துறை)

எமது மன்றத்தின் போஷகராக இருந்து எம்மை வழிநடத்திய அமரர் அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை அவர்களின் தன்னலம் கருதாச் சேவையினை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

மகள்:
திருமதி நளாயினி மூர்த்தி
(கனடா)

நிர்வாகம்
ஞானசம்பந்தர் கலைமன்றம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(சி/569551)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைச் சுதந்திரத்தை நிலைநிறுத்தப் போராடிய உதயனின் முன்னாள் ஆசிரியர்



கடந்த செவ்வாயன்று பத்திரிகையாளருக்கான சிறப்பு விருதைப் பெற்றுக்கொண்ட வேளை....

இலங்கையின் பத்திரிகைச் சுதந்திரத்தை நிலைநிறுத்தப் போராடிய பத்திரிகை ஆசிரியர் ந.வித்தியாதரனுக்கு அப்பணிக்கான 2009 ஆம் ஆண்டுக்கான சிறப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.

- உதயன் - சுடர்ஒளி பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்து பத்திரிகைத் துறையில் சாதனை படைத்தவர்.
- கடந்த கால் நூற்றாண்டு காலமாக தமிழ்ப் பத்திரிகைத் துறையில் விடிவெள்ளியாக மிளிர்ந்தவர்.
- உதயன் பத்திரிகையின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அளப்பரிய பணி ஆற்றியவர்.
- தலைநகர் கொழும்பில் சுடர்ஒளி பத்திரிகை தோன்றி வளரக் கால் கோள் இட்டவர்.
- உதயனும் சரி, சுடர் ஒளியும் சரி அரசியல் அழுத்தங்களுக்கும் சிக்கல்களுக்கும் முகம் கொடுக்க நேர்ந்த வேளைகளில் தமது சட்டத்துறை அனுபவங்களால் அவற்றை எதிர்கொண்டு முறியடித்து வெற்றிகண்டவர்.
- இலங்கைத் தமிழ் இனம் சோதனைகளையும், நெருக்கடிகளையும் சந்தித்துத் துவண்ட வேளைகளில் தமது துணிச்சலான, நேர்மையான எழுத்தால் நியாயத்தை நிலைநிறுத்தப் போராடியவர்.
துணிச்சலுடன் நியாயத்தைச் சுட்டிக்காட்டி அநியாயத்தைச் சாடிய இவரது கருத்துக்களால் அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்த தரப்புக்கள் ஒன்றல்ல; இரண்டல்ல; பலப்பல.
- தமக்குச் சரியெனப்படும் கருத்துக்களைத் துணிச்சலுடன் முன்வைத்து நிலைநிறுத்த வாதாடியதன் மூலம் பல தரப்புக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டவர்.
- அதன் காரணமாக கடத்தப்பட்டு, பின்னர் அரச சட்டங்களின் கீழ் தடுப்புக்காவலில் இரு மாதங்களைக் கழித்தவர்.
உலகளாவிய ரீதியில் - பல வெளிநாடுகளின் வாழும் இலங்கைத் தமிழர்களும் அபிமானத்துக்குரிய மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் - பத்திரிகை ஆசிரியர்.
- வெட்டொன்று - துண்டிரண்டாய் உண்மை உறைக்கும் வகையில் எடுத்துரைக்கும் இவரது ஆசிரியர் தலையங்கள் பத்திரிகை உலகில் இவரது தனித்துவத்தை எடுத்தியம்பின.
- உதயன் பத்திரிகை, பத்திரிகைத் துறையில் விருதுகள் பல பெற இவரது அர்ப்பணிப்பான - துணிச்சலான சேவையும் பெருந்துணை புரிந்தது.
பத்திரிகைத் தொழிலில் தாம் முகம் கொடுத்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி நாட்டைவிட்டு ஓடி வெளிநாடுகளில் தஞ்சம் கோராமல், இங்கேயே நின்று சேவையாற்றியவர்.
- தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் வெளிநாடுகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டிய தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளையும் அவர்களுக்கு மறுக்கப்பட்ட, மறுக்கப்பட்டுள்ள அரசியல் உரிமைகளையும் உலகத்துக்குத் துணிச்சலோடு வெளிப்படுத்திப் பதிவு செய்தவர்.
- பல அரசியல் தலைவர்கள் மற்றும் உயர் நிர்வாக அதிகாரிகளை மக்களுக்கு உண்மையைச் சொல்வதற்காக சாடினாலும் அவர்களுடன் நட்புப் பாராட்டுபவர். மிரட்டல்களுக்குத் தலைகுனியாது சொல்ல வேண்டியதை தமது செய்திகள், கருத்துக்கள் மூலம் தெரிவித்து மக்கள் தொண்டனாக விளங்குபவர். எவருடனும் இனிய சுபாவத்துடன் பழகும் இயல்பால் எல்லோரது அன்பையும், அபிமானத்தையும் பெற்றவர்.

# ராஜீவ் கொலை வழக்குக் கைதிகளான நளினி, முருகனை விடுவிக்க முடியாது

## உச்ச நீதிமன்றம் தீர்ப்பு



டில்லி, ஜூலை 30

ராஜீவ் காந்தி கொலை வழக்குக் குற்றவாளிகளான நளினி, முருகன் உள்ளிட்ட 4 பேரையும் விடுதலை செய்ய முடியாது - என்று உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்புக் கூறியுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் நளினி ஆயுள் தண்டனையும், அவருடைய கணவர் முருகன் மற்றும் சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் மரண தண்டனையும் அனுபவித்து வருகிறார்கள்.

அவர்கள் 4 பேரையும் விடுவிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருச்சி வேலுசாமி என்பவர் மனுத்தாக்கல் செய்தார். அந்த மனுவை கடந்த ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி உயர்நீதிமன்று தள்ளுபடி செய்தது. அத்துடன், மனுதாரருக்கு ரூபா ஒரு லட்சம் நஷ்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவுவிட்டது. இதையடுத்து, சட்டத்தரணி கருப்பன் என்பவர் உச்சநீதிமன்றில் இதே கோரிக்கையை வலியுறுத்தி மனுத்தாக்கல் செய்தார். அந்த மனுவில் கூறப்பட்டிருப்பவை வருமாறு -

ராஜீவ்காந்தி கொலையின் சதி அம்சங்கள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட ஜெயின் கமிஷன் தனது இறுதி அறிக்கையை 1998 ஆம் ஆண்டு மார்ச் 7ஆம் திகதி சமர்ப்பித்தது. அதில், ராஜீவ் கொலையில் சந்திராசாமியின் பங்கு, சி.ஐ.ஏ. மொசாத் போன்ற வெளிநாட்டு உளவு அமைப்புகளின் தொடர்பு ஆகியவை குறித்தும், சந்தேகத்துக்குரிய மேலும் 21 பேரின் தொடர்பு குறித்தும் மேற்கொண்டு விசாரணை நடத்துமாறு ஜெயின் கமிஷன் சிபாரிசு செய்திருந்தது.

அதன் அடிப்படையில், 1998 ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி சி.பி.ஐயின் கீழ், பல்நோக்கு கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்பட்டது. அது, ஜெயின் கமிஷன் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கத் தொடங்கியது.

ஆணையம் விசாரணை ஆரம்பித்த தகவலை விசாரணை நீதிமன்றில் சி.பி.ஐ. தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் அந்தத் தகவல்களை நீதிமன்றுக்குத் தெரிவிக்காமல் சி.பி.ஐ. மறைத்ததால், நளினி, முருகன் உள்ளிட்ட 4 பேரும் தண்டிக்கப்பட்டனர்.

சந்திராசாமி மற்றும் 21 பேரின் தொடர்பு பற்றி விசாரிக்கப்படவில்லை. எனவே, குறைபாடுள்ள விசாரணையின் அடிப்படையில் தண்டிக்கப்பட்ட நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரை விடுதலை செய்ய உத்தரவிட வேண்டும்.

இப்படி அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இம்மனு, நீதிபதிகள் வி.எஸ்.சிர்புர்கர், முகுந்தன் சர்மா ஆகியோர் முன்பு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. மனுதாரரின் வாதத்தை நீதிபதிகள் ஏற்கவில்லை. சென்னை உயர்நீதிமன்று பிறப்பித்த உத்தரவில் குறுக்கிட விரும்பவில்லை என்று கூறி, நளினி உள்ளிட்ட 4 பேரையும் விடுதலை செய்ய மறுத்து விட்டனர். மனுவையும் நிராகரித்து தீர்ப்பளித்தனர்.

# இந்தியச் செய்திகள்

## ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்

நகரி, ஜூலை 30

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவருக்குஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்தன.

சித்தூர் மாவட்டத்தில் கர்ப்பிணியாக இருந்த பவனிதா என்ற பெண்ணுக்கு கடந்த சில தினங்களுக்கு முன்பு அறுவை சிகிச்சை மூலம் நான்கு குழந்தைகள் பிறந்தன.

பிறந்த குழந்தைகளில் மூன்று ஆண் குழந்தைகள், ஒரு பெண் குழந்தை என டாக்டர்கள் தெரிவித்தனர். நலமுடன் உள்ள தாயையும், குழந்தைகளையும் பவனிதாவின் பெற்றோர் நேற்றுமுன்தினம் சொந்தக் கிராமமான சிலம்பள்ளிக்கு அழைத்து வந்தனர்.

## ஐ.நா. சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் வழங்க பிரிட்டன் பிரதமர் ஆதரவு

பெங்களூர், ஜூலை 30

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்க பிரிட்டன் முழு ஆதரவு அளிக்கும் என்று அந்நாட்டுப் பிரதமர் டேவிட் கேமரூன் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக கேமரூன் பெங்களூர் வந்துள்ளார். அங்கு அவர் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு -

இந்தியா வளரும் சக்தி வாய்ந்த நாடு மட்டுமல்ல, உலக சக்தியாகவும் உருவெடுத்து வருகிறது. பல்வேறு வகைகளில் முன்னணியில் இருக்கும் இந்தியாவுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினர் பதவி கிடைக்கும் நேரம் வந்துவிட்டது . இந்த உறுப்பினர் பதவி வழங்க இந்தியாவுக்குப் பிரிட்டன் முழு ஆதரவு வழங்கும். பிரிட் டனின் நிலையும் அதேதான். இந்தியா அல்லது எந்த நாட்டுக்கும் எதிராக எல்லை தாண்டிய தீவிரவாதத்தை பாகிஸ்தான் ஊக்குவித்தால் அதை அனுமதிக்க மாட்டோம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## பிரிட்டனிடமிருந்து 57 ஜெட் விமானங்களை ரூபா 9500 கோடிக்கு வாங்குகின்றது இந்தியா!

பிரிட்டனுடனான பாதுகாப்பு உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் பிரிட்டிஷ் ஏரோஸ் பேஸ் சிஸ்டம் நிறுவனத்திடம் இருந்து ரூபா 9500 கோடி செலவில் மேலும் 57 நவீன ஜெட் விமானங்களை வாங்க இந்தியா ஒப்பந்தம் செய்துகொண்டது.

இந்தியா முதல் முறையாக கடந்த 2004 ஆம் ஆண்டு பிரிட்டனின் விமானத் தயாரிப்பு நிறுவனமான பிரிட்டிஷ் ஏரோஸ்பேஸ் சிஸ்டத்திடம் இருந்து 66 நவீன ஜெட் பயிற்சி விமானங்களை வாங்கியது.

இந்நிலையில் மேலும் விமானங்களை வாங்க பெங்களூரில் உள்ள ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் நிறுவனத்தில் (எச்.ஏ.எல்.) நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன் முன்னிலையில் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

இந்த விமானங்கள் எச்.ஏ.எல். விமானத் தயாரிப்பு மையத்தில் தயாரிக்கப்படும். அவற்றில் 40 விமானங்கள் இந்திய விமானப்படையிலும் 17 விமானங்கள் இந்திய கப்பற்படையிலும் சேர்க்கப்படும் என்று பிரிட்டிஷ் ஏரோஸ்பேஸ் சிஸ்டம் நிறுவன மேலாண் இயக்குநர் ஆன்ட்ரூ கலாகர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனும் அவரது தலைமைகளும் சர்வதேசத்தின் போக்கை உணர்ந்து கொள்ளாததால்தான் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது

## சரியாகச் செயற்பட்டிருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கும்

கொழும்பு, ஜூலை 30

விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான காலப் பகுதியில் ஏற்பட்டுள்ள சவாலைச் சந்திப்பதற்குத் தேவையான தந்திரோபாயத்தை உருவாக்கிக்கொள்ள புலம்பெயர் தமிழர் சமூகம் முன்வரவேண்டும் என்று அழைப்புவிடுத்துள்ளார் விடுதலைப் புலிகளின் முன்னாள் ஆயுத முகவரான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன்.



கொழும்பில் வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் கே.பி. இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நெருங்கிய சகா எனக் கூறப்படும் கே.பி., கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் மலேசியாவில் வைத்து கைதுசெய்யப்பட்டு தனி விமானத்தில் கொழும்பு கொண்டுவரப்பட்டார்.

புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டு அதன் தலைமை அழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் அந்த அமைப்பின் தலைவராக கே.பி. தெரிவுசெய்யப்பட்டார் எனவும் செய்திகள் வெளியாகி இருந்தன.

நாடு கடந்த தமிழீழ அரசு என்ற எண்ணக்கருவும் இவராலேயே முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில், கொழும்பு கொண்டுவரப்பட்ட கே.பி. சொகுசு வாழ்க்கை வாழ்கிறார் என்றும் அரசுடன் இணைந்து செயற்படுகிறார் என்றும் செய்திகள் அவ்வப்போது வெளியாகி வந்தன.

வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, முதல் தடவையாக நாளிதழ் ஒன்றுக்குப் பேட்டி அளித்துள்ளார் கே.பி.

அதில் அவர் தெரிவித்துள்ள முக்கிய விவரங்கள் வருமாறு:-

**மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் புலம்பெயர் சமூகம் இணைந்து செயற்படும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

### புலம்பெயர் தமிழர்களுக்கு கே.பி.யின் அழைப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமூகங்களுக்கிடையேயான வேறுபாட்டை இல்லாதொழிப்பதில் மிக நேர்மையாகச் செயற்படுகிறார். போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீளக் கட்டியெழுப்புவதிலும் ஈடுபடுகிறார். போர் முடிவடைந்து ஒரு வருடத்திற்குள்ளாகவே பெரும்பான்மையான இடம்பெயர்ந்த மக்கள் அவர்களுடைய கிராமங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

அத்தோடு, முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் புனர் வாழ்விற்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்கள். அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகமும் ஆதரவளித்து வருகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் தலைமைத்துவம் இல்லாமல் இவையெதுவும் சாத்தியமாகியிருக்காது.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னான இந்தப் புதிய சூழலை விளங்கிக் கொள்வதற்கும், அதன் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய சவாலை சந்திப்பதற்கும் தேவையான தந்திரோபாயத்தை வகுத்துக்கொள்ளவும் புலம்பெயர் தமிழ் சமூகம் முன்வரவேண்டும்.

கடந்த காலத்திலேயே இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்காமல் ஒவ்வொருவரும் மீள் கட்டமைப்பு வேலைகளில் பங்காற்றவேண்டும். அதேபோன்று விடுதலைப் புலிகளுக்குப் பின்னான இக்காலகட்டப் பகுதியில் ஊடகங்களும் இணக்கப்பாட்டைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் காத்திரமாகப் பங்காற்ற முன்வரவேண்டும்.

ஆக்கபூர்வமற்ற எந்த ஊடகங்களாலும் எந்தப் பயனும் விளையப்போவதில்லை. ஊடகங்களினதும், ஊடகவியலாளர்களினதும் உரிமையை எவரும் தவறாகப் பயன்படுத்தக்கூடாது. எவ்வாறாயினும் ஊடகவியலாளர்கள் அபிவிருத்தி, சமாதானத்தைக் கட்டமைத்தல், போரால் இடம் பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தல், முன்னாள் போராளிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தல் போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

## மஹிந்தவின் இன்றைய நடவடிக்கைகளை புகழ்ந்து பாராட்டுகிறார் கே.பி.

**புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து பணத்தைப் பெற்று புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு உதவவென நீங்கள் அண்மையில் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றை உருவாக்கியிருந்தீர்கள். அதற்குப் போதிய பயன் கிடைத்ததா?**

### அபிவிருத்திக்கான நிறுவனம் வவுனியாவில்

வடக்கு, கிழக்குப் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம் என்ற அமைப்பு புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் மற்றும் மீள் குடியேற்றம் போன்ற நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதனுடைய பிரதான அலுவலகம் வைரவப் புளியங்குளம், வவுனியாவில் அமைந்திருக்கிறது. இந் நிறுவனம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது.

நாங்கள் மக்களுடைய நல்வாழ்வு குறித்தே அக்கறைப்படுகிறோம். துன்பப்படும் மக்களுடைய பிரச்சினைகளை அரசியலாக்காமல் அவற்றை மனிதநேய அடிப்படையில் மட்டுமே நோக்குகிறோம். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் மாதாந்தம் ஒரு டொலரை வழங்குமாறு கோருகிறோம். நிதி சேர்க்கும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக 'கொமர்ஷல் வங்கி'யின் வவுனியாக் கிளையில் வங்கிக் கணக்கையும் ஆரம்பித்திருக்கிறோம்.

### அமெ. தேர்வு செப். 11 தாக்குதலால் ஏற்பட்ட மாற்றம்

**நான்காவது ஈழப் போரின் திருப்பு முனை என்னவாக இருந்ததென்று நீங்கள் கருதுகின்றீர்கள்?**

அமெரிக்கா மீதான அல்-குவைதாவின் செப்டெம்பர் 11 தாக்குதல் எல்லாவற்றையுமே மாற்றி அமைத்துவிட்டது. அது நடந்து 24 மணித்தியாலத்திற்குள் மேற்கத்தேய அரசுகள் தலைமை வகித்த சர்வதேச சமூகம் எல்லா ஆயுதக் குழுக்களுக்கும் எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது எங்களுடைய நடவடிக்கைகளையும் பாதித்தது.

இதைத்தவிர வேறும் பல காரணங்களும் இருக்கின்றன. எனினும் அல்-குவைதாவின் நடவடிக்கையே முக்கிய காரணமாக இருந்தது. இது மேற்கின் அணுகுமுறையை மாற்றியமைத்தது. உலகின் பல பாகங்களிலும் தனி நாட்டுக்காகப் போராடியவர்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தார்கள்.

துரதிர்ஷ்டவசமாக விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட அவரின் முக்கிய தலைமைகள் இதனை உணர்ந்துகொண்டு தங்களுடைய தந்திரோபாயத்தில் தேவையான மாற்றங்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை. தேவையான மாற்றங்களைச் செய்திருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கும்.

இன்று புதிய ஓர் உலக ஒழுங்கு எம் முன்னால் இருக்கிறது. அது ஆயுதப் போராட்டத்தை ஒருபோதும் சகித்துக் கொள்ளப்போவதில்லை. எங்கள் முன்னால் உள்ள மிகப் பெரிய யதார்த்தம் அது.

**கடந்த வருட மேயில் போர் முடிவடைந்த பிற்பாடு மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில் நீங்கள் திருப்தி அடைந்துள்ளீர்களா?**

### அரசின் நடவடிக்கைகளை பாராட்ட வேண்டும்

நான் எதிர்பார்த்ததைவிட நிலைமை நன்றாக இருக்கிறது. போர் முடிவடைந்த பின் அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை நாம் பாராட்டவேண்டும். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய கட்டப்பாடு எங்களுக்கு உண்டு. வடக்கிற்கான எங்களுடைய அண்மைய விஜயத்தின் போது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுத இருந்த பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு எம்மால் உதவக்கூடியதாக இருந்தது.

அரசும், புலம்பெயர் தமிழ்ச் சமூகமும் ஒரு பொது வேலைத்திட்டத்திற்காக இணைவது சாத்தியமானதென் யாரும் நம்பியிருக்கவில்லை. ஆனால், இன்று நாங்கள் அரசோடு இணைந்து மக்களுக்காகப் பணி புரிகிறோம். எங்களுடைய கோரிக்கைகளுக்கான உதவிகள் தமிழ் மக்களிடமிருந்து கிடைக்க ஆரம்பித்திருக்கின்றன. இரண்டு பாடசாலை அதிபர்கள் தவணைப் பரீட்சை வினாத்தாள்களுக்குத் தேவையான பணத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

தற்போது போர் முடிவடைந்துவிட்டது. நாங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். அண்மையில் வவுனியா சுந்தரலிங்கம் தமிழ் மகாவித்தியாலயத்தில் உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு தேநீருக்கும், பணிசுக்கும் வழங்கவென 5 இலட்சம் ரூபாவை நன்கொடையாகக் கொடுத்திருக்கிறோம்.

**வன்னிப் போர் முனையில் இடம்பெற்ற பிரபாகரனின் மரணம் குறித்து நீங்கள் எப்போது முதன் முதலாக அறிந்தீர்கள்? அந்த நேரம் நீங்கள் எங்கிருந்தீர்கள்?**

### பிரபாவின் நண்பன் நான்

நான் கோலாலம்பூரில் இருந்தேன். பிரபாகரனின் மரணம் குறித்து நான் கேள்விப்பட்டது மே 19 ஆம் திகதி. நான் பிரபாகரனின் மிக நல்ல நண்பனாக இருந்தேன். அவர் இறந்ததை அறிந்து நான் துயரம் அடைந்தேன்.

நான் சொன்னதைக் கேட்டு அரசுடன் ஓர் இணக்கப்பாட்டை எட்டியிருப்பாரானால் இறுதிப் போரைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், காலம் கடந்துவிட்டது. வன்னி கிழக்குப் பகுதியில் மே 10 ஆம் திகதி விடுதலைப் புலிகள் பெரும் பின்னடைவைச் சந்தித்தனர். இராணுவத்தின் முன்னரங்க நிலைகளை உடைக்க முற்பட்டதில் 400 அனுபவம் வாய்ந்த புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். இத்துன்பியலைத் தொடர்ந்து நான் அரசியல் பொறுப்பாளர் நடேசனுடன் கலந்துரையாடினேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக மூன்றாந்தரப்பொன்றினூடாக இராணுவத்திற்கு ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி தாக்குதலை நிறுத்தலாமென அவர்கள் நம்பினார்கள்.

நாங்களும் பல்வேறுபட்ட நபர்களுடனும், ஐ.நா உட்பட்ட அமைப்புகளுடனும் பேசினோம். ஆனால், பிரபாகரன் முன்னரே மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக அவை எதுவும் சாத்தியமாகவில்லை.

**இலங்கையை விட்டு நீங்கள் எப்போது முதன் முதலாக வெளியேறினீர்கள்? எப்போது இலங்கைக்கு கடைசியாக வந்தீர்கள்?**

1980இல் பிரபாவுடன் நான் இந்தியாவிற்குப் போனேன். வல்வெட்டித்துறையிலிருந்து படகு மூலம் அகதியாக இந்தியாவிற்குச் சென்றோம். அந்த நேரத்தில் பாக்குநீரிணையைக் கடப்பதில் எந்த விதப் பிரச்சினைகளும் இருக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம்தான் 1970களில் பிரபாகரனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். பெரும்பாலும் அது 1976 ஆக இருக்கலாம். அன்றிலிருந்து நானும் அவரும் இணைந்து பணியாற்றி வந்தோம்.

அந்தக் காலத்தில் விடுதலைப் புலிகளும், ரெலோவும்தான் மிகப் பெரிய இயக்கங்களாக இருந்தன. யாழ்ப்பாணத்துத் தலைமைகளால் ஈழத்துக்கான போராட்டத்தை அவை நடத்தி வந்தன.

நான் மகாஜனக் கல்லூரியில் படித்தேன். பல்கலைக்கழகக் காலத்தில் எங்களுடைய உரிமைகளுக்காகப் போராடினோம். ஆனால், இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்குமே அமைதி ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

(ஒ-சி)

# பாகிஸ்தானில் சுதந்திரமாக நடமாடுகின்றாராம் ஒசாமா!

## விக்கிலீக்ஸ் வெளியிடும் புதிய தகவல்

லண்டன், ஜூலை 30

சர்வதேச தீவிரவாதியான ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் சுதந்திரமாக நடமாடுகிறார் என 'விக்கிலீக்ஸ்' இணையத்தளம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் உளவுத்துறையான சி.ஐ.ஏ தலிபான்களுக்கு நிதியுதவி செய்து வருவதையும், அதன் தூண்டுதலின்பேரில்தான் தலிபான்கள் தாக்குதல் நடத்துகிறார்கள் என்பதையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த இணையத்தளம் தான் 'விக்கிலீக்ஸ்'.

பிரிட்டனைச் சேர்ந்த இந்த இணையத்தளம்தான் பாகிஸ்தானின் கபட நாடகத்தை உலகத்துக்கு வெளிப்படுத்தியுள்ளது. அமெரிக்க இராணுவ இரகசிய ஆவணங்கள் இதில் கசிந்தமையால், அமெரிக்க வட்டாரங்களில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சர்வதேச தீவிரவாதியான பின்லேடன் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்ற சர்ச்சை தொடர்ந்து நடந்து வருகிறது. இந் நிலையில் அவர் உயிருடன்தான் இருக்கிறார். பாகிஸ்தானில் சுதந்திரமாக அவர் செயற் பட்டு வருகிறார் என அந்த இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானில் பின்லேடன் சுதந்திரமாக நடமாடி வருகிறார். இந்நடமாட்டம் பற் றிய தகவல்கள் அமெரிக்க உளவுத்துறைக் குக் கிடைத்துள்ளன. பாகிஸ்தானிலுள்ள குவெட்டா நகரில் அல்-குவைதாவின் உயர்மட்ட குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் 6 தற்கொலைத் தீவிரவாதிகளுக்கு வடக்கு ஆப்கானிஸ்தானில் தாக்குதல் நடத்த உத்தரவிடப்பட்டது என்ற தகவலையும் இந்த இணையம் வெளியிட்டுள்ளது.

# இந்தியர் மீது தாக்குதல்: ஆஸியில் இருவர் மீது வழக்கு!

மெல்போர்ன், ஜூலை 30

இந்தியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பான வழக்கில் 2 ஆஸ்திரேலியர்கள் மீது குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இனவெறி காரணமாக இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் பதிவுசெய்துள்ளனர்.



ஆஸ்திரேலியாவில் வாழும் இந்தியர்கள் மீது தாக்குதல் நடத்துவது அதிகரித்து வருகிறது. இந்நிலையில், கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி இந்தியாவைச் சேர்ந்த ராஜன் குமார் கட்கம் என்பவரை ஆஸ்திரேலியர்கள் தாக்கினர்.

விக்டோரியா மாகாணம் போர்ட்ஸீ நகருக்கு ராஜன் குமார் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தபோது அவரை 3 நபர்கள் தாக்கினர். மேலும் அவர் முகத்தில் கோழி இறைச்சி துண்டுகளையும் அவர்கள் வீசிவிட்டுச் சென்றனர்.

இந்த வழக்கில் 3 பேரை மெல்போர்ன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இனவெறி காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என 2 பேர் மீது குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அவர்கள் 2 பேருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டுவிட்டது. மேலும் அவர்கள் இருவரையும் செப்டெம்பர் முதலாம் திகதி பிராங்ஸ்டன் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட கண்டி மல்வத்த பீடாதிபதி வண. திப்பட்டுவாவே சுமங்கல தேரர் யாழ்.நாகவிகாரைக்கு சென்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இதன்போது பீடாதிபதியை செங்கம்பள வரவேற்பளித்து அழைத்து வருவதை முதற்படத்திலும், பீடாதிபதிக்கு யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க நினைவுப் பரிசில் கொடுத்துக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும், படை அதிகாரிகள் பீடாதிபதி மற்றும் குருமார்களுடன் நிற்பதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: சுகந்தன்)

# சச்சின் இரட்டைச் சதமடிக்க இந்தியா 669 ஓட்டங்களை குவித்தது

## சமநிலையில் இன்று ஆட்டம் முடியும்

கொழும்பு, ஜூலை 30

இலங்கைக்கு எதிரான. இரண்டாவது டெஸ்ட் போட்டியில், சச்சின் இரட்டைச் சதமடிக்க - ரெய்னா சதமடித்துக் கைகொடுக்க, நான்காம் நாளான நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது இந்திய அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 669 ஓட்டங்களைச் சேர்த்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, முதலாவது இன்னிங்ஸிற்காக 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 642 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர், தனது இன்னிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவின்போது, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 382 ஓட்டங்களைச் சேர்த்தது.




சச்சின் 108 ஓட்டங்களுடனும், ரெய்னா 66 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று மீண்டும் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இந்திய அணிக்கு, சச்சின் இரட்டைச்சதம் (203) அடித்து ஆட்டமிழந்தார். அதேவேளை, முதாலது டெஸ்டில் விளையாடிய ரெய்னா சதமடித்து (120) ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த டோனி சிறப்பாக விளையாடி அரைச்சதம் (76) கடந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது இந்திய அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 669 ஓட்டங்களைப் சேர்த்தது.

இலங்கை அணியின் பந்துவீச்சில், மெண்டிஸ் 4 விக்கெட்டுகளையும், டில்ஷான் 3 விக்கெட்டுகளையும், ரண்டிவ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இன்னும் ஒருநாள் மட்டுமே எஞ்சியிருப்பதால் இந்தப் போட்டி சமனிலையில் முடிவடைவது உறுதியாகியுள்ளது.

இன்று ஆட்டத்தின் இறுதி நாள் ஆகும்.

# துப்பாக்கி வெடித்ததில் பெண் சிப்பாய் மரணம்

கொழும்பு, ஜூலை 30

வெலிஓயா இராணுவ முகாமில் தவறுதலாகத் துப்பாக்கி வெடித்ததில் பெண் சிப்பாய் ஒருவர் பலியாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த குறித்த பெண் சிப்பாய் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன என இராணுவ வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த பெண் படைச் சிப்பாய் பிபிலையைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப் படுகிறது. (ஒ-சி)

# சட்டவிரோத வானொலி நிலையம் பேருவளைப் பகுதியில் முற்றுகை

பேருவளைப் பகுதியில் இயங்கி வந்த சட்டவிரோத வானொலிச் சேவை நிலையம் ஒன்று நேற்றுமுன்தினம் முற்றுகையிடப்பட்டு அங்கிருந்த உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டன.

மருதானையைச் சேர்ந்த தனிநபர் ஒருவரால் நடத்தப்பட்டு வந்த இந்த எவ்.எம். அலைவரிசை நாடு முழுவதும் ஒலிபரப்பை மேற்கொண்டு வந்துள்ளது.

குறித்த வானொலிச் சேவை தொடர்பாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பல்பிட்ட செய்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பேருவளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-சி)

# தர்சிகாவின் பிரேத பரிசோதனைகள் நேற்று கொழும்பில் பூர்த்தியாகின

## மீண்டும் சடலம் வருகிறது கைதடிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 30

வேலணை அரசினர் வைத்தியசாலை குடும்பநல மருத்துவ மாது தர்சிகாவின் மரணம் தொடர்பான பிரேதப் பரிசோதனையை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அல்விஸ் நேற்று மேற்கொண்டார்.

நேற்றுமுன்தினம் கைதடி ஊற்றல் மயானத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட தர்சிகாவின் சடலம் அன்றே கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டது.

நேற்றுக் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் வைத்து சட்ட வைத்திய அதிகாரி அல்விஸ் பிரேத பரிசோதனை நடத்தினார். பிரேதப் பரிசோதனை அறிக்கையை அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு அனுப்பிவைப்பார்.

பிரேதப் பரிசோதனை முடிவடைந்ததையடுத்து சடலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படுகின்றது. இன்று சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு மீண்டும் ஊற்றல் மயானத்தில் புதைக்கப்படும் என பாதிக்கப்பட்டோர் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி எஸ்.குகனேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பில் பிரேதப் பரிசோதனைக்காக ஏற்பாடுகளை மனித உரிமைகள் இல்லத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் மேற்கொண்டிருந்தனர்.

(ஒ-1)

# யாழ். வந்துள்ளார் அமைச்சர் கமகே

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஆயுர்வேத மற்றும் சித்த மருத்துவத் துறை அமைச்சர் பியசேன கமகே யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

பிரதி அமைச்சர் பண்டுபண்டார நாயக்க, அமைச்சு செயலாளர் பந்துல தஸநாயக்க ஆகியோர் சகிதம் யாழ்ப்பாணம் வந்துள்ள அவர் அச்சுவேலியில் அமைக்கப்படும் ஆயுர்வேத மருந்து உற்பத்தித் தொழிற்சாலை, அராலி மூலிகைப் பண்ணை போன்ற இடங்களுக்கும் சென்றிருந்தார்.

நயினாதீவுக்குச் சென்ற அவர் அங்குள்ள ஆயுர்வேத வைத்தியசாலையின் தேவைகளைக் கேட்டறிந்தார்.

இன்று காலை கைதடி ஆயுர் வேத வைத்தியசாலைக்குச் செல்வார். (ஒ-ஐ)

# நல்லெண்ணத்துடனேயே அரசுடன் பேச்சு நடத்தப்பட்டது-கரு ஜயசூரிய

கொழும்பு, ஜூலை 30

நல்ல எண்ணத்துடனேயே அரசுடன் பேச்சு நடத்தப்பட்டது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பான பேச்சுகள் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டன என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போது நடைமுறையிலுள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதீத அதிகாரங்களை வரையறுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புச் சொல்லக் கூடிய வகையில் ஆட்சி முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச சேவை அரசியல் மயப்படுத்தப்படக் கூடாது எனவும் அவ்வாறான செயற்பாடுகளை தமது கட்சி கடுமையாக எதிர்க்கிறது எனவும் அவர் கூறினார்.

(ஒ-சி)

# ரியல் மாட்ரிட் அணி அமெரிக்கா பயணம்

ரியல் மாட்ரிட் அணி அமெரிக்காவிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடவுள்ளது.

'ஸ்பானிஷ் லீக்' போட்டி அடுத்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டிக்கு முன்னதாக ரியல் மாட்ரிட் அணி, அமெரிக்காவிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு சினேகபூர்வ ஆட்டங்களில் விளையாடவுள்ளது.

இதற்காக கிறிஸ்டியானோ ரொனால்டோ தலைமையிலான அணி, நேற்று மாட்ரிட்டிலிருந்து லொஸ்ஏஞ்சல்ஸ் புறப்பட்டது.

அடுத்த மாதம் 4ஆம் திகதி சான்பரான்சிஸ்கோ நகரில் மெக்ஸிக்கோவைச் சேர்ந்த அம்ரிகா அணியுடன் சினேக பூர்வ ஆட்டம் ஒன்றில் விளையாடவுள்ளது.

தொடர்ந்து 7ஆம் திகதி டேவிட் பெக்காமின் லொஸ் ஏஞ்சல்ஸ் கேலக்சி அணியை எதிர்த்து ரியல்மாட்ரிட் களமிறங்கும்.


# யாழ். .மாவட்ட கேபிள் T.V. இயக்குநர்களுக்கு

இலங்கையில் SUN Network சனல்களை ஒளிபரப்புச் செய்யும் உரிமையை LBN நிறுவனம் பெற்றுள்ளது. அது தொடர்பான கலந்துரையாடல் இன்று (30.07.2010) இல. 874, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள US Guest House இல் இடம்பெறவுள்ளது. தவறாது அனைத்து கேபிள் T.V இயக்குநர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
T.P.: 077 3105921
021 567777, 077 8890493

(சி/569531)


# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா வள்ளிப்பிள்ளை



கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி கந்தையா வள்ளிப்பிள்ளை கடந்த 27.07.2010 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- நாயகம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வி.மு.கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம், சிவசம்பு, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீதரன், ஸ்ரீதா, ஸ்ரீகரன், ஸ்ரீஜெகன், ஸ்ரீபரன், ஸ்ரீவரன், ஸ்ரீரூபன் ஆகியோரின் அன்புத் தாயும் லிங்கவாசன், கருணாதேவி, ராதிகா, சாரதா, ரதிபாலினி ஆகியோரின் அன்பு மாமியும் லவன், லதுஜா, லக்ஸா, கந்துஜா,மதுஜா, நிதுஜா, கஜீதன், கஜீதா, கோபிராஜ், சபினா, அபிஸ், சிந்துஜன், சாருஜன், ஐஷ்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2010) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.லிங்கவாசன்
(மருமகன்).

கோண்டாவில். 0041786317743

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் உண்ணாவிரதமிருந்த பரமேஸ்வரன் வழக்கில் வெற்றி!

## 77,500 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ் நஷ்டஈடு

கொழும்பு, ஜூலை 30

இலங்கையில் போரை நிறுத்தக் கோரி 2009 ஆம் ஆண்டு லண்டனில் உண்ணாவிரதம் இருந்த ஈழத்தமிழ் இளைஞர் பரமேஸ்வரன் சுப்பிரமணியம், உண்ணாவிரத நாள்களில் உணவு சாப்பிட்டார் எனச் செய்தி வெளியிட்ட பத்திரிகைகளுக்கு எதிரான வழக்கில் வெற்றி பெற்றுள்ளார்.

இலங்கையில் போரை நிறுத்தக் கோரி பிரிட்டிஷ் நாடாளுமன்ற வளாகத்தின் முன் பரமேஸ்வரன் 23 நாள்கள் உண்ணாவிரதம் இருந்தார். ஆனால் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின்போது அவர் ரகசியமாக பர்கரைச் சாப்பிட்டதாக லண்டனில் வெளியாகும் 'டெய்லி மெயில்' மற்றும் 'சன்' பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதற்கு எதிராக பரமேஸ்வரன் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில் நேற்று வியாழக்கிழமை லண்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த வழக்கு விசாரணையின் போது சம்பந்தப்பட்ட இரு பத்திரிகைகளின் சார்பில் வாதாடிய சட்டத்தரணிகளும் தாங்கள் வெளியிட்ட செய்திக்கான ஆதாரங்கள் இல்லை என்று ஒப்புக் கொண்டார்கள்.

இதுகுறித்த மறுப்பை வெளியிடவும், பரமேஸ்வரனுக்கு 77,500 ஆயிரம் ஸ்டெர்லிங் பவுண்ட் நஷ்ட ஈடு வழங்கவும் அந்த இரு பத்திரிகைகளும் ஒப்புக்கொண்டன என பரமேஸ்வரனின் சட்டத்தரணி மேக்னஸ் பாயிட் தெரிவித்தார்.

இந்தப் பத்திரிகைகளின் பொய்ச் செய்தி காரணமாக, கடந்த எட்டு மாதங்களாக தான் மிகுந்த அவமானங்களை சந்தித்தார் எனவும் இந்த நிலையில் நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பு தனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது எனவும் பரமேஸ்வரன் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

வழக்கில் வெற்றிபெற்றால் சன்மானம் என்ற அடிப்படையிலேயே தான் சட்டத்தரணியை அமர்த்தி இந்த வழக்கை எதிர்கொண்டார் எனவும் பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

### றுகுணு பல்கலை மாணவர்கள் உண்ணாவிரதம்

றுகுணு பல்கலைக்கழக மாணவனின் மரணத்தைப் பொலிஸார் பொறுப்பேற்கும் வரை சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை எதிர்வரும் சில தினங்களில் ஆரம்பிக்கவுள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் உதுல் பிரேமரட்ண தெரிவித்தார்.

### தடுப்பு முகாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட திடீர் சோதனையின்போது 14 சிம் அட்டைகள், 30 கையடக்கத் தொலைபேசி பற்றரிகள் மற்றும் 21 சார்ஜர்கள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டன என மேஜர் ஜெனரல் தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் தேவையான நேரத்தில் தொலைபேசிகளையும் ஏனைய உபகரணங்களையும் பாவித்துவிட்டு நுட்பமான முறையில் அவற்றை மறைத்து வைத்திருந்தனர் எனவும் அவர் கூறினார்.

தடுப்பு முகாம்களில் இருந்து கையடக்கத் தொலைபேசிகள் கண்டெடுக்கப்பட்டதை அடுத்து, புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேச வலையமைப்புக்கும் இடையில் தொடர்புகள் பேணப்படுகின்றனவா என்பது குறித்த சந்தேகம் படையினரிடம் எழுந்துள்ளது. இது தொடர்பில் அவர்கள் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ-சி)

### சீனா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குழுவினரை இலங்கைக்கு அனுப்ப சீன அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்றபோது மனிதாபிமான நிலக்கண்ணி வெடியகற்றும் குழுவின் பணிப்பாளர் மொன்டி ரணதுங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுமார் 1500 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இந்த மாகாணங்களில் மேலும் 2400 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் நிலகண்ணி வெடிகளை அகற்ற வேண்டியிருக்கிறது என மொன்டி ரணதுங்க தெரிவித்துள்ளார்.(ஒ-சி)

### யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி, தென்மராட்சி கல்விப் பணிப்பாளர்கள் உட்பட படை அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதையடுத்து யாழ். நாகவிகாரை, நல்லூர் கந்தசுவாமி கோயில், யாழ். நூலகம், யாழ். கோட்டை மற்றும் நகரப் பகுதிக்கும் மல்வத்தப் பீடாதிபதி சென்று பார்வையிட்டார்.

பீடாதிபதியுடன் 10 பௌத்த பிக்குகளும் வந்திருந்தனர்.

இறுதியாக படையினருக்கு ஆசிவேண்டி ஞானம்ஸ் ஹோட்டலில் 'பிரித்' ஓதிய பிக்குகளுக்கு படையினர் தானம் வழங்கினர்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உட்பட படை அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஒ-1-16)

### வடக்கு, கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனும்போது இது நியாயமானதா?'' எனச் செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

பதிலளித்த அமைச்சர், ''எந்தவொரு குற்றவாளியையும் அரச தரப்பு தனது சாட்சியாக ஆக்கிக்கொள்ள முடியும். இதற்குச் சட்டத்தில் இடமுண்டு. எதிர்காலத்தை முன்னிட்டு நாட்டின் கௌரவம், தன்னாதிக்கம் பாதிக்கப்படாமல் எந்தவொரு நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ள முடியும். இதற்கு அரசமைப்பிலும், சட்டத்திலும் இடமுண்டு'' - என்றார். (ஒ-சி)

### இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யொன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையிலான குழுவினர் தமிழக முதல்வர் கருணாநிதியிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் விசேட பிரதிநிதியொருவரை இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடு செய்துள்ளார்.

இதில் எந்தவித ஒளிவுமறைவுமில்லை. இலங்கையின் நெருங்கிய நண்பன் இந்தியா. இரு நாடுகளுக்குமிடையில் நீண்ட கால நல்லுறவு நீடிக்கின்றது.

அண்மையில் இந்திய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்த பின்னர் இலங்கை நிலைமைகளை நேரில் அவதானிக்க விசேட பிரதிநிதியொருவரை அனுப்பி வைக்குமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்தார்.

- இப்படி அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## சர்வகட்சிக் குழுவின் அறிக்கை தூதரகங்களுக்கும் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 30

இனப் பிரச்சினைத் தீர்வுக்காக அரசால் நியமிக்கப்பட்ட சர்வகட்சிக் குழுவின் அறிக்கையை அக்குழுவின் உறுப்பினர்களான ஆர்.யோகராஜன், நிசாம் காரியப்பர் ஆகியோர் வெளிநாட்டு தூதரகங்களுக்கும் வழங்கியுள்ளனர்.

சர்வகட்சிக் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண குழுவின் அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் கையளித்திருந்தார். இந்த அறிக்கை மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படாத நிலையில், இக்குழுவில் அங்கம் வகித்த ஆர்.யோகராஜன், நிசாம் காரியப்பர் ஆகியோர் அதனை சில வாரங்களுக்கு முன்னர் ஊடகங்களுக்கு வெளியிட்டனர்.

சர்வகட்சிக் குழுவொன்றை நியமித்து அதன்மூலம் சர்வதேச சமூகத்தை அரசு ஏமாற்றியுள்ளதாக ஐ.தே.கட்சி கடந்த வாரம் குற்றஞ்சாட்டியிருந்தது.

இந்த நிலையில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளின் தூதரகங்களுக்கு நேற்று முன்தினம் இந்த அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

பலத்த சர்ச்சையின் மத்தியில் ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஆர். யோகராஜன் இந்த அறிக்கையை கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். (ஒ-சி)

### பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

நீதியரசர்கள் தீபாலி விஜயசுந்தர, டி.பி. வராவெவ, மொஹமட் ராஸின் ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சரத் பொன்சேகாவின் கைவிரல் அடையாள அறிக்கை ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதியரசர்கள் நேற்று பொலிஸாருக்கு உத்தரவிட்டனர்.

ஜெனரல் சரத் பொன்சேகா நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள வசதி செய்து கொடுக்கும்படியும் இராணுவத் தளபதிக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

இந்த வழக்குத் தொடர்பில் சாட்சியம் அளிக்க வரும்படி 14 பேருக்கு அழைப்பாணை அனுப்புவதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

### கப்பல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும் 14 இந்தியர்களும் பயணிக்கின்றனர் எனத் தகவல்களை வெளிவந்திருந்தன. இதேவேளை, கனடாவை நெருங்கும் முன்னர் கனடாவும் அமெரிக்காவும் இக்கப்பலை சர்வதேச கடலில் சுற்றிவளைக்க நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையிலேயே கனடா மனிதாபிமான அமைப்புகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தமிழர்களைக் கௌரவமாக நடத்தவேண்டுமென்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டு வருகின்ற இவர்களுக்கு கனடா பாதுகாவலராக மாறவேண்டும் என்றும் இத் தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்றும் இந்தக் கூட்டு அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

### வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் தெற்கு நோக்கிச் சென்றிருக்கும் வடக்கு, கிழக்கு ஊடகவியலாளர்களை கொழும்பில் உள்ள அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்து அமைச்சர் கலந்துரையாடினார்.

அண்மைக் காலங்களில் வடக்கில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு ஊடகத்துறை அமைச்சு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா என்று ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கில் உள்ள ஊடகவியலாளர்கள் பல்வேறு மன அழுத்தங்களுக்கு உள்ளாகி உள்ளார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். அந்த வகைளில் அவ்வாறான ஊடகவியலாளர்கள் இங்கு வருகை தந்துள்ளமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஊடகவியலாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை ஊடகத்துறை அமைச்சு மேற்கொள்ளவுள்ளது. சுமார் ஒரு லட்சம் ரூபா வரை ஊடகவியலாளர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கத் தீர்மானித்துள்ளது. அந்தக் கடனைப்பெற்றுக் கொள்ள ஊடாகவியலாளர் சங்கங்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

அத்துடன் வடக்கில் உள்ள உயர் பாது. காப்பு வலயங்கள் உடனடியாக அகற்றப் படமாட்டா. நாட்டின் தேசிய நலனைக் கருத்தில் கொண்டு படிப்படியாகவே அவை அகற்றப்படும் - என்றார். (ஒ- 9-86-236)


**வாகனம் விற்பனைக்கு**

52 -XXXX இலக்க இ.க.க. ரக டபிள் கப் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
பிரகாஷ் எலக்ரோணிக்ஸ்,
பருத்தித்துறை.
தொ.பே: 0773222837

**CHEMISTRY** S.Vasu
சேதன இரசாயனம்
ஆரம்பம்-31.07.2010
சனி- பி.ப.5 P.m
(சனி,ஞாயிறு பி.ப.5-6 P.m)
NAVALAR
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**VISAKA COLLEGE**
PHYSICS EXAM- PAPER
தமிழ் மொழி மூலம் (இன்று முதல் கிடைக்கும்)
BABY-NET(KONICA அருகில்)
பூபாலசிங்கம் புத்தகசாலை.
Translated: அன்னை புத்தகசாலை
By: K.SELVAN B.sc.(Hons)

பல மணவர்களின் வேண்டுதல்களுக்கு அமைய
யாழ் முன்னனி ஆசிரியர் தற்போது வலிகாமத்தில்
பொதுளியல் N.B A/L - 2011 தேர்ச்சி 02
சந்தையில் கேள்வி நிரம்பல் தொழிற்பாடு
ஆரம்பம்: 03.08.2010
செவ்வாய்க்கிழமை மாலை 5.00மணி
சஜீத் விஞ்ஞானக் கல்வி நிலையம் மானிப்பாய் வீதி, உடுவில்.

கருத்தரங்கு
இந்துநாகரிகம்
திரு.S.ஜெயக்குமார்
31.07.2010 சனி
01.08.2010 ஞாயிறு
9. 30 a.m
வெளி மாணவருக்கும் அனுமதி
யூனிவேர்சல்
இந்து மகளிர் கல்லூரி அருகே

**Projector & Laptop for Rent**





Call on
0773963282,
0112361003
Also available Screen, Sound System & Mic
Rs. 3500/- per day
MICRO PC SYSTEMS
வெள்ளவத்தை. Tel: 0773013043, கொட்டாஞ்சேனை. Tel: 0773963285, வவுனியா -Tel: 0773963284, நெல்லியடி -Tel: 0773039536, யாழ்ப்பாணம் -Tel: 0773126712. Email: mail@micropcsystems.com

**CLOSING DATE**
ON 31- 07 - 2010
கொழும்பு பல்கலைக்கழகத்தின்
BIT Registation
On or before
31-07-2010
@
Esoft Computer Studies
114, Navalar Road, Jaffna.
T: 021 222 4142, www.esoft.lk


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org